
1969
தமிழரசு
16-9-1973 40 காசு

# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# பார்த்தோம் படித்தோம்

### புதுப்பொலிவு !

'தமிழரசு', இப்பொழுது புதுப்பொலிவுடன் வெளிவருவது எனக்கு மன நிறைவைத் தருகிறது. அழகிய, தெளிவான அச்சு அமைப்புகளோடு புதிய புதிய தகவல்களையும் தெரிந்து கொள்ள அது வழிகாட்டியாக விளங்குவதைப் பாராட்டுகிறேன்.

—பொன். மறைமலை,
சென்னை-1.

### அச்சடிப்பு அருமை !

இப்பொழுது தமிழரசில் வெளிவரும் படங்கள் அனைத்தும் அருமையாக அச்சடிக்கப் பட்டுள்ளன. ஆனால் எங்கள் ஊருக்குத்தமிழரசு தாமதமாக வருவதைத் தவிர்க்கக் கூடாதா ?

—திரு. சிதம்பரநாதன்,
திருநெல்வேலி.

### ஒரு பொற்காலம் !

'தியாகத்தைப் போற்றிடுவோம்! தியாகிகளை மதித்திடுவோம்' என்று தமிழக முதல்வர் கலைஞர் ஆற்றியுள்ள விடுதலை நாள் உரை, கழக அரசின் ஆட்சிக் காலம், 'தியாகிகளுக்கு ஒரு பொற்காலம்' என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

—எஸ். சுப்பிரமணியம்,
தேவகோட்டை.

### புரட்சிக் கட்டுரை !

மீன் பிடி தொழிலைப் பற்றி மிக விளக்கமான கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். அமைச்சர்களின் கருத்துக்களும், 'நீலப்புரட்சிக்கு ஒரு தொலைநோக்குத் திட்டம்' என்ற கட்டுரையும் மிக்கப் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றன.

—பி. திருமலை, திருவள்ளூர்.

### சுற்றுலா போகவில்லையே !

சுற்றுலா சுந்தரம், சுற்றுலாக்கள் சென்று வருவதை நாங்கள் படிக்க முடியாமல்—பார்க்கமுடியாமல் முடித்து விட்டீர்களே ! விறுவிறுப்பான நல்ல கதை !

—டி. தெய்வசிகாமணி,
பெங்களூர்.

### காக்கை. பாடினியார் !

புலவர் பொன்னிவளவன் எழுதிய 'காகம்' கவிதையைப் படித்தேன். 20-ஆம் நூற்றாண்டின் காக்கை பாடினியார் என்று அவரை அழைக்கலாம் போல் தோன்றுகிறது!

—த. வில்லவன்,
வேலூர்.

### அச்சுக் கதை !

அச்சான நூல்களைப் பார்க்கிறோம்; படிக்கிறோம். ஆனால் அச்சின் கதையைத் தெரிந்து கொள்கிறோமா? இந்தக் குறையைப் போக்குகிறது 'எண்ணும் எழுத்தும் உருவாகும் விதம்' என்ற கட்டுரை.

—பொன். செந்தில்நாதன்,
தஞ்சாவூர்.

### சிறந்த கதை !

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய 'பொறுமைத் தீ' என்னும் சிறுகதை சிந்தைக்கு விருந்தூட்டும் சிறந்த சிறுகதையாய் விளங்குகிறது. இதுபோன்ற கதைகளை நிறைய வெளியிடவேண்டும்.

—ஆர். மதிவாணன், மதுரை.

### அழகான மின்சாரம் !

தமிழகத்தில் மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள அபார வளர்ச்சியை வரிசையாகக் கூறும் அழகான கட்டுரை திரு. வ.ச. அவர்கள் எழுதியுள்ள 'தமிழகத்தில் மின்வளர்ச்சி'.

—ம. சண்முகநாதன்,
மதுரை.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது முதுமொழி. அந்த எண்ணும் எழுத்தும் உருவாகும் விதத்தை—அச்சுத் துறையின் தோற்றம்—வளர்ச்சி ஆகியவற்றை, திரு. பி.வி.ஜி. யின் கட்டுரை அருமையாக விளக்குகிறது.

—சி. கனகசுந்தரம்,
வண்ணாரப்பேட்டை.

இமறன்

# சமதர்ம சமுதாயம் அமைவதற்கான

ஆயிரத்து ஐந்நூற்று முப்பத்து இரண்டு கோடி ரூபாய்க்கான வரைவு ஐந்தாவது திட்டத்தை, இந்திய திட்டக் குழுவிடம் தமிழ்நாடு அளித்துள்ளது. இத்திட்டத்தின் இலட்சியம், தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கத்தையும், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள தொலைநோக்குத் திட்டத்தின் வரைவுத் திட்ட அமைப்பையும் பின்பற்றியுள்ளது.

எங்களால் தயாரிக்கப்பட்டுள்ள 1,532 கோடி ரூபாய்த் திட்டம், நமது வளர்ச்சியின் இலட்சியத்தை எய்திடுவதற்குக் குறைந்தபட்சத் தேவையாக உள்ளது. மாநிலத்திட்டத்தின் அளவு, மாநிலத்தின் மொத்த வருவாய் ஆதாரங்கள் மற்றும் மைய அரசின் உதவி ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுடுள்ளது. மாநிலத்தின் வருவாய் ஆதாரங்களை முடிவு செய்வதற்கு, நிதிக்குழுவின் பரிந்துரைகள் மிகவும் முக்கியமானதாகும். மாநிலத்தின் வருவாய் ஆதாரங்களில் ஒரு பகுதி வெளிப்படை அங்காடிகளிலிருந்து அரசு ஏற்றுக் கொள்ளும் கடன் மூலமாகவும் வணிக வங்கிகளிலிருந்து கடன் வாங்குதல் மூலமாகவும்கிடைக்கிறது. இவைகளின் தொடர்பாக சில முக்கியமான கருத்துக்களை இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். இவைகள் முடிவெடுக்கப்பட்டாலன்றி, திட்டத்தின் அளவை முடிவு செய்வதென்பது முடியாததாகும்.

மாநிலத் திட்டத்தின் அளவை விட, மைய அரசுத் துறைத் திட்டங்கள் பற்றிய கேள்வியே மிகவும் முக்கியமானதாகும். வேளாண்மை, கல்வி, நல்வாழ்வு, சமூகநலம் ஆகிய துறைகளில் மைய அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத் திட்டத்திற்கு உட்படாமல், மைய அரசின் அமைச்சகங்களே நேரடியாகப் பெரு முதலீடு செய்வதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இம்முறையில் முதலீடு செய்யும் ஆதாரங்களை நேரடியாக மாநிலத் திட்டத்திற்கே கொண்டு வருதல் மிகவும் பயனுடையதாக இருக்கும்.



மைய அரசுத் துறையில் உள்ள தொழில், பாதுகாப்பு மற்றும் இதர திட்டங்களை எடுத்துக் கொண்டாலும், இத்திட்டங்களுக்காகத் தமிழ் நாட்டிற்குக் கிடைத்து வரும் பங்கு அண்மைக் காலத்தில் குறைந்து வருகிறது. நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று நாங்கள் பொறுப்புணர்ச்சியுடன் வற்புறுத்துகின்றோம். இத்தகைய முக்கிய திட்டங்கள் சிலவற்றைத் திட்டக் குறிப்பில் கூறியுள்ளோம். இவைகளின் தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகின்றோம்.

வேலை வாய்ப்பு அளிப்பதே ஐந்தாவது திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று தமிழ்நாடு நம்புகிறது. சாலைகள், வீட்டு வசதிகள், குடிநீர் வழங்குதல் போன்ற இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் சமூகத்திற்குக் கிடைத்திடச் செய்யவல்ல, மாபெரும் வேலை வாய்ப்பு நல்கும் திட்டங்களை நம்முடைய மேம்பாட்டு முயற்சிகளில் இணைக்க வேண்டும்.

இல்லாமை என்பது இல்லாமற் செய்வதற்குத் தமிழ்நாடு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்காகப் பல்வேறு திட்டங்களை குடிசை மாற்றுத் திட்டம், கிராமங்களில் வீடு கட்டிக் கொள்ள இடமில்லாமல் இருந்தவர்களுக்கு 4·23 இலட்சம் மனைப்பட்டா வழங்கியுள்ளது. சாகுபடி செய்யும் குத்தகைகாரர்களுக்கு நில உரிமை வழங்கியது. 6.41 இலட்சம் ஏக்கர் நிலத்தை 3·29 இலட்சம் ஏழை நிலமற்றவர்களுக்கு வழங்கியது போன்ற மாபெரும் திட்டங்களை முதன் முதலாகத் தமிழ்நாடு நிறைவேற்றி வருகிறது. இத்தகைய மேம்பாட்டில் மேலும் விரைவான முன்னேற்றத்தை ஐந்தாவது திட்டம் ஏற்படுத்தும்.

திட்டத்தையும் அதன் கூறுகளையும் வெறும் கட்டுகோப்பு திட்டங்களாகவும், அரசுத் துறைத் திட்டங்களாகவும் கருதக்கூடாது. சமுதாயத்தைச் சமதர்ம (சோசியலிச) அமைப்பில் புதுப்பிக்கும் இயக்கத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டும். பொது மக்களின் நல்வாழ்வுக்கு அதிக அளவில் உறுதுணையாக நிற்கக் கூடிய விரைவான பொருளாதார வளர்ச்சி சமதர்மச் சமுதாயத்தில் மட்டுமே ஏற்படக்கூடும் என்று தமிழ்நாடு நம்புகிறது. பொருளாதாரம் மற்றும் சமுதாய உறவு பற்றிய இக்கொள்கையை மனதில் கொள்ளாவிட்டால், பொருளாதார வளர்ச்சியின் இலட்சியம் கானல் நீரை நீரென நம்பி (தவறான தோற்றத்தைக் கண்டு) ஏமாறுவதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.



# ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம்

பொருளாதாரத்தையும் சமுதாய அமைப்பையும் திருத்தி அமைக்கக்கூடிய நன்கு அமைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே சமதர்மச் சமுதாயம் தோன்ற வேண்டும் என்பதைத் தமிழ்நாடு நினைவிற்கொண்டுள்ளது. இத்தகைய ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படாவிட்டால், சமதர்மச் சமுதாயம் மலருவதற்கு ஏற்ற நிலைமைகள் உருவாகுவதற்குள் சமதர்மப் பணிகள் மேற்கொள்ளப்படுமானால் பொருளாதாரம் குன்றும்; சமுதாய நல இலட்சியம் சீர்குலையும்.

சமதர்மம் உருவாவதற்கு, கலப்பு பொருளாதாரத்திற்கு உட்பட்டு நீண்ட காலம் செயலாற்ற வேண்டும் என்பதைத் தமிழ்நாடு உணர்கிறது. பொருளாதாரத்தில் தனியார் துறையும் முக்கிய அங்கம் வகிப்பது போன்ற நம்முடைய கலப்புப் பொருளாதாரம், விலை, கடன் உரிமம், வழங்குவது உட்பட எப்படிச் செயல்பட வேண்டும் என்று கூறும் அதிகாரம் போன்ற உடன்பாட்டின்படி செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தினைத் தமிழ் நாடு கொண்டுள்ளது. அரசுத் துறையும், தனியார் துறையும் இணைந்த உறவுடன் கூடிய கலப்புப் பொருளாதாரத்தில் ஏதேனும் ஒரு வழிகாட்டும் முறையை மட்டும் நம்பியிருப்பது தோல்வியையே ஏற்படுத்தும். பொருளாதாரம் செழிப்பதற்கான நெம்புகோல்களை இயக்கிட அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் போதுமான அளவுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்பதிலும் தமிழ்நாடு நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்தியா மிகவும் பெரியது. இந்தியப் பொருளாதாரம் ஒரே இடத்திலிருந்து அதிகாரத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் சிக்கல் நிறைந்தது. குறிப்பிற்கிணங்க செயல்படுதல், மாற்றத்தின் தேவை ஆகிய கொள்கையின் அடிப்படையில், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் இடங்கள் தற்பொழுது உள்ளதை



முதல்வர் கலைஞர்

விட பரவலாக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு எண்ணுகிறது. சரியான முறையில் செயல்படுத்துவது, திட்டமிடுவதைப் போலவே முக்கியமானது. இவ்வகையிலும் முடிவெடுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை வலிவு பெறுகிறது. எனவே, நாட்டின் பொருளாதாரத்தை நிருவாகிக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்ற கருத்து பலம் பெற்று வருவதுடன் விரைவாகச் செயல்பட வேண்டிய ஒன்றாகவும் உள்ளது.

விலைவாசி உயர்வும், உற்பத்திக் குறைவும் நமது பொருளாதாரத்தில் நெடுங்காலமாகத் தொடர்ந்து நிலவிவரும் குறைபாடுகளாகும். ஒரு வழியில் பண முதலீடு, கடன் ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலும், மறுவழியில் உற்பத்தி, வழங்குதல் ஆகியவற்றில் நெருக்கடி ஏற்படுத்தக் கூடிய உரிமம் வழங்குதல் மற்றும் இறக்குமதி கொள்கைகளின் அடிப்படையிலும், விலைவாசி நிலைமை, நிர்ணயிக்கப்படுகிறது. அடிக்கடி மாநில அரசு, விளைவுகளை ஏதும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பாவிப் பார்வையாளராக இருந்து வருவதுடன், மாநில அரசிற்குத் தெரியாமலும், ஒப்புதல் பெறாமலும், அனைத்திந்திய மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளினால் பாதிக்கப்படுவதாகவும் இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், பருத்தி, 'குருட்' ஆயில், இரசாயன உரம், பூச்சி மருந்துகள் ஆகிய முக்கிய தேவைப் பொருள்களை வாங்குவதில் மைய அரசு மட்டத்தில் தாமதமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக உற்பத்தியிலும், அதன் விலைகளிலும் தவிர்க்க முடியாத நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது. மேலும், தூத்துக்குடியில் இரசாயன உரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்குவதில் சற்றேறக்குறைய 2 ஆண்டுக் காலத் தாமதமே, முக்கிய பொருளாக விளங்கும் இரசாயன உரத்தின் தொடர்ந்து பற்றாக்குறை நிலைமையை உருவாக்கியுள்ளது. இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் தொழில் துறையிலும், மின்விசை உற்பத்தியிலும் ஏராளமாக உள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்பே அனுமதி வழங்கப்பட்டிருக்க வேண்டிய சில மின்விசைத் திட்டங்கள், இன்னும் மைய

அரசின் முடிவுக்காகக் காத்திருக்கின்றன. இவைகளைப் பற்றி உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக் கொள்கிறது. இந்தக் காலதாமதங்கள், குறிப்பாக முடிவு எடுக்கும் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டியதின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன.

அண்மைக் காலத்தில், விலைவாசியே வளர்ச்சியைப் பற்றி முடிவு செய்யும் காரணியாக ஆகியுள்ளது. பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைப் பயமுறுத்துவதாக உள்ளது. இதனால் திட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் குறைந்த அளவில் அணுக வேண்டியுள்ளது. இது, விரைவிலோ அல்லது நாளடைவிலோ பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு என்னும் கெடுதியான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் அச் சூழ்நிலை, திட்டத்தின் வேகத்தை மேலும் குறைத்திடும். நாம் விலைவாசி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வராவிட்டால், வளர்ச்சியின் இலட்சியத்தை நாம் அடைந்திட முடியாது. விலை, கூலி, இலாபம், வரிகள் போன்ற பிரச்சினைகளில் ஒருங்கிணைந்த தேசிய முறையில் அணுகுவதற்கும், அவைகளை நிறைவேற்றுவதற்கும் இதுவே—எப்பொழுதையும் காட்டிலும் நல்ல தருணம் என்று தமிழ்நாடு நம்புகிறது.

நாட்டின் இன்றியமையாத பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான தேவைப் பொருள்கள் (inputs) இறக்குமதி யாவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். மின்விசை, இரசாயன உரம், பூச்சி மருந்துகள், எரிபொருள் (Fuel) போன்ற இன்றியமையாத பொருள்களைப் பெருமளவில் கிடைத்திடச் செய்யும் முக்கிய திட்டங்களுக்கு உடனடியாக அனுமதியளிக்க வேண்டும். முதலீடு மற்றும் உரிமம் வழங்கும் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதனால் நாட்டில் நுகர்வுப் பொருள்கள் பெருமளவில் கிடைத்திடச் செய்ய முடிவதுடன், நிலையான விலைவாசி நிலைமை நிலைபெறுவதற்கு உதவிட முடியும்.




பெரும்பாலான மக்களால் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலையின் மேல் விதிக்கப்படும் இடை நிகழ் செலவுகளைக் குறைத்தல், சேமிப்பவர்களுக்கு அதிக சலுகைகள் அளித்தல் மற்றும் உற்பத்திப் பயன் தரும் தொழில்களில் முதலீடு செய்தல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் வரி விதிக்கும் முறையினை மாற்றி அமைக்க வேண்டும். பெரு மதிப்புள்ள பணநோட்டுகளைச் செல்லுபடியாகாமல் செய்யும் துணிகர கொள்கைகளின் மூலம் கணக்கில் கொண்டு வராத கறுப்புப் பணத்தின் கொடுமைகளைப் போக்க வேண்டும்; அதே நேரத்தில் வரிவிதிக்கும் அமைப்புகளை, மாநில அரசுடன் கலந்தறிந்து மாற்றி அமைக்க வேண்டும்.

திட்டம் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை முடிவு செய்வதற்குத் தேசியப் பொருளாதார முக்கியத்துவமுள்ளவைகளில் விவாதத்தின் அடிப்படையில் உடனடி முடிவு எடுத்தல் இன்றியமையாததாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாவிட்டால், திட்டம் பற்றி இறுதியான முடிவெடுப்பதில் பெரும்பயன் கிட்டாது. இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் உரிமை மாநில அரசுகளுக்கு உண்டு. மாநில அரசுகள் பங்கு கொள்ளும் தேசிய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து, அதில் முதலமைச்சர்களின் முன்னிலையில் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய உண்மை விவரங்களை வைக்க வேண்டும். தற்பொழுதுள்ள இக்கட்டான நிலைமையைத் தவிர்த்துச் சீராகக் கொண்டு செல்வதற்குக் கான பல்வேறு மாற்றுத் திட்டங்கள் பற்றிய கருத்துகளை முதலமைச்சர்களிடமிருந்து அறிய வேண்டும். அதன் பிறகே, ஐந்தாவது திட்டத்தின் அமைப்பு மற்றும் அளவு பற்றிய இறுதி முடிவு எடுக்க இயலும்!



(இந்திய அரசின் திட்டக்குழுவிடம் கொடுத்துள்ள தமிழ்நாட்டிற்கான ஐந்தாவது திட்டக் குறிப்பில் உள்ள முன்னுரையின் தமிழாக்கம்).

# தமிழ்நாட்டின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு கண்ணோட்டம்



| | நான்காவது திட்ட காலத்தில் எதிர்பார்க்கும் செலவு. (1) | வரைவு ஐந்தாவது திட்ட மதிப்பீடு. (2) | 1974–75-ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டுத் திட்டம். (3) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| 1. வேளாண்மை மற்றும் தொடர்புடைய திட்டங்கள் (சிறியநீர்ப்பாசனம் நீங்கலாக). .. | 57·74 | 108·09 | 19·83 |
| 2. கூட்டுறவு .. .. .. | 8·14 | 19·23 | 3·16 |
| 3. சமுதாய/கிராம வளர்ச்சி .. .. | 10·04 | 64·77 | 5·80 |
| 4. நீர்ப்பாசனம்—சிறிய நீர்ப்பாசனம் உள்பட .. | 65·36 | 188·02 | 20·92 |
| 5. மின்விசை .. .. .. | 197·25 | 446·20 | 50·53 |
| 6. தொழில் .. .. .. | 37·12 | 107·09 | 12·23 |
| 7. சாலைகள் .. .. .. | 22·69 | 101·18 | 11·00 |
| 8. இதர போக்குவரத்து வசதிகள் .. | 8·06 | 25·21 | 3·57 |
| 9. கல்வி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் கலாச்சார திட்டங்கள். .. | 48·70 | 116·82 | 13·60 |
| 10. நல்வாழ்வு, குடும்பநலத்திட்டம் .. | 15·33 | 60·58 | 7·11 |
| 11. குடிநீர் வழங்கல், துப்புரவு .. | 32·29 | 108·87 | 20·00 |
| 12. ஊட்ட உணவு .. .. | 0·54 | 21·00 | 2·50 |
| 13. பிற்பட்ட இனத்தவர்களின் நல்வாழ்வு .. | 19·19 | 23·99 | 3·41 |
| 14. மற்றவை .. .. | 35·14 | 140·83 | 28·19 |
| மொத்தம் .. | 557·59 | 1,531·88 | 201·95 |

பிற்பட்ட இனத்தவர்களின் நல்வாழ்விற்காக நான்காவது திட்ட காலத்தில் 53·68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, ஐந்தாவது திட்ட காலத்தில் திட்டம் மற்றும் திட்டம் கீழ் அல்லாத பணிகளின் கீழ் மொத்தம் 91·56கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







# சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்

"செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் இம்மாதம் 21-ஆம் நாள் வழங்கப்பட இருக்கும் சைக்கிள் ரிக்ஷாக்களையும் சேர்த்து சுமார் 900 பேருக்கு வழங்கப்பட்டு இத்திட்டம் முடிவுறுகிறது. இத்திட்டம் முடிவுற ஆகும் செலவில் மொத்த மதிப்பீடு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும்".

"மொத்தம் வசூலான தொகை சுமார் 25 லட்சம் ரூபாய் இதில் மீதி சுமார் 13 லட்சம் ரூபாய் இருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் மேலும் சுமார் 1500 பேருக்கு சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும்".

"ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் ஆயிரம் நாட்களில் திருப்பிச் செலுத்தி உரிமை கொள்ளலாம்".

"கைரிக்ஷாக்களை அகற்றிய நேரத்தில் அந்தத் தொழிலாளிகளுக்கு அன்றுடப்படி வழங்கிய வகையில் 50 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது.

"தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் திட்டமாக வெளியிடப்படுகிறது. அதன் மூலமாக 1500 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்".

—முதல்வர் டாக்டர் கலைஞர்

(சென்னை மாநகராட்சி சார்பில் சைக்கிள் ரிக்ஷா வழங்கிய விழாவில்)

# தூத்துக்குடி அனல் மின் திட்டம்



மின் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. மின் சக்தியைப் பயன்படுத்தும் பயனீட்டாளர்கள் தமிழ் நாட்டில்தான் அதிகம். வேளாண்மைக்கு மின் சக்தியைப் பயன்படுத்துதலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்னணியில் உள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமான எதிர் காலம் சமைத்திட, மின் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாகும். எல்லா வளர்ச்சிக்கும் மின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. தொழில் வளம் பெருக, வேளாண்மை சிறக்க, வளம் கொழிக்க, வாழ்வு மலர மின் திட்டங்கள் பயனுள்ள உறுதுணையாக அமைந்துள்ளன.

மின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் பல மின் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவே மின்சாரம் ஆகிவிட்டபடியால், வளர்ந்துவரும் தேவையைச் சமாளிக்க, பல புதிய மின் திட்டங்களை மின் வாரியம் செயல்படுத்த முனைந்துள்ளது.

தமிழகத்தின் நீர் ஆதாரங்களை அநேகமாக முழுமையான அளவுக்குப் பயன்படுத்தியாகி விட்டது. அத்துடன் நீர் மின் திட்டங்களையே நம்பியிருப்பதற்கில்லை. பருவமழை பொய்த்துப்போய் விட்டால் பயங்கரமான நெருக்கடி நிலை உருவாகி விடுவதை அண்மையில் கண்டோம். நீர் மின் திட்டங்களோடு, அனல் மின் திட்டங்களையும் அணு மின் திட்டங்களையும் உருவாக்கிச் செயல்படுத்தினால் தான், வளர்ந்து கொண்டே போகும் மின் தேவையை ஓரளவுக்காவது சமாளிக்க முடியும்.

இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், தூத்துக்குடி அனல் மின் திட்டத்தினை (Tuticorin Thermal Project) செயல்படுத்தத் தமிழ்நாடு மின் வாரியம் உத்தேசித்துள்ளது. சென்னைக்கு 600 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடியில் இந்த அனல் மின் நிலையம் அமையும்.

முதற்கட்டமாக ஒவ்வொன்றும் 200 மெகவாட் நிறுவனத் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் நிறுவப்படும். பின்னால், 1,500 லிருந்து 2,000 மெகவாட் திறனுக்கு மின் நிலையமானது விரிவாக்கப்படும்.

தமிழகத்தின் இன்றைய மின்சாரத்தேவை சுமார் 1,325 மிலியன் யூனிட்டுகளாகும். இந்தத் தேவையின் அளவானது 1978–79-ல் 3,500 மிலியன் யூனிட்டுகளாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து கொண்டே போகும் இந்தத் தேவையைச் சமாளிக்க செயல்படுத்தப்பட விருக்கும் பல புதிய மின் திட்டங்களில் முக்கியமான திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டமாகும்.

அனல் மின் நிலையம் அமைக்க தூத்துக்குடி மிகவும் பொருத்தமான இடமாக அமைந்துள்ளது. தூத்துக்குடியில் துறைமுகம் கட்டப்பட்டு வருவதினால் வங்காளத்திலிருந்து மின் நிலையத்திற்குத் தேவையான கரியினைக் கடல் மூலமாகத் தூத்துக்குடிக்கு கொண்டு வருவது சுலபமானது. வங்காளம்—பீகார்ப் பகுதிகளில்தான் கரி கிடைக்கிறது. ரயில் வண்டிகள் மூலமாகக் கரியைக் கொண்டு வருதல் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. ரயில் வேகன்கள் கிடைப்பதில்லை; போதுமான ரயில் வசதிகளும் கிடையாது. ஆகவே கடல் மூலமாகத்தான் கரியைக் கொண்டு வர வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அனல் மின் நிலையங்கள் அமைப்பதென்றால், அவை கடற்கரை ஓரங்களில் தான் அமைக்கப்பட வேண்டும். அதனால் ரயில் மூலமாகக் கரி கொண்டு வருதல் தவிர்க்கப்படும் என்பதினால், பெரிய அனல் மின் நிலையங்கள் கடற்கரை ஓரங்களில் அமைய வேண்டும் என்பது இந்திய அரசின் கொள்கையாகும். தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில் இப்பொழுது பெரிய மின் உற்பத்தி நிலையம் ஒன்றுமில்லை. அத்துடன், 'ஸ்பிக்' (Spic), ஹெவி வாட்டர் பிளாண்ட், தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், இரசாயனப் பொருள்கள் மற்றும் சிமெண்ட் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமையப் பெறுவதினால், இந்தப் பகுதியில் தொழில் வளம் பெருகத் தொடங்கியுள்ளது. ஆகவே இந்தப் பகுதியில் பெரிய அளவிலான ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைவது இன்றியமையாத ஒன்றாகும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் 1974-ல் செயல்படத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறைமுகத்தின் முக்கியப் போக்குவரத்துப் பொருள் கரியாகத்தான் இருக்கும். 400 மெகவாட் நிறுவனத் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 1·2 மிலியன் டன் கரி தேவைப்படும். இதற்கென்று இந்தத் துறைமுகத்தில் தனியாக ஒரு கரித்தளம் (Coal berth) அமைக்கப்படும். கப்பலிலிருந்து கரி இறக்கப்பட்டு, கன்வேயர்கள் மூலமாக நேரடியாக மின் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

வங்காளத்திலிருந்து கடல் மார்க்கமாகத் தூத்துக்குடிக்கு, அதிகச் செலவில்லாமல் கரியினைக் கொண்டு வர முடியுமாகையால், கரியினால் இயங்கக்கூடிய ஓர் ஆயிரம் மெகவாட் திறனளவு கொண்ட அனல் மின் நிலையம் அமையத் தூத்துக்குடியே ஏற்ற இடமாக இருக்கும். தமிழ்நாடு மின் வாரியம் இந்தக் காரணங்களை ஒட்டியே தூத்துக்குடியைத் தேர்ந்தெடுத்துள்ளது. அது மட்டுமல்ல; எதிர்காலத்தில் இலங்கை மின் இணைப்புடன் மின் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள, இந்த நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடல் மூலமாகக் கரியினைக் கொண்டு வருதல், இன்று அதிகச்செலவு ஆகும் பிரச்சினையாக உள்ளது. சிறு அளவு கொள்ளளவு கொண்ட கப்பல்கள்தான் கல்கத்தாத் துறைமுகத்தினுள் நுழைய முடிகிறது. ஆட்கள் மூலமாக இந்தப் பணி செய்யப்பட வேண்டியுள்ளதால், இதற்காகும் செலவும் அதிகமாகிறது. கல்கத்தா அருகே உருவாகி வரும் ஹால்டியா துறைமுகம் பெரிய கப்பல்கள் உள்ளே வரக் கூடிய நிலையில் இருக்கும். தூத்துக்குடி துறைமுகத்திலும் அதே அளவு பெரிய கப்பல்கள் உள்ளே வரக்கூடியதாக இருக்கும். ஆட்கள் மூலமாக அல்லாமல் மணிக்கு 1,000 லிருந்து 2,000 டன்கள் வரை கையாள்கின்ற அளவில் இயந்திரங்களே கரியினைக் கையாள்கின்ற அமைப்பு முறை இந்த இரு துறைமுகங்களிலும் அமைக்கப்படும். இதனால் கப்பல்கள் துறைமுகங்களில் கரியினை ஏற்றவும் இறக்கவும் காத்துக்கிடக்கின்ற நேரமானது வெகுவாகக் குறைக்கப்பட்டு, போக்குவரத்துச் செலவில் இப்பொழுதுள்ள செலவு அளவில் மூன்றில் ஒரு பங்கு குறைந்துவிடும்.

அது மட்டுமல்ல; வங்காளம்—பீகாரிலிருந்து தரமான கரி கிடைக்கிறது; கடல் மூலமாக அதைக் கொண்டு வரும் செலவும் குறைகிறது. இதன் விளைவாக, அமையவிருக்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 7·25 பைசாதான் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கரேணிக் கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படும் மட்டமான கரியினைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் செலவும் ஏறக்குறைய இதேதான்.

தூத்துக்குடியில் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக ஏன் ஓர் அணு மின் நிலையம் ஏற்படுத்தக் கூடாது என்ற கேள்வி எழும்புவது இயற்கையே. கல்பாக்கம் அணு மின் நிலையமே 1977—78-ஆம் ஆண்டில்தான் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரிசையில் நான்காவதான அடுத்த அணு மின் நிலையம் உத்தரப் பிரதேசத்தில் அமைய உள்ளது. தெற்கே அடுத்து அமையப்போகும் அணு மின் நிலையமானது ஒரு மாநிலத்திற்கென்றில்லாமல் தென்னகம் முழுமைக்குமான மின்சக்தித் தேவையைச் சமாளிக்க வேண்டும் என்ற கருத்தினை அணுசக்தி ஆணைக் குழுவும் மத்திய அரசும் கொண்டுள்ளன. இந்த அணு மின் நிலையத்தை நிறுவுவதற்காகப் பல்வேறு இடங்களை அவர்கள் முன்பே ஆய்ந்து வருகின்றனர். ஆகவே, அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக அணு மின் நிலையத்தை அமைக்கலாம் என்ற கருத்து அவ்வளவு சரியானதல்ல. இன்னும் சொல்லப்போனால், வளர்ந்து வரும் மின் தேவையைச் சமாளிக்க அனல் மின் நிலையம், அணு மின் நிலையம் ஆகிய இரண்டு நிலையங்களுமே மிகவும் தேவைப்படுகின்றன. முன்பே சொல்லியுள்ளபடி, 1978—79 வாக்கில் தமிழகத்தின் மின் தேவை 3,500 மிலியன் யூனிட்டுகள் என்ற அளவில் பெருகி இருக்கும். கிடைக்கின்ற மின் உற்பத்தியின் அளவோ அதைவிடக் குறைவாக இருக்கும். ஆகவே, இரண்டாவது அணு மின் நிலையம் தமிழகத்தில் அமைவது என்றென்றும் தேவைப்படுகின்ற ஒன்றாகும்.



தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 73 கோடியாகும். மின் நிலையம் செயல்படத் தொடங்கி மூன்றாவது ஆண்டில் 12·1 சதவிகித அளவுக்கு ஆதாயம் திரும்பக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது இப்பொழுதுள்ள தமிழக மின் இணைப்புடன் தொடர்புபடுத்தப்படும். இந்த நிலையத்திற்கான மத்திய அரசின் அனுமதி இன்னும் வரவில்லை. விரைவில் இதற்கான அனுமதி கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனல் மின் நிலையம் சம்பந்தமான தொடக்கப் பணிகள் முன்பே தொடங்கப்பட்டுவிட்டன. முதல் 200 மெகவாட் பிரிவு 1977—78-லும், இரண்டாவது பிரிவு 1978—79-லும் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுந்த நேரங்களில், மேலும் கூடுதலான உற்பத்திப் பிரிவுகளுக்கான திட்டங்கள் தீட்டப்படும்.

தமிழகத்தின் மின் வளர்ச்சியில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஒரு மைல் கல்லாக அமையும் என்பது உறுதி.

—வ. ச.



# தமிழ்நாடு வாரி வழங்கிடும் வற்ருத செல்வங்கள்



**இன்றே வாங்குங்கள்**

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

**முதல் பரிசு:**

# ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**60-வது குலுக்கல் நாள்: 12-10-1973**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**




*கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;*
*இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2*
*விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,*
*மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.*

# இன்று வயது 105!




வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற காஞ்சி, கலை எழில் மிக்கதாய் விளங்கியதை நாமறிவோம்; நம்மைச் சுற்றியுள்ள உலகமும் அதனை நன்கறியும்!

இலக்கிய வரிகளிலே இன்றளவும் இடம் பெற்றுத் திகழும் காஞ்சி மாநகர் இன்று படிப்படியாய்ப் பல்வளமும் பல நலமும் பெற்று விளங்கி வருகிறது. இதற்கு அருந்துணையாய் நின்று பெரும் பணியாற்றி வருகிறது காஞ்சி நகராட்சி!

வாழ்க்கையையும், தேவையையும் இரட்டைக் குழந்தைகள் எனலாம். வாழ்க்கையோடு முடியாத் தொடர் கதையாய் வருவதுதானே தேவையும்? அன்றாடத் தேவைகளில் மிக முக்கியமானது தண்ணீர். இன்னும் கல்வி, சுகாதாரம், சாலை போன்ற பல பிரச்சினைகள்—தேவைகள் நிறைய உள்ளன. இவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்கும் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்றன நகராட்சிகள். இந்த நற்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் காஞ்சி நகராட்சியின் கதை மட்டுமல்ல, கடும் உழைப்பினையும் நாம் தெரிந்து கொள்வோம்.

பாலாற்று வளம்பெற்று வேகவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ள காஞ்சி, சென்னையின் தென்மேற்கில் 72 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காஞ்சிமாநகர் முதல்நிலை நகராட்சியாக விளங்கி வருகிறது.

காஞ்சி நகராட்சியின் தொடக்கம் இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. அது தோன்றி இன்றைக்கு 105 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்றால் அதன் பழமை நன்கு விளங்கும்.

நகரமைப்புத் திட்டங்கள் மூலமே ஒரு நகரம் ஏற்றமும் தோற்றமும் பெற்றிட முடியும் என்பதற்குக் காஞ்சி ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது.

''காஞ்சிபுரத்தின் நகரமைப்புகளுக்கு இணையான ஒன்று உலகில் வேறெந்த நகரத்திலும் இல்லை'' என்று மேனாட்டு நகரமைப்பு வல்லுநர் கெட்டின் என்பவர், 1915-ல் காஞ்சி மாநகரைச் சுற்றிப் பார்த்துப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

காஞ்சி, தொழில் வளம் மிக்கது என்பதை நாமறிவோம். காஞ்சிப் பட்டு கவர்ச்சிப் பட்டு என்பது உலகம் உணர்ந்த உண்மையாகும்.

இங்கே பட்டுத் தொழிலும், பருத்தி நெசவுத் தொழிலும் குடிசைத் தொழில்களாகவே வளர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். பட்டு நெசவுத் தொழில் பாங்காய் வளர்வதற்கு ஏற்ற வகையில்

தமிழக அரசு, இந்நகர எல்லைக்குச் சற்றுத் தொலைவில் சரிகை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலை வேலை செய்யத் தொடங்கினால், சரிகைக்காகப் பிற மாநிலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லாமல் போய்விடும்.

இவை தவிர, ஓரிக்கை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள தொழிற்பேட்டையும், காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையும், பிற தொழிற்கூடங்களும் காஞ்சிக்கு வளமூட்டுகின்றன.

''ஒரு சர்க்கார் அலுவலகம் எங்கிருந்தால் என்ன, எங்கே மாற்றப்பட்டால் என்ன என்றில்லாமல் நாட்டு மக்கள் அக்கறை காட்டுவது—நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுகிறது என்பதற்கு அரிய எடுத்துக்காட்டு'' என்ற அவர், நகைச்சுவையாக இப்படிக் குறிப்பிட்டார்:

''சிங்காரச் சென்னையிலிருந்து கடற்கரைக் காற்று வீசும் சென்னையிலிருந்து பதிவு பெரு ஊழியர்களைக் கதகதப்பான இந்த இடத்திற்கு மாற்றியது பற்றிச் சிலர் கவலைப்படலாம்.

சீரும் சிறப்புமிக்க இந்த மாவட்டம் உருவாகிய கதை வரலாற்றில் சுவையான பகுதியாக மிளிர்கிறது.

1760-ஆம் ஆண்டில் ஆர்க்காடு நவாபிடமிருந்து ஆங்கிலேயர்கள் இதனை அன்பளிப்பாகப் பெற்றனர் என்றாலும், 1801-ல் தான் அவர்கள் நேரடி நிர்வாகத்தைத் தொடங்கினார்கள். 1860-ல் சென்னை, செங்கற்பட்டு இரண்டையும் இணைத்துச் 'சென்னை மாவட்டம்' என்று பெயரிட்டனர். 1870-ல் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தனியாக ஆக்கினர். தற்போது

# காஞ்சித் தலைநகர் தொடக்க விழாவில்



காஞ்சி மாநகர் செங்கை மாவட்டத்தின் தலைநகரானது, தமிழ்த்தாயின் தலைமகனும் அறிஞர் அண்ணா அவர்களின் அரிய முயற்சியினாலன்றோ? இத் திருத்தல நகரிலே வேகவதி ஆற்றின் தென்பால் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகமும். மாவட்டக் காவல் துறையினர் அலுவலகமும் நகருக்கு எழிலூட்டி நிற்கின்றன.

சென்னையிலிருந்தே செயல்பட்டுவந்த செங்கற்பட்டு மாவட்ட அலுவலகங்கள் 1968 ஜூலைத்திங்கள் முதல் நாளிலிருந்து காஞ்சிக்கு மாற்றப்பட்டன. இதையொட்டி, காஞ்சித் தலைநகர் விழா ஜூலைத்திங்கள் ஆறும்நாள் காஞ்சியில் மிகச்சிறப்பாக நடந்தது, விழாவுக்கு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

கடற்கரைக் காற்று இங்கு இல்லை. ஒருபுறம் வேகவதியும் மறுபுறம் பாலாறும் இருக்கின்றன, அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால் சென்னையைவிடக் குளிர்ந்த காற்றை இங்கே அனுபவிக்கலாம்!

''சென்னைக் கடற்கரைக் காற்றை மன்னர்கள் உண்டதில்லை. வேகவதி—பாலாற்றின் காற்றை மன்னர்கள் உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறோம்!''

1969-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 12-ஆம் நாள், புதிய தலைமையகக் கட்டடம் முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றது.

செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 102 வயதாகிறது!

'கேடில் விழுச் செல்வம் கல்வி' யன்றோ? இந்தச் செல்வத்தை வாரி வழங்கிட வள்ளல் பச்சையப்பர் கல்லூரியும், மகளிர் கல்லூரியும், பொன்னேரிக் கரையில் தொழிற்பயிற்சிக் கல்லூரியும், இங்கே கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றன. நகராட்சியின் சார்பில் நடத்தப்பெறும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும், 25 ஆரம்பப் பள்ளிகளும் மற்றும் தனியார் பள்ளிகளும் இங்கே நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்களை உருவாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளன.

நகர மன்றப் பள்ளிகளில் இலவசப் பகல் உணவுத் திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூ. 15 ஆயிரம் நன்கொடை வழங்குகிறது

இந்நகராட்சி. அண்மையில் காஞ்சிபுரம் நகராட்சிப் பள்ளிக்கான இரு வகுப்பறைகள் அரசினர் உதவித் தொகையுடன், சிரணித் தொண்டர்களால் கட்டி முடிக்கப் பெற்றது பாராட்டத் தக்கதாகும்.



நீர் வளமிக்கது காஞ்சி என்பதைப் பாலாறு பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. இந்நகருக்குப் பெரும்பாலான தண்ணீர் பாலாற்றிலிருந்தே எடுக்கப்படுகிறது. தற்போது இங்கு அமைக்கப்பட்டுள்ள மொத்தக் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை 5,976. பொதுக் குழாய்களின் எண்ணிக்கை 592.



நகராட்சியின் சார்பில் வடிகால் திட்டமொன்று மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. சுமார் 105 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டத்தின்கீழ், கழிவு நீர்ப்பண்ணை ஏற்படுத்தும் திட்டமொன்றும் உள்ளது.



நல்வாழ்வுக்கு வழிகோலும் 3 மருத்துவ மனைகளும், 7 தாய் சேய் நலவிடுதிகளும், 1 குடும்ப நல நிலையமும் இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன. காஞ்சியில் ஆண்டுதோறும் நடக்கும் ஏகாம்பரநாதர், வரதராசப் பெருமாள் கோயில்களின் திருவிழாக்களின்போது பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருமளவில் வருவர். அந்தச் சமயங்களில் நகராட்சி, சுகாதார ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றது.

வாழ்க்கையோடு இணைந்த கலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கோடு, நகராட்சியின் சார்பில் நான்கு இலட்ச ரூபாய் செலவில் அறிஞர் அண்ணா அரங்கு ஒன்று நகராட்சியின் எதிரே அழகுடன் காட்சியளிக்கிறது. நாடகம், நடனம் முதலான நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் இந்த அரங்கம் வசதி மிக்கதாய் அமைந்துள்ளது. குழந்தைகளுக்காக, 'பாரதியார் குழந்தைகள் கலை அரங்கு' ஒன்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைந்துள்ளது. இந்த அரங்கம் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும்கூடக் கலைவிருந்து படைக்கிறது.

கலை மணக்கும் காஞ்சி, சுற்றுலாவுக்கும் ஓர் சிறந்த இடமாக மக்களைக் கவர்ந்து வருகிறது. பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பயணிகளுக்கு வசதியாக மைய அரசின் பயணிகள் விடுதி ஒன்று இங்கே உள்ளது. தமிழக அரசின் பயணிகள் விடுதி ஒன்று விரைவில் துவங்கப்படவிருக்கின்றது. நகராட்சியின் சார்பில் ஒரு பயணிகள் விடுதியும் தற்போது நடத்தப்பெற்று வருகின்றது. மேலும் இரு விடுதிகள் கட்டவும் நகராட்சி திட்டமிட்டுள்ளது. இவை மட்டுமா?

நவீனப் பேருந்து நிலையமும், அங்கே பயணிகள் தங்கிச் செல்ல விடுதியும் நகராட்சி அமைத்துள்ளது. பேருந்து நிலையத்தினுள் திரைப்படக் கொட்டகை ஒன்றும், பல்வேறு கடைகள் கட்டவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. வசதிமிக்க இந்தப் பேருந்து நிலையத்தை 'பி' வகுப்பாக மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஞ்சியின் சிறப்பு மேலும் வளர்ந்திடும் வண்ணம், நகரின் மத்தியில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 ஏக்கர் பரப்பளவுள்ள விளையாட்டு அரங்கம் ஒன்றும், அதன் அருகில் 3 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அழகிய திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன.

வரிகளையும் வரி இல்லாத இனங்களையும் நூற்றுக்கு நூறு வசூலித்து, அதற்காக அரசு அளித்துள்ள கழற்கேடயத்தை இந்நகராட்சி தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. தணிக்கையில் ஆட்சேபனைகள் குறைவாயுள்ள நகர மன்றம் காஞ்சி என்பது குறிப்பிடத் தக்கது.

எழில் பொங்கும் பொன்னேரிக் கரைப் பாதையிலே, பொன்னொளி வீசும் மின் விளக்குகள் அமைத்து, இடை இடையே இளைப்பாற வசதிகளும் செய்யப்படவிருக்கின்றன.

நகர மக்கள் நன்மைக்காக ராஜாஜி சந்தையை விரிவுபடுத்தவும், 'மினி சூப்பர் மார்க்கெட்' ஒன்றை அமைக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பலவகையிலும் காஞ்சி மாநகர் சிறப்புடன் விளங்கிட நகராட்சி பற்பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்றது. மக்கள் நல்வாழ்வுக்கு நற்பணிகள் புரிந்து வரும் காஞ்சி நகராட்சி, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஏறுநடை போடுகின்றது என்றால் அது மிகையல்ல!

—பி. வி. ஜீ.






# காஞ்சிப் பெருமை!

இரண்டாயிரம் ஆண்டுசளுக்கு முன்பே சீரும் சிறப்புமாக விளங்கிய நகரம் காஞ்சி என்பதை நாமறிவோம். கல்லிலே கலை வடித்த பல்லவருக்குத் தலைநகராக விளங்கியது காஞ்சிபுரம். பின்னர் சோழர்கள், விசயநகர மன்னர்கள் ஆகியோரின் ஆளுகைக்கும் உட்பட்டுக் கலை மலிந்த கோயில்கள் பல அவர்களால் கட்டப்பட்டன. பல்லவர் காலத்துக் கோயில்களான கைலாசநாதர்கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகியவை கலைச் சிறப்பு மிகுந்தவை.

நால்வகைச் சமயங்களும் இந்நகரில் தொன்மையில் சிறப்போடு விளங்கின என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜைன காஞ்சி, புத்த காஞ்சி என நால்வகைப் பகுதிகள் இன்னும் பெயர் பெற்று விளங்குகின்றன.

காஞ்சிபுரத்தை அப்பர், 'கல்வியில் கரையிலாக் காஞ்சி' என்று புகழ்கிறார். சந்திரகுப்தரின் அமைச்சர் சாணக்கியரும், திருக்குறளுக்குத் தலைசிறந்த உரை தந்த பரிமேலழகரும், அறிவுக் கண்களைத் திறந்திட செல்வத்தை அளளி வழங்கிய வள்ளல் பச்சையப்பரும், இன உணர்வும், மொழி உணர்வும், அரசியல் விழிப்புணர்ச்சியும் உண்டாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களும் பிறந்த இடம் காஞ்சியே அன்றோ?




நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு
TANSI
டான்ஸி
தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது
மலிவானது
உத்திரவாதமானது
வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்பு களுக்கும். கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் "டான்ஸி"
விவரங்களுக்கு அணுகவும் :
தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்
TANSI
நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழநாடு அரசு நிறுவனம்)
"அருள்மனை", 26; ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014



# அண்ணாவின் வாழ்விலே....!

புலவர் தமிழ்ப்பித்தன்

விடுதலைப் போர்த் தியாகிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் அண்ணா. தமிழகத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறாமல் இருந்த ஒரு தியாகியின் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார். வாஞ்சி என்னும் தியாகியின் மனைவி தனக்கு வாழ்க்கைப் பென்சன் வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமலேயே இருந்து வந்தது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார். பாவம், அந்த அம்மையார் முதுமை அடைந்திருந்ததால் அண்ணா தந்த பென்சன் பணத்தை நீண்ட காலம் வாங்கி அனுபவிக்க இயலாமல் இயற்கை எய்திவிட்டார்.

என்றாலும், தியாகிகளிடமும் அவர்களது குடும்பத்தவரிடமும் அண்ணா கொண்டிருந்த மரியாதையை இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்து வருகிறது.

முதன்முறையாக அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது கூட, அண்ணா அவர்கள் அந்தப் பயணத்தை வெறும் சுற்றுலாப் பயணமாக்கிவிடாமல் மிகப் பெரும் தியாகி ஒருவரின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பாக்கிக் கொண்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, நீண்ட காலமாகச் சிறையில் கிடந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் ரானடே. அவரது துன்பத்தை இந்திய அரசோ, அண்ணாவுக்கு முன்பு இருந்த மாநில அரசோ பொருட்படுத்தவில்லை. ஆனால் விடுதலை வீரர் ரானடே படும் துன்பம் அண்ணா அவர்களின் இதயத்தை மிகவும் வருத்தியது. அவரது விடுதலைக்கு வழி என்ன என்று தமக்குள் சிந்தித்து வைத்துக் கொண்டார்.

அமெரிக்கச் சுற்றுலாவைத் தொடங்கியபோது, இத்தாலி நாட்டுக்குச் சென்று, வாடிகன் நகரில் உள்ள போப்பாண்டவரைச் சந்தித்தார். கோவா வீரர் ரானடே விடுதலை செய்யப்படவேண்டிய அவசியத்தை போப்பாண்டவரிடம் எடுத்துரைத்தார். அண்ணாவின் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக் கொண்ட போப்பாண்டவர், போர்ச்சுக்கீசிய அரசிடம் தொடர்பு கொண்டு ஆவன செய்தார். பல்லாண்டுகளாகச் சிறை இருந்த ரானடே விடுதலை பெற்றார்.

கோவா மக்கள் அனைவரின் இதயங்களும் குளிர்ச்சி பெற்றன. அண்ணாவுக்கு வாயார வாழ்த்துக் கூறினார்கள் கோவா மக்கள்.

* * *

அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சைக்கு ஆளானார்கள். சிகிச்சையெல்லாம் முடிந்து, ஓரளவு உடல் நலம்பெற்றுத் தாயகம் திரும்பினார்.

டாக்டர்கள் அண்ணாவைப் பலவிதத்திலும் கடுமையாக எச்சரித்து வைத்திருந்தார்கள். அதிகம் உரையாடக்கூடாது, அலுவல்களில் அதிகம் ஈடுபடக் கூடாது என்றெல்லாம் டாக்டர்கள் அவருக்குத் தடைவிதித்திருந்தார்கள். ஓடுகின்ற ஆற்றை, உயரே இருந்து அழகு சொரியக் குதித்துவரும் அருவியை எவராலும் கட்டுப்படுத்த முடியுமா? அருவி போன்ற இலட்சிய எண்ணங்களை இதயத்திலே கொண்டிருந்த அண்ணா அவர்களால் டாக்டர்களின் ஆணைகளை மீறாமல் இருக்க முடியவில்லை.

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தாலும் — பெயர்சூட்டும் விழா நடைபெறாமல் இருந்தது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா அவர்கள் முதன் முதலாகக் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றியது— தமிழ்நாடு பெயர் மாற்ற விழாவில் தான்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அண்ணாவின் குரல் கம்பீரமாக இருக்குமா? அல்லது அதற்கு ஊறு நேர்ந்திருக்குமா? என்றெல்லாம் மக்கள் எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அண்ணா அவர்கள் மெலிந்த உடலோடு எழுந்து நின்று, ''தலைவர் அவர்களே!'' என்று மொழிந்த உடனே, அந்தக் கம்பீர ஒலி கேட்டு, மக்கள் கர ஒலியை எழுப்பியது—வானத்தையே பிளந்தது என்றுதான் கூறவேண்டும். மக்கள் ஒருமுறை கரஒலி எழுப்பியதோடு நிற்கவில்லை— மீண்டும் மீண்டும்—நினைத்து நினைத்துக் கரஒலி எழுப்பினார்கள், 'தலைவர் அவர்களே' என்ற இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடனேயே!

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்றும், கலந்து கொண்டால் உடல் நலம் பாதிக்கும் என்றும் மருத்துவர்கள் அண்ணாவுக்கு எச்சரிக்கை செய்திருந்தார்கள். என்றாலும் அண்ணா அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. தமது அரும்பெரும் இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்துகொண்டார்; அந்த விழாவிலே அண்ணா குறிப்பிட்டார்—

''இந்த விழாவிலே கலந்து கொள்ளவேண்டாம், உடல் நலம் பாதிக்கும் என்று டாக்டர்கள் கூறினார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எந்தவொரு இலட்சியத்திற்காக இத்தனை காலம் போராடி வந்தோமோ, அந்த இலட்சியம் நிறைவேறும் இந்த இனிய விழாவில் கலந்துகொண்டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால்—இந்த உயிர் இருந்தென்ன, போய் என்ன?'' என்று உயிரை வெறுத்து— உணர்வை மதித்து உரை ஆற்றினார்கள்.

இலட்சியம் நிறைவேறிட உயிரையும் பொருட்படுத்தாதவர் அண்ணா என்ற செய்தி இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வரலாற்றில் பொறித்து வைக்கப் பெற்றது.

# குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம்

எல்லா வகையிலும் ஏற்றம் காணும் தமிழக அரசு, நாட்டின் முன்னேற்றத்திற்காக, உணவு உற்பத்திக்காக நல்ல பல மாபெரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இவ்வகையில் தற்பொழுது குடகனாற்றில் குறுக்கே வேடசந்தூர் வட்டத்தில் உள்ள அழகாபுரி கிராமத்திற்கருகில் ரூபாய் 2 கோடியே 12 லட்சத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட அனுமதி அளித்துள்ளது.

குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம் மதுரைமாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் வேடசந்தூரிலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் அழகாபுரி கிராமத்திற்கருகில் அமைக்கப் பட்டு வருகிறது. இந்த நீர்த் தேக்கத்திற்குக்கிடைக்கக் கூடிய நீர் வரத்து 785 மில்லியன் கன அடிகளாகும்.

குடகனாறு அமராவதி ஆற்றின் துணை நதியாகும். இது பழனி மலையின் கீழ்ச் சரிவில் உற்பத்தியாகித் திண்டுக்கல், வேடசந்தூர், கரூர் வட்டங்களின் வழியாகச் சென்று கரூர் நகரின் அருகில் அமராவதி ஆற்றில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 68 மைல்கள் இவ்வாற்றின் குறுக்கே 14 அணைக் கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றால் 3,236 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது. மழைக் காலங்களில் மிதமிஞ்சி வெள்ளப் பெருக்கால் தேவைக்கு மீதியான தண்ணீர் அமராவதி ஆற்றில் வீணாகப் போய் விழுகிறது. இதைச் சரிவரப் பயன்படுத்தவே இந்தக்குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம் உருவாக்கப் பட்டுவருகிறது.

குடகனாறு நீர்த் தேக்கம் 12·3 மில்லியன் கன மீட்டர் அல்லது 434 மில்லியன் கன அடி கொள்ளளவு உடையதாக இருக்கும். இத்திட்டத்திற்கான் கட்டட அணையின் நீளம் 73·15 மீட்டர் அல்லது 240 அடிகளாகும். மண் அணையின் நீளம் 2,425 மீட்டர் அல்லது 7,956 அடிகளாகும். இந்த நீர்த் தேக்கத்திலிருந்து இடதுபுறம் ஒரு கால்வாயும் வலதுபுறம் ஒரு கால்வாயும் வெட்டி, தண்ணீர் பாசனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இடதுபுற வாய்க்கால் 9 கிலோ மீட்டர் நீளமுடையது. இதன் மூலம் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் உள்ள கல்வார்ப்பட்டி கிராமம், திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் பெரிய மஞ்சுவெளி கிராமம் ஆகிய இரு கிராமங்களும் பயனடையும். வலதுபுறக்கால்வாய் 48 கிலோ மீட்டர் நீளமுடையது. இதன் மூலம் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் உள்ள பள்ளப்பட்டி, கம்பூர் ஆகிய இரு கிராமங்களும், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஆத்தூர் வேலம்பட்டி, அம்மாப்பட்டி, கூடலூர், வெள்ளியணை, உப்பிடமங்கலம் ஆகிய ஆறு கிராமங்களும் பயனடையும். இந்த வலதுபுறக் கால்வாய் தற்பொழுதுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், புதூர், வீரராக்கியம் ஆகிய நான்கு குளங்களுக்கு நீர் கொண்டு செல்வதுடன் இடையில் உள்ள நிலங்களுக்கு நேரடிப்பாசன வசதி அளிக்கவும் சாத்தியமாகும். எனவே இத்திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் சுமார் 2,230 ஏக்கர் நிலங்களும், திருச்சி மாவட்டத்தில் சுமார் 4,085 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

மேற்படித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் கூடுதல் உணவு உற்பத்தி 4,483·9 மெட்ரிக் டன்களாகும். இத்திட்டத்திற்காகச்சுமார் 1,151·75 ஏக்கர் நிலங்களை அரசுக் கையகப்படுத்தும். திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 212 லட்சங்களாகும். கூடுதல் உணவு உற்பத்திக்காகும் செலவு டன் ஒன்றுக்கு ரூ. 4,728 ஆகும்.

குடகனாறு நீர்த் தேக்கத் திட்டப்பணியைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கடந்த 25—8—1973 அன்று உப்பிடமங்கலத்தில் துவக்கிவைத்தார். இந்த விழாவுக்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையேற்றார்கள். ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்களும் பங்கேற்றார்கள்.


உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

'ப்ளேனோஃபிக்ஸ்'

தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோஃபிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோஃபிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன் படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள். உங்கள் பயிர் ஒர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர் லக்னோ. சென்னை. புதுடெல்லி. பாட்னா.

"ப்ளேனோஃபிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. சுகத் தயாரிப்பு. ரெடிஸ்டர்டு மார்க்




திருச்சி—தஞ்சை மாவட்டங்களை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றில் திருமானூர்—விளாங்குடிக்கு இடையே, தமிழகத்திலேயே மிகவும் நீண்டதொரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் நீண்ட—நெடுநாளாய்த் தேவையாக இருந்து வந்தது. இப்பாலம் கட்டப்பட்டமையால் தஞ்சையிலிருந்து, திருச்சி மாவட்டத்தின் வடபகுதிகளுக்குச் செல்லும் தூரம் குறைவதுடன், தஞ்சையிலிருந்து தமிழகத்தின் தலை நகராம் சென்னைக்குச் சென்றிடும் தூரமும், காலமும் குறைவதனுல் போக்குவரத்து, மேலும் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இச்சிறப்புமிகு பாலம் தஞ்சை—திருச்சி மாவட்டங்களை இணைக்கும் வகையில் 'இணைப்புப் பாலம்' என்கின்ற சிறப்பினையும் எய்தியுள்ளது. இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டதன் காரணமாக நெடுஞ் சாலைத் துறையைப் பொறுத்த வரையில் இது ஓர் 'பொற்காலம்' என்று கூறின் மிகையாகாது.

இத்தகு வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பாலத்தின் கட்டுமான வேலை 20—10—69 அன்று தொடங்கப்பெற்று 30—4—73-ல் முடிவுற்றது. இப்பாலம் கட்டி முடிப் பதற்குச் செலவான தொகை ரூபாய் 65·70 இலட்சமாகும். இப்பாலத்தின் நீளம் 3,762 அடிகளாகும். இதுவே, தமிழகத்தின் மிகப் பெரிய பாலம் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளது. அண்ணு (ஜெமினி) மேம் பாலத்திற்கு அடுத்து அதிகச் செலவில் கட்டப்பெற்ற பாலம் இது. அண்ணு மேம்பாலம் ரூபாய் 66 இலட்சம்.

தமிழகத்தின் எழில்மிகுத்த இப்பாலத்தினை மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமை வகிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 19—8—73 அன்று திறந்து வைத்தார்கள். விழாவில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம அவர்களும், போக்குவரத்துத்துறை அமைச்சர் இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவினைக் கண்டுகளிக்கத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரளாக வருகை தந்து அவர்கள் அகமும், முகமும் மலரக் களிப்படைந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருந்தளித்தது. பாலத்திலும், ஆற்று மணலிலும் மக்கள் கூடியிருந்த காட்சி மதுரை சித்திரைத் திருவிழாவை, ஆற்றில் அழகர் இறங்கும் காட்சியை நினைவூட்டியது. அவர்களின் நெஞ்சங்களில் இவ்வினிய நிகழ்ச்சி நீங்கா நினைவாக என்றென்றும் இருந்திடும் என்பதில் ஐயமில்லை.

கட்டி முடிக்கப்பட்ட இப்பாலம் தஞ்சை—திருச்சி மாவட்டங்களுக்குத் தனி எழில் தருவதோடு அம்மாவட்டங் களின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பெருமளவில் துணையாக அமைந்திடும் என்பது திண்ணம்.



# திருமானூர் கொள்ளிடம் பாலம்

# பிறந்த நாள்



நகர் விழாக்கோலம் கொண்டு விளங்குகின்றது. தெருவெல்லாம் தோரணவாயில். இல்லமெல்லாம் புதுமைப் பொலிவு. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கின்றனர். சான்றோரும், புலவரும், கலைஞரும் மன்னன் அரண்மனை நாடிச் சென்று கொண்டுள்ளனர். சிறை வீடுகள் திறக்கப்பட்டு யாவரும் விடுதலை பெறுகின்றனர். மன்னன் அந்தணர்க்கு ஆக்களொடு பொன்னைப் பரிசளிக்கின்றான். நாவன்மை மிக்கோர் மலைபோன்ற களிற்றைப் பரிசாகப் பெற்று அதன் மீது ஏறிச் செம்மாந்து செல்கின்றனர். மங்கல இயங்கள் முழங்குகின்றன. எங்கும் மன்னனை வாழ்த்தும் வாழ்த்தொலியே கேட்கின்றது. இவற்றிற்கு இடையே ஓர் அழுகுரல் கேட்கின்றது. "ஐயோ. என் குடிசை போயிற்றே" என்று, தன் எட்டுக் கால்களையும் உதறிக்கொண்டு ஒரு சிலந்தி அழுகின்றது. காரணம் அதன் கூடு — வலை போய்விட்டது. ஏன் போயிற்று?

அன்று இரேவதி விண்மீனுக்குரிய நாள். அவ்விண்மீன், சோழ மன்னன் கிள்ளிவளவன் பிறந்த நாள்மீன். ஊரெல்லாம் ஒப்பனை செய்யப்படும்போது வீடெல்லாம் தூய்மை செய்யப்படும் அன்றோ! அவ்வாறு செய்யப்படும்போது ஒட்டடையாக இருந்த சிலந்தியின் கூடும் போயிற்று. இதுதான் சிலந்தி தன் கூடு இழந்தவாறு.

இக்காட்சியை முத்தொள்ளாயிரப் புலவர் கண்டார்; பாடினார்.

"அந்தணர் ஆவோடு பொன்பெற்றார்; நாவலர்
மந்தரம் போலும் களிறூர்ந்தார் — எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள்; என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு"

இது பிறந்த நாள் விழாவை நயம்பட வண்ணிக்கும் பாட்டு. 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் பிறந்த நாள் பெருமையாகக் கொண்டாடப் பட்டது. அதற்கு இது சுவைகூட்டும் சான்று.

சேலத்து இரும்பு செருமனிக்குப் போய் ஒலி பெருக்கியாக உருப்பெற்று, மெருகு ஏறிப் 'பள பள' என்று சேலத்திற்கே வரும். அதன் கோலத்தைக் காணும் சேலத்தார் அதற்குள் சேலம் இருப்பதை அறியார். அந்தக் கோலத்தின் மூலம், சேலம் என்பதை நினையார்.

குருதிக் கொதிப்பு நோய் போக்க அமெரிக்க நாட்டிலிருந்து வந்து இறங்கும் "செர்ப்பசில்" மருந்தில் "சருப்பகந்தி" என்னும் நம் நாட்டு மூலிகை இருப்பதை நாம் நினைத்தும் பார்த்ததில்லை.

இவ்வாறே நம் தமிழகத்தின் பண்டைக் கால மரபுகள் — பழக்க வழக்கங்கள் பல, வெளிநாடுகள் சென்று மெருகுடன் மீண்டுள்ளன. மேலை நாட்டார் நம் மரபுகளைக் கண்டு உவந்தனர். தாமும் கடைப்பிடித்துத் தம் நாட்டின் வழக்காக்கிக் கொண்டனர். நம்மிடமிருந்து சென்றவை அன்னார் மூலமாக நம்மை அடையும்போது அவற்றை ஒரு புதுமையாகவே காண்கின்றோம். அப்புதுமைக்குள் நம் பழமை ஒளிந்து கொண்டிருப்பதை உணர்வதில்லை.

அவற்றுள் ஒன்று, பிறந்த நாள் கொண்டாட்டம்.

இக்காலத்தில் பிறந்த நாளை மேனாட்டுப் பழக்கமாகவே நினைந்து கொண்டாடுகின்றனர். மேலைநாட்டுக் கிறித்துவ மதத்தைப் பின்பற்றும் நம் நாட்டவரும் மேலை நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுபவரும் கொண்டாடுகின்றனர். சிறுபான்மையினராகத் தமிழரும் மேலைநாட்டுப் பாங்கிலேயே கொண்டாடுகின்றனர்.

நம் நாட்டு மரபாகக் கொண்டு கொண்டாடுவதும் அற்றுப் போய்விடவில்லை. அருகிக் காணப்படுகின்றது.



## பிறந்த நாள் பொதுவிழா

ஒருவர் பிறந்த நேரத்தில் அமையும் விண்மீனை அறிந்து அவ்விண்மீன் ஒத்து வரும் நாளில் பிறந்த நாளைக் கொண்டாடுவது நம் நாட்டு மரபு. அந்நாள், அவ் விண்மீன் பெயராலேயே வழங்கப்படும். முதலில் கண்ட முத்தொள்ளாயிரச் செய்யுளில் கிள்ளிவளவன் பிறந்த நாள் "இரேவதி நாள்" எனப்பட்டதைக் கண்டோம்.

சேர மன்னன் கோக்கோதை மார்பன் பிறந்த விண்மீன், சதயம். அவன் பிறந்த நாள் "சதய நாள்" என்றே குறிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாமன்னன் முதல் இராசராசன் பிறந்த நாள் அவன் பிறந்த விண்மீனும் சதயத்தின் பெயரால் "சதயத் திருவிழா" வாகத் தஞ்சைப் பெரிய கோவிலில் ஆண்டு தோறும் கொண்டாடப் படுகின்றது. அவன் தன் ஆட்சிக் காலத்திலேயே தன் பிறந்த நாள் சேரநாட்டில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட ஏற்பாடு செய்தான்.



கலிங்கத்துப் பரணியும் இதனை,

"சதய நாள்விழா உதியர் மண்டலம்
தன்னில் வைத்தவன்" — என்று பாடுகின்றது.

திருவனந்தபுரத்து மன்னர் ஒருவரது பிறந்த நாள் "சுவாதித் திருநாள்" என அவர் பெயரால் கொண்டாடப்படுவதும் அவர் எழுதிய இசைப்பாடல்கள் "சுவாதி இசைப் பாடல்கள்" என்று பெயர் பெற்றிருப்பதும் பிறந்த நாள் பெருமை ஆகும்.

இவை போன்று, கடவுளர்க்குரிய விண்மீன்களைக் கொண்டு 'திருவாதிரைத் திருநாள்', சிவபெருமானுக்கும், 'திருவோணத் திருநாள்', திருமாலுக்கும் கொண்டாடப்படுகின்றன.

இக்காலத்தும் புகழுடம்பில் நிற்கும் காந்தியடிகள், அறிஞர் பெருந்தகை அண்ணா முதலியோர் நினைவாக அவரவர்தம் பிறந்த நாள்கள் பொதுவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன.

## பிறந்த நாள் உருவும் கருவும்

பிறந்த விண்மீன் வரும் நாளன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்தி, விளக்கேற்றி, நெல்லும் மலரும் தூவி வழிபட்டு, விருந்தளித்து அறம் செய்து பரிசளித்து, பகையையும் நட்பாகக் கொண்டு, வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தனர்.

இக்காலத்தில் மேலைநாட்டுப் பாங்கில் வெண்ணிறப் புத்தாடை உடுப்பதும் மெழுகு விளக்கேற்றுவதும், உரொட்டித் துண்டு வெட்டி வழங்கலும், வாழ்த்தும் பரிசும் பெறுதலும் தமிழகப் பழைமை மரபையே நினைவூட்டுகின்றன. மெழுகு விளக்கை அணைப்பது மட்டும் பொருந்தாத ஒன்றாக உள்ளது.

இப்பொருத்தத்தில் பண்டைப் பிறந்த நாள் உருமாறி உள்ளதேயன்றிக் கரு மாறவில்லை என்பதைக் காண்கின்றோம்.

இது தமிழ்க் கரு ஆகும். எவ்வாறு?

தமிழகத்துப் பிறந்த நாள் மரபு நீண்ட பெறும் வரலாற்றைக் கொண்டது. அவ்வரலாறு நமக்குக் கிடைக்கிற அளவில் ஏறத்தாழ 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம்.

## பிறந்த நாள் இலக்கணம்

"சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்"

என்று தொல்காப்பியம் (பொருளதிகாரம்: 91) பிறந்த நாளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. "பிறந்த நாள் பெருமங்கல நாள்" எனப்படும். அந்நாளில் போர் விட்டுச் சினமின்றி, ஈகை செய்து அறம் புரிவர். இதை அறிவிக்கும் தொல்காப்பியம் 3,000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதில்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த புறப்பொருள் வெண்பா மாலை என்ற இலக்கண நூலும்,

"அறந்தரு செங்கோல் அருள்வெய் யோன்
பிறந்தநாட் சிறப்பு உரைத்தன்று"

— என்று பிறந்த நாள் சிறப்பை அறிவிக்கின்றது.

## வெள்ளணி நாள்

மங்கல நாள்களில் பிறந்த நாள் பெருமைக்குரிய மங்கல நாள் என்னும் கருத்தில் "பெருமங்கலம்" என்று பெயர் பெற்றது.

வாழ்நாளில் பிறந்த நாள் பெருமைக்குரிய நாள் என்னும் கருத்தில் "பெருநாள்" எனப் பெயர் பெற்றது. (இவ்வழக்கையே இசுலாமியப் பெருமக்கள் நபி பெருமானின் பிறந்த நாளை "பெருநாள்" என்று கொண்டாடுகின்றனர்.

பிறந்த நாள் தூய்மையான நாள் என்பதன் அறிகுறியாய் வெண்ணிறப் புத்தாடையும் அந்நிற அணிகலன்களும் கொள்வதால் "வெள்ளணி நாள்" எனப்பட்டது.

வடநாட்டிலிருந்த சேரன் செங்குட்டுவன் பிறந்த நாளில் தன் நகரில் இருக்க எண்ணி விரைந்து வந்தான். அதனைப் பாடும் உழவர்,

"மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணி நாள்"

என்று பிறந்தநாளை "வெள்ளணி நாள்" என்று பாடினர்.

குழந்தை பிறந்ததைத் தலைவனுக்கு அறிவிக்க விரும்பும் தலைவி தோழிக்கு வெள்ளணி அணிந்து அனுப்புவாள். அவன் அதனால் குழந்தை பிறந்ததை அறிவான். இல்லத்திற்கு மீண்டு நிற்பான். இதனை,

"வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்"

என்று நம்பியகப் பொருள், என்னும் இலக்கண நூல் குறிக்கின்றது.

கோவை இளஞ்சேரன்



## பிறந்த நாள் இலக்கியம்

பிறந்த நாள் அரசர்க்கே கொண்டாடப் பட்டுப் பின்னர் தலைமக்கள் பொதுமக்கள் என்று வளர்ந்தது. பிறந்தநாள் பற்றிய மரபுகள் பெருகின. அதனால், பிறந்த நாளுக்கு இலக்கியத்தில் தனி நூலே எழுந்தது. 96 வகையான சிற்றிலக்கியங்களில் '' பெருமங்கலம் '' என்றொரு வகை இலக்கியம் உண்டு. அது பிறந்த நாள் சிறப்பை மட்டும் பாடும் தனி நூல். இது பிறந்த நாள் பெற்ற தனி இலக்கியம்.

## பிறந்த நாளால் பெயர்

உத்திரட்டாதியான், பரணியான் ஆதிரையான் என்று பிறந்த நாளால் பெற்ற பெயர்களாக இலக்கண நூல்கள் அறிவிக்கின்றன. புலவர்களில் ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார் என்னும் இருவர் மூல விண்மீனிற் பிறந்ததால் பெயர் பெற்றவர்கள். திருமூலர் என்னும் சைவப் பெரியாரும் அவ்வாறே பெயர் பெற்றவர்.

இறைவரும் அவ்வாறு பெயர் சூட்டப் பெற்றனர் :

" ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரை நீர்வேலி உலகு "

—என்று முத்தொள்ளாயிரம் சிவபெருமானுக்கு ஆதிரை விண்மீனால் பெயர் சூட்டியது.

''கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் ''

—என மதுரைக் காஞ்சி திருமாலுக்குத் திருவோண நாள் பெயர் சூட்டியது. பிறப்பு இறப்பு இல்லாதவர் என்று சொல்லிக் கொண்டே அவர்க்கும் பிறந்த நாள் கண்டனர் தமிழர் ; விழாவும் கொண்டாடினர்.

## பிறந்த நாளின் தனித்தகுதி

" எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரோ ;
குலோத்துங்க சோழனைப் பாடீரோ "

—என்று பாடும் கலிங்கத்துப் பரணி எந்த நாளினும் பிறந்த நாள் சிறந்தது என்றும், அன்று மன்னனது வெண்கொற்றக் குடை அருளின் தனிச்சின்னமாகும், அதனைப் பாடுக என்றும் பாடிப் பிறந்த நாளுக்கு ஒரு தனித்தகுதியைக் காட்டுகின்றது.

சிவக மன்னன் மிக இளமையிலேயே பகைவரை வென்று அடிப் படித்தினன். இதனைச் சீவக சிந்தாமணி

" வெள்ளணி அணிந்த ஞான்றே
வேந்தர்தம் முடியிற் கொண்ட
கள்ளணி மாலை மோந்து
கனைகழல் இலங்கு நோன்றாள் "

—என்று பாடிக் காட்டுகின்றது.



## பிறந்த நாள் நலம்

பிறந்த நாளில் மன்னர் போர்செய்யார் என்பதை,

''தேர்வேந்தன் தென்னன் திரு உத்திராட நாள்
போர்வேந்தன் பூசல் இலன்''

—என்று முத்தொள்ளாயிரமும்,

பிறந்த நாளில் மன்னனை வாழ்த்திப் பகை மன்னர் கூட்டம் சிறையிலிருந்து விடுதலை பெறுவர் என்பதை,

''மலைச்சிறைதீர் வாட்கண்டன்
வெள்ளணியை வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்தர் குழாம்''

—என்றொரு பழம் பாடலும் பிறந்த நாள் நலத்தைக் காட்டுகின்றன.

சேரமான் கோக்கோதை மார்பனது சதய நாளில் மன்னர்களை அழைத்து அவனது முரசு பேசியதாம்.

''ஏமாரு மன்னீர் ; எயில்திறமின் ! எங்கோமான்
வாமான்தேர்க் கோதை சதயநாள் — ஆமாறு
காமம் நுகருமின் ; கண்படுமின் என்னுமே
ஏம முரசின் குரல்''

கோதைக்கு அஞ்சிக் கோட்டைக் கதவை அடைத்து ஒளிந்திருந்த மன்னர்கள் அவன் பிறந்த நாளில் அச்சம் நீங்கி மனைவியோடு குலாவிக் கவலையின்றிக் கண்படுத்திருப்பர்.



## பிறந்த நாளில் போர்

பிறந்த நாளில் மெய்ப்போர் நீங்கினாலும் பொய்ப்போர் நிகழும். அது பிறந்த விழாவில் நிகழும் போட்டிகளுள் ஒன்று. அது சேரிப்போர் எனப்பட்டது.

திருவோண நன்னாளில் திருமாலுக்கு எடுத்த பிறந்த நாள் விழாவில்

''மறங்கொள் சேரி மாறுபடு செருவில்
மாறுது உள்ள வடுபடு நெற்றி''

—என மதுரைக் காஞ்சி சேரிப்போர் நிகழ்ந்ததையும், அது விளையாட்டுப் போராயினும் அதிலும் வீரம் காட்டி நெற்றியில் விழுப்புண் பெற்றதையும் காட்டுகின்றது.

நன்னன் என்ற தலைவனுடைய பிறந்த நாள் விழாவிலும் இத்தகைய சேரிப்போர் நிகழ்ந்ததாக அந்நூல் பாடுகின்றது.

சென்னை மயிலாப்பூரிலும் இச்சேரிப் போர் நிகழ்ந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

''கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரியில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தார்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்''

—என்று போன பூம்பாவையைப் பிறந்தநாள் விழாக் காண அழைக்கின்றார். இவ்வாறு பிறந்தநாள் கேளிக்கைகளோடு கொண்டாடப்பட்டதை அறிகின்றோம்.

மன்னனையோ மற்றவரையோ வாழ்த்துவதற்கும் பிறந்த நாள் பயன்பட்டது. ''அவரவர் பிறந்தநாள் விண்மீன் நிலைத் திருப்பதாக'' என்று கூறி வாழ்த்துவது மரபாக இருந்தது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை

''நின்று நிலைஇயர் நின் நாள்மீன்''

—என்று மாங்குடி மருதனார் வாழ்த்தினர்.

இத்துணை பெருமைகளையும் நலன்களையும் கொண்ட பிறந்த நாள் ஏதேனும் ஒரு குறை இல்லாதிருந்தால் கண்ணேறு பட்டு விடும் என்று கருதி அதற்கொரு குறையும் சொல்லி வைத்தனர். நோய்வாய்ப்பட்டவர்க்கு அவரது பிறந்த நாளில் நோய் மிகுமாம். இதனை முத்தொள்ளாயிரம், பிரிந்து வாடும் தலைவிக்கு வாடைக்காற்று வருவது எவ்வளவு கொடுமையானது என்பதற்கு உவமையாக

'' பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாள் போல
அணியிழை அஞ்ச (வாடைக்காற்று சீறிக்கொண்டு)
வரும்''

—என்று பாடுகின்றது. தமிழ் மருத்துவ நூல்களும் பிறந்த நாளில் சில மருந்துகளைக் கொள்ளக்கூடாது என்று அறிவித்துள்ளன.

இப்பெரும் வரலாற்றுடன் தமிழகத்தில் பிறந்த நாள் :

3000 ஆண்டுகளுக்கு முன் கருக்கொண்டு
இலக்கணத்தில் இயைந்து,
இலக்கியத்தில் இசைபெற்று,
மங்கலத்தில் மலிந்து,
விண்மீனில் விளங்கி,
இல்லம் அழகுபெற,
உள்ளம் உவகைபெற,
வெள்ளணி அணிந்து,
கள்ளணி மாலை சூடி,
அறுசுவை விருந்தளித்து,
சிறைக்கதவைத் திறந்து,
செருவெல்லாம் துறந்து,
சேரிப்போர் நிகழ்த்தி,
வாரிப் பரிசு வழங்கி,
வாழ்த்தில் ஒளிர்ந்து,
வளத்தில் மிளிர்ந்தது.

நம் நாட்டுப் பண்டைப் பாடல்கள் முடியுடை மன்னர், குறுநில மன்னர், நிலப் பெருஞ் செல்வர், மேம்பட்ட சான்றோர் ஆகியோர்மேல் பாடப்பட்டவைகளாகவே உள்ளன. எனவே, பிறந்த நாள் செய்திகளும் அவர்களைப் பற்றியனவாகவே கிடைக்கின்றன. வழி வழி வந்த தமிழ் மக்கள் இதனால் பிறந்த நாள் கொண்டாட்டத்தை வளம்படைத்தோர்க்கே உரியது எனக் கருதினர் போலும். தனி மாந்தர் விழாவாகக் கொண்டாடுவதை விட்டனர்.

இன்று நாம் நாட்டுத் தலைமக்கள் எளியவர்களாயினும் அவர்களுக்குப் பிறந்த நாள் விழா எடுக்கின்றோம். அவ்விழாவையும் பொது நலத்தில் வைக்கின்றோம்.

அண்ணல் காந்தியடிகள் நாள்—சருவோதய விழா.

அறிஞர் அண்ணா நாள்—எளியோர் வாழ்வு விழா.

பண்டித நேரு நாள்—குழந்தைகள் விழா.

டாக்டர் இராதாகிருட்டினனார் நாள்—ஆசிரியர் விழா.

டாக்டர் கலைஞர் நாள்—கண் வழங்கும் விழா ; மிதி இழுப்பு வண்டி வழங்கு விழா.

தமிழ்மக்கள் பிறந்தநாள் கொண்டாடி வாழ்க !

வளர்க பிறந்த நாள் விழா !



# பருத்திப் பயிர்ச் செல்வமதை பலியிடலாமோ செம்பேனுக்கு!

# தெளித்திடுவீர் கெல்தேன் அளித்திடுவீர் பாதுகாப்பு!



பாழ்படுத்தும் செம்பேன்களுக்குப் பலியாகாமல் பருத்திப் பயிருக்குப் பழுதற்ற பாதுகாப்பை அளிப்பது இண்டோஃபில் கெல்தேன்.

பயிர்களை எவ்வகையிலும் பாதிக்காமல், செம்பேன்களை அழித்து, நீடித்திருந்து பயிரை காக்கும் திறனுள்ளது. முதல் தெளிப்பிலேயே செம்பேன்களை முற்றிலும் ஒழித்துக் கட்டும் கெல்தேனின் பலன் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்கும் தன்மை வாய்ந்தது. உங்கள் தேவைகளுக்கு இண்டோஃபில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்ளுங்கள்.




இண்டோஃபில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு

இண்டோஃபில்
கெமிக்கல்ஸ் லிமிடெட்,
பம்பாய்-25

® கெல்தேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ. எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF 6219

புதிய கோணம்

# நாலும் இரண்டும்

சிங்கப்பூர் பா. கேசவன்

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழி நமக்கு அறிமுகமானதுதான். இப்பழமொழியிலுள்ள "நாலும்", "இரண்டும்" என்னும் சொற்கள் முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிக்கின்றன என்றும் விளக்கம் தரப்படுகின்றது. இந்தப் பழமொழியிலுள்ள "நாலும்", "இரண்டும்", எனும் சொற்கள் மேற்கண்ட இரு நூல்களையும் குறிக்கின்றன என்பது பொருத்தமானதுதானா? இந்த வினாவிற்கு விடை காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாலும் இரண்டும் என்னும் சொற்கள் நாலடியாரையும் திருக்குறளையும் குறிப்பன அல்ல என்பதே எனது கருத்தாகும். இவ்வாறு நான் கருதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

திருக்குறள் "உலகப் பொதுமறை", "தமிழ்மறை" என்றெல்லாம் சிறப்பித்துப் பேசப்படுவது. நீதி நூற்களிலே திருக்குறளுக்கு நிகரான ஒரு நூல் இல்லை என்பதே அறிஞர் பெருமக்களின் ஒருமித்த கருத்தாகும், அத்தகைய உயர்மிகு சிறப்பு வாய்ந்த திருக்குறளையும் நாலடியாரையும் சமமாக வைத்துப் பேச முடியுமா என்பது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். அதற்காக நான் நாலடியாரைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் தவறாகக் கருத வேண்டாம். நாலடியார் சிறந்த நீதி நூல் என்பதிலே கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. அதே சமயத்தில் நாலடியாரைப் போன்ற நீதி நூல்கள் பல உள என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் திருக்குறளுக்கு நிகரான ஒரு நீதி நூல் தமிழ் மொழியிலே மட்டுமன்று, வேறு எந்த மொழியிலேனும் இருக்கின்றதா என்பதும் ஐயத்திற்குரியதே! இந்த வகையில் பார்க்குமிடத்துத் திருக்குறளையும் நாலடியாரையும் ஒரே இடத்தில் வைத்துப் பேசுதல் பொருத்தமானதன்று என்றே கருத வேண்டியுள்ளது.

அடுத்து, நாலடியார் என்னும் பெயரே நாலடி வெண்பா என்பதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும். ஆனால், திருக்குறளுக்குப் பொதுமறை, தமிழ்மறை, முப்பானூல்—இப்படிப் பல பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால், "இரண்டு" என்னும் பெயர் இருந்ததாகவோ, இருப்பதாகவோ தெரியவில்லை.

திருக்குறளில் இல்லாதது எதுவுமே இல்லை என்று நாம் திட்டவட்டமாக—அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றோம். ஆனால், நாலடியாருக்கு இது பொருந்துமா?

நாடு, இனம், மொழி, மதம் என்னும் குறுகிய எல்லைகளைக் கடந்து நிற்பதால்தானே குறள் "உலகப் பொதுமறை" ஆகின்றது. இந்தச் சிறப்பு நாலடியாருக்கு உண்டா?

நீதி நூல்களுக்கெல்லாம் சிகரமாக விளங்கும் திருக்குறள் ஒன்று மட்டுமே போதுமே சொல்லுறுதி பயக்க! பின்னர் நாலடியாரையும் துணைக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன?

அவ்வாறாயின், இந்த "நாலும்", "இரண்டும்" என்னும் சொற்களுக்குப் பொருள்தான் என்ன? இதற்கு விடை காண நாம் உலக வழக்கைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். நாலு, இரண்டு என்பன எண்களைக் குறிக்கும் சொற்கள் என்பதிலே ஐயத்திற்கிடமில்லை. மற்ற எண்களுக்கு இல்லாத சிறப்பு இந்த எண்களுக்கு மட்டும் ஏற்படக் காரணம் யாது? இந்த இரண்டு சொற்களையும் பொதுவாகப் பார்க்குமிடத்து மற்ற எண்ணுப் பெயர்களைப் போலவேதான் இவையும் என்று தோன்றும். உலக வழக்கிலே இந்தச் சொற்கள் பயன்படும் விதத்தை எண்ணிப் பார்த்தால்தான் அவற்றின் சிறப்புப் பொருள் புலனாகும்.

"நாலும் தெரிந்தவன்", "நாலு பேருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்? "நாலு பேர் மதிக்க வேண்டாமா?"—இப்படி இந்த நாலு என்னும் சொல்லைப் பாமர மக்கள்கூட எடுத்ததற்கெல்லாம் பயன்படுத்துவதைக் காண்கிறோம். "நாலும் தெரிந்தவன்" என்றால் என்ன பொருள்? எல்லாம் தெரிந்தவன் அல்லது அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்திருப்பவன் என்பது தானே பொருள்? நாலு பேருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்?" என்னும் வாக்கியத்திலே "நாலு" என்பது "பல" என்னும் பொருளைத்தானே தருகின்றது? எனவே, இந்த "நாலு" என்பது சில இடங்களில் பல, பெரும்பான்மை என்னும் பொருளிலும், சில இடங்களில் எல்லாம் என்னும் பொருளிலும் வழங்கி வருவது தெளிவாகும்.

நாலு என்னும் சொல் இன்று பல என்னும் பொருளில் வழங்குவது போன்று முன்னாளில் ஏழு, எழுபது என்னும் சொற்கள் பல என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளன. எழுமை, எழு பிறப்பு, எழுபது கோடி என்னும் சொற்கள் பல என்னும் பொருளில் திருக்குறளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

"ஏதோ இரண்டெழுத்துப் படித்திருக்கிறான்", வாயைத் திறந்து இரண்டு வார்த்தை பேசினால் என்ன?", "ஐந்துக்கு

இரண்டு பழுதில்லை''—இப்படி இரண்டு என்னும் சொல் அன்றாட வழக்கிலே பயன்படுத்தப் படுவதையும் காண்கிறோம். இங்கே இரண்டு என்னும் சொல் சில, சிறிதளவு என்னும் பொருளை உணர்த்துவது சொல்லாமலே விளங்கும்.

எனவே, ''நாலும்'', ''இரண்டும்'' என்னும் சொற்கள் முறையே பல, சில என்னும் பொருள் தருவதாகக் கொள்ளல் வேண்டும்.

அப்படியானால், பலவற்றையும் தெரிந்திருத்தல் சொல்லுக் குறுதி பயக்கும் என்று கூறினால் போதுமே! ''பல'' வுக்குள்ளேயே ''சில'' அடக்கம் அல்லவா? ''நாலும் இரண்டும்'' என்று ஏன் கூற வேண்டும்? நாலும் தெரிந்த பின்னர் இரண்டுக்கு என்ன வேலை? சரியான கேள்விதான். அதே வேளையில், ''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்னும் கூற்றும் தவறன்று. ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கும், செயலுக்கும், வாழ்க்கை முறைக்கும் ஏற்பச் சில துறைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டும், மற்றத் துறைகளை ஓரளவு அறிந்திருந்தால் போதும். அதாவது, ஒவ்வொருவர்க்கும் அவர்தம் தனிப்பட்ட இயல்புக்கும், தகுதிக்கும் ஏற்பச் சிலவற்றில் ஆழ்ந்த பயிற்சி வேண்டும், மற்றவற்றில் மேலெழுந்தவாரியான பயிற்சி இருந்தாலே போதும். குறிப்பாகச் சொன்னால் ஒரு மனிதனுக்கு எல்லாத் துறைகளிலும் மேலெழுந்தவாரியான அறிவு இருத்தல் வேண்டும். அதே சமயத்தில் அவன் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சில துறைகளில் ஆழ்ந்த பயிற்சி இருத்தல் அவசியமாகும். இங்கே நாலு என்பது ஆழ்ந்த அறிவையும், இரண்டு என்பது மேலெழுந்தவாரியான அறிவையுமே குறிக்கின்றன. 'நாலும் இரண்டும்' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளுதலே பொருந்தும்.

எனவே, ''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்னும் முதுமொழியில் உள்ள ''நாலும் இரண்டும்'' என்னும் சொற்கள் முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிப்பன அல்ல என்னும் முடிவுக்கே வர வேண்டி இருக்கின்றது.



## அண்ணுவின் அமுத மொழிகள்

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.

* * * * *

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது. மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது; நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது. மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது.

* * * * *

பகுத்தறிவை முன்நிறுத்தி உழைப்பதே இந்தியாவின் தற்கால இன்றியமையாத் தேவை.

* * * * *

கலை என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

* * * * *

தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; இதைக் காணத்தான், சாதி தொலைய வேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

* * * * *

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

* * * * *

கருத்துத் தெளிவு மிகவும் இன்றியமையாதது. வெளியிடாமல் மனத்திலே மட்டும் உள்ள கருத்து மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல; அது காட்டிலே உள்ள ஒரு முறை.

# என்நாட்டவரும் போற்றும் எழில் மிகு மெரினா



சென்னை மாநகரத்தின் நிலா முற்றம் மெரினா ! கோடையிலே இளைப்பாறிக் கொள்ள விரும்புவோர்க்கு, வெள்ளி மணலின் மெத்தை விரிப்பும், சுகமான பூங்காற்றும், நீலக்கடலின் காட்சியும் தந்து, புதுத் தெம்பினை அளிக்கும் கற்பகம் இது. தெம்பும், மகிழ்வும் நாடி வருவோர்க்கு அவற்றினை இது பெருக்கித் தருகின்றது. உடல் அசதி, உள்ளத்தில் அலுப்பு, மனத்தில் சஞ்சலம், அனைத்தையும் குன்ற வைக்கும் துக்கம் இவற்றைக் கரைத்துக் கொள்ள, குறைத்துக் கொள்ள இதனைக் காட்டிலும் சிறந்த புகலிடம் சென்னை மாநகர மக்களுக்கு வேறு இல்லை.

அசைந்தாடி வரும் மதலைகள், துள்ளிக் குதிக்கும் குழந்தைகள், வளர்ச்சி வேகம் புடைத்துப் பீறிட ஓடி ஆடும் சிறுவர்கள், கன்னியர், காளையர், கணவன் மனைவியர், முதியோர், உடல் நலம் குன்றியோர் யாவருக்கும், வலியோர் —வசதி குறைந்தோர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவருக்கும் புத்துணர்ச்சி தந்து வருகின்றது சென்னை நகரின் இந்த அழகிய கடற்கரை.

## தனிமைச் சுகம்

காடு, மலை, வனாந்திரம், அவற்றின் பசுமை நிழல், அருவிகள், ஓடைகள், பாடும் பறவைகள், கற்பனைகளுக்குச் சிறகளிக்கும் இயற்கைச் சூழல்கள், இவற்றினூடே தனிமைச் சுகம் என்பது பட்டினவாசிகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய பேறு அல்ல. ஆனால் அந்த இயற்கை வளமைகள் அனைத்தையும் ஓரளவு ஈடுசெய்கின்ற அரிய ஒன்றைச் சென்னை மக்கள் பெற்றிருக்கிறார்கள். அது தான் மெரினா கடற்கரை !

சிங்காரச் சென்னையின் எழிலுக்குப் பேரெழில் சேர்க்கும் மெரினாவைப் பற்றிச் சொல்லுவது 'காக்கைக்கும் தன் குஞ்சு' கதை அல்ல. உலகத்திலேயே மிக அழகிய கடற்கரைகளில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றது மெரினா. வேறு நாட்டவர்களும் இதன் எழிலையும், இக்காற்றின் சுகத்தையும் வியந்து போற்றியிருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் சென்னை மாகாண கவர்னராக இருந்த ஆங்கிலேயர், தமது நண்பர் ஒருவருடன் பேசும் போது சொன்னார்: ''இந்தியாவுக்குச் செல்லுவாயானால் சென்னைக்குப் போகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள். சென்னைக் கடற்கரையில் ஒரு பன்னிரண்டு மணி நேரம் இருப்பாயானால் அதன் சுகம் அற்புதமாய் இருக்கும்'' என்றாராம்.

## மெரினா என்றால் என்ன ?

சென்னை மாகாணத்துக்கு



குமரன்



1881 முதல் 1886 வரை கவர்னராக இருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன் கிராண்ட் டப்ஃ என்பவர் தான் முதன் முதலாக இந்த எழிலார்ந்த கடற்கரையின் சிறப்பை உணர்ந்து, மேம்பாடு வேலைகளை மேற்கொண்டார். இககடற்கரைக்கு மெரினா என்று பெயர் வைத்தவரும் அவர் தான். அப்பெயர் குறித்து அவர் ஒரு சமயம் சொன்னார்: ''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கடலோர அத்துவான மணற்பரப்பாக இருந்த பகுதியை உலகிலேயே மிகச் சிறந்த கடலோர உலா மேடையாக்கி, சென்னைக்கு நன்மை செய்திருக்கிறோம்'' என்றார் அவர். மெரினா என்றால் உலா மேடை அல்லது கடலோர உலா மேடை என்று பொருள்.

வைரம் எங்கிருந்தாலும் வைரம்தான் என்றாலும் மண்ணுக்குள் இருக்கும் வரை, எடுத்துப் பட்டை தீட்டப் படாதவரை அதன் ஒளியும் பயனும் பிறருக்குத் தெரிவதில்லை. அதேபோல தமிழகம் தோன்றிய போதே இந்த அழகுக் கடற்கரையும் தோன்றியது என்றாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் பின்னரும், இதனை அழகுபடுத்தப்படுத்தத் தான் இதன் எழிலும் புகழும் எங்கும் அறியப்படலாயிற்று.

குதிரைத் தடம்

கூவம் முகத்துவாரத்தில் தொடங்கி, சாந்தோம் வரையில் நீண்டு அகன்ற இந்த மெரினா கடற்கரைப் பரப்பில் குறிப்பிடத்தக்க ஒன்று: பற்பல ஆண்டுகளாக இக்கடற்கரை ஓரத்தைக் கடல் அரித்ததும் கிடையாது. கடல் நீர் தள்ளிப் போய், இக்கரைப் பகுதி விரிவடைந்ததும் இல்லை. புதர்கள் மறைந்தன. மேடு பள்ளங்கள் பல தூர்ந்தன. மரங்களும் கூட மறைந்தன. ஆனால் திட்டமிட்டு, மேடையிட்டு, வரிசையிட்டு அமைத்த பூங்காக்கள், பூப்பாத்திகள், செடிகள், புல்தரைகள், இக்கடற்கரைக்குப் புதியஎழில் சேர்க்கின்றன.

காந்தியண்ணல் சிலையருகே கண் கவரும் புதுத் தோற்றம்



அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்தக் கடலோர உலா மேடைக்கு பிரிட்டிஷ் அலுவலர்கள், பெரும் வணிகர்கள், பெருமக்கள் முதலானோர்தான் அதிகம் வருவார்கள். அது, கார் இல்லாத காலம். குதிரைகள் பூட்டிய பீட்டன் வண்டியில் அல்லது குதிரை

வண்டியில் வருவார்கள். சிலர் குதிரை மீதேறியும் உலாவருவார்கள். தெற்குக் கடற்கரைச் சாலையின் மேற்கு ஓரமாக, நெடுக, குதிரைகள் ஓடுவதற்கென்றே ஒரு தடமும், அமைக்கப்பட்டிருந்தது. நடைபாதைத் தடம் மாதிரி, காதலர்பாதை மாதிரி, அது குதிரைச் சவாரித் தடம். அந்தத் தடத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வாட்டில் பட்டைகளை சிறு பிளாச்சுகளாக உடைத்துப் போடுவார்கள். குதிரையின் குளம்புக்கு மெத்தென்று இருப்பதற்காக! மெரினா பூப்பாத்திகளில் முன்பெல்லாம் சூரிய காந்திச் செடிகள், டபில் பால்சம் பூக்கள் அதிகம். கடற்கரையில் வானொலி அமைக்கப்படுவதற்கு முன்பு, அந்தப் பீடத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நாதசுரம் வாசிக்கும் ஏற்பாடு சில காலம் இருந்து வந்தது. வானொலி வந்ததும் அம்முறை நீங்கியது. குதிரைப்படை வீரர்கள் காலை நேரங்களில் மெரினா கடற்கரை நெடுக, குதிரை மீதமர்ந்து சென்றுவரும் முறை வெகுநாள் இருந்து வந்தது.

கடற்கரை வழியாக உடற்பயிற்சிக்காக அல்லது மகிழ்ச்சிக்காக குதிரைச்சவாரி செய்து வந்தவர்களில் அதிகம் ஆங்கிலேயர்கள்தான். அன்று அப்படி குதிரைச் சவாரி சென்றவர்களில் கிரிக்கெட் ஆட்டக்காரர் பாலையா நாயுடு, சர். சி.பி. ராமசாமி அய்யர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். குஜராத்திகள் பலர் பீட்டன் வண்டியில் செல்லுவர்கள்.

**பாரதியார் அமர்ந்த இடம்**

'அடிவானத்தே அங்கு பரிதிக்கோளம் அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்' என்று எழுதினாரே கவியரசர் சுப்பிரமணியபாரதியார், அவர் நாள் தவறாமல், சில சமயம் வேளை நேரம் கூட இல்லாமல் கடற்கரைக்கு வருவார். கடற்கரையில் அமர்ந்தே அரையணா நோட்டுப் புத்தகத்தில், தமது கோட்டு ஜேபியில் வைத்துள்ள துண்டுப் பென்சில்களைக் கொண்டு எழுதித் தள்ளுவார். காலத்தால் அழியாத அவரது கவிதைகள் பல பிறந்த இடம் — கடற்கரையில் பொதுப் பணித்துறைக்கு எதிரே உள்ள இடம்! இப்போது பாரதியார் சிலை அமைக்கப்பட்டிருக்கும் இடத்துக்குச்



வெண் சங்கெடுத்து விளையாடும் வெள்ளையுள்ளச் செல்வங்கள்!







சற்றுக் கிழக்கே தள்ளி, வெறும் மணல் பரப்பில் உட்கார்ந்து எழுதுவார். வெய்யில் நேரமாக இருந்தால், படகு நிழலில் அமர்ந்து கொண்டு எழுதுவார். 'தனிமை கண்டதுண்டு அதிலே சாரம் இருக்குதம்மா' என்று எழுதிய கவிஞர், பல நாட்கள் இக்கடற்கரையில் தனிமையில் கழித்தவர். நண்பர்கள் என்று யாரும் அவருடன் வராவிட்டாலும் அவர் உள்ளம் அப்போது களி போடுமாம். கடற்கரைக்குச் செல்லுகையில் ஒரு விதமாகக் குதித்தபடி நடப்பாராம்.

அதிகாலையில் பல்வேறு துறைகளையும் சார்ந்த பெருமக்கள் பலர், கடற்கரைக்கு வந்து காலார நடப்பதைத் தினசரி உடற்பயிற்சியாகக் கொண்டுள்ளனர். அலை வீசும் இந்தப் பெருங்கடலின் தோற்றம் பகல் முழுதும் எடுப்பாகத் தெரிவதில்லை. அது எந்த மாதிரி இருக்கிறது என்று பார்ப்பதற்கு மக்களுக்கும் நேரம் இருப்பதில்லை. ஆனால் மாலையாகிவிட்டால் கடற்கரை; களை கட்டிவிடுகிறது. காற்றில் இனிமையும் குளுமையும் சேர்ந்து விடுகிறது. மணல் பரப்பு வெள்ளித்துகள் விரிப்பாகிறது. சென்னை மாநகரின் மக்கள் தொகை ஒன்றுக்கு 5 மடங்காகப் பெருகியிருப்பதாலும், மேலும் வளர்ந்து கொண்டு வருவதாலும், மக்கள் தொகைக் கூட்டமும், கடைகள், விற்பனைப் பண்டங்கள் ஆகியனவும், மீனவர் பொருட்களினால் காற்றோடு வரும் நெடியும் அதிகம் தான். ஆனாலும் தண்ணொளி பரப்பும் குழல் விளக்குகளும் மலர்ச் செடிப் படுகைகளும் புதிய எழில் கூட்டுவதனாலும் தூய்மையான அகன்ற சாலையினாலும் மெரினாவின் எழில் புதுமையுடனேயே குலுங்குகின்றது.

## அண்ணா சதுக்கம்

எதையும் தாங்கும் இதயத்தைத் தன்னுள் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் அண்ணா சதுக்கம், செயற்கைக் குன்றும் சுனை நீரும் பூச் செடிப் பந்தல்களும் பசுமைப் பரப்பும் தோப்பும் துரவும் கொண்டு, மக்களின் இதயங்களை எல்லாம் கவர்ந்திழுக்கும் நினைவகமாக, மெரினா கடற்கரைக்குப் புதிய பெருமையும் எழிலையும் சேர்க்கின்றது. மெரினாவின் தென் பகுதியில் காந்தி சிலைப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகளால் மெரினா பெற்றுள்ள புதிய எழில்-கோலம், தமிழ் வளர்த்த ஆன்றோர்க்கும் சான்றோர்க்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது அமைக்கப்பட்ட சிலைகள், பாங்குடன் பேணப்படும் பூங்காக்கள் இவை அனைத்தும் சாலையின் ஒருபுறமும், பழங்காலப் பாணியில் அமர்ந்த பிரம்மாண்டமான கட்டடங்கள், இக்காலக் கட்டடக் கலைக்கு ஏற்ற முறையில் கட்டிய எழிலகம் போன்ற நெடிதுயர்ந்த புதிய கட்டடங்கள், இவை எல்லாம் மற்றொரு புறமுமாக மெரினாவின் அழகுக்கு அரண் செய்து நிற்கின்றன. சீரமைக்கப்பட்ட கூவத்தில் படகோட்டும் வசதி, நீச்சல் குளங்கள் ஆகியவை இக்காலத்துக்கேற்ற பொழுதுபோக்கு, உடற்பயிற்சி வசதிகளைத் தருகின்றன. இந்த வசதிகள் மிகப் பெரும்பாலும் ஏழை, எளிய மக்களுக்குத்தான் அதிகம் பயன் படுகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். அழகும் மகிழ்வும் நாடிச் செல்வந்தர்கள் தொலைதூர இடங்களுக்கும் செல்ல முடியும். பெரும் செலவு செய்து அவற்றைப் பெற முடியும். ஆனால் ஏழை மக்களால் அது இயலாதே!

## வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள்.

விடுதலைப் போராட்ட காலத்திலும், நாடு சுதந்திரமடைந்த பின்னரும் மக்களின் எழுச்சியைக் காட்டவும், கருத்து வளங்களை எடுத்துக் கூறவும் உற்றதோர் மாபெரும் திடலாகவும் மெரினா கடற்கரை பயன்படுகிறது. காந்தியடிகளும், திலகரும் இக்கடற்கரையில் பொது மேடையிட்டுப் பேசியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் கடற்கரைக் கூட்டங்கள், இலட்சக்கணக்கில் மக்களை ஈர்த்தது அண்மைக் காலத்தில் நாடறிந்த நிகழ்ச்சியாகும். 1947 ஆகஸ்டு 15-ல் நாடு விடுதலை பெற்றபோது, 1948 பிப்ரவரியில் காந்தியடிகளின் சாம்பல் வங்கக்கடலில் கரைக்கப்பட்டபோது, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு கூடியபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் இறுதி யாத்திரைக்குப் பின் அவர் பொன்னுடல் அடக்கம் செய்யப்பட்டபோது இந்த மெரினா கடற்கரையில் கடலுக்கு ஒப்பாகத் திரண்ட மக்கள் கூட்டங்கள், வரலாற்றில் இடம் பெற்றவையாகும். அண்மையில் கட்டப்பெற்ற சீரணி அரங்கு பொதுக் கூட்ட நிசழ்ச்சிக்கு ஒரு நிலையான மேடையாகப் பயன்பட்டு வருகின்றது.

## ஒளி வண்ண நீரூற்றுகள்!

மெரினாவை மேலும் அழகுபடுத்த, ஏற்ற மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. அண்ணா சதுக்கத்திலிருந்து, 'ஐ.ஜி.' அலுவலகம் எதிரே தற்போது கட்டப்பட்டுவரும் புதிய கலங்கரை விளக்கம் வரை, நீண்ட பகுதியில் இன்னும் அகலமான, எடுப்பான புல்தரைகள், பூப்பாத்திகள், செடிகள், நீரூற்றுகள் முதலியன அமைக்கப்படும். இதற்காக ரூ. 16·40 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கலங்கரை விளக்கம் கட்டப்படும் பகுதியிலிருந்து காந்தி சிலைவரையில் முதல் கட்ட வேலைகள் ரூ. 2·85 இலட்சம் செலவில் இப்போது நடைபெற்று வருகின்றன.

இதன் விளைவாகச் சாலை மட்டத்துக்குக் கீழாக உள்ள பூங்காப் பகுதிகள் மேடாக்கப்பட்டு, பூங்கா எடுப்புடன் விளங்கும் நல்ல பாதைகள் அமைக்கப்படும். பொதுமக்கள் வசதிக்காகச் சிற்றுண்டி விடுதி ஒன்றும் அமைக்கப்பெறும். புதிய கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மெரினாவில் சிறிய அளவில் மீன் காட்சிச் சாலை இருந்து வருகின்றது. இந்தக் காட்சிச் சாலை மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழுவின் நகர்ப்புற மேம்பாடு, சுற்றுலா வசதி பற்றிய செயல் அணி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேம்பாட்டுப் பணிகளின் விளைவாக வண்ண ஒளிச் சிதறல்கள் அமைத்த நீரூற்றுகள், விளம்பரம் செய்வோருக்குப் பயன்படும் வகையில் வண்ண ஒளி விளம்பரப் பலகைகள், பசுந்தரைகளில் புதுவகை ஒளி அலங்காரம் இவற்றைக் கொண்டு சென்னை மரினா கடற்கரை, சென்னை மாநகர மக்களை மட்டுமல்ல, மற்ற மாநிலத்தவரும் வெளிநாட்டவரும் கண்டு மகிழும் அழகுச் சோலையாகத் திகழும்! — சி.க.ரா.





# மாவட்டங்களிலிருந்து

**இராமநாதபுரம் மாவட்டம்.**

1973—74-ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொழில் தேர்ச்சிபெற்ற இந்து, அரிசன வகுப்பினரது வாழ்க்கைத் தரம் முன்னேற அவர்களது தொழிற் தேர்ச்சிக்குத் தக்கபடி தையல், சலவை, முடி திருத்துதல், தச்சுவேலை, கொல்லு வேலை, செருப்பு தைத்தல், தையல் இயந்திரத்தில் செருப்பு தைத்தல் ஆகிய தொழில்களுக்கான கருவிகள் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

இந்தத் தொழிற் கருவிகளைப் பெற விரும்புவோர் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்தோ அல்லது தாசில்தார், துணைத் தாசில்தார்களிடமிருந்தோ அல்லது அரிசன நல தாசில்தாரிடமிருந்தோ விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து 30—9—73-க்குள் அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் இந்து, அரிசன வகுப்பைச் சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழை, தாசில்தார், துணைத் தாசில்தார், சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்வாறு சான்றிதழ் இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. அரிசன நலத் துறையிடமிருந்து ஏற்கனவே மேற்கண்ட வகைகளில் ஏதாவதொன்றில் சலுகை பெற்றிருப்பவர்களும், தொழிற் கருவிகள் வாங்கியிருப்பவர்களும் விண்ணப்பம் செய்யக்கூடாது. ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு மட்டுமே தொழிற் கருவிகள் வழங்கப்படும்.

**மதுரை மாவட்டம்.**

மதுரைமாவட்டம், குஜிலியம் பாறையில் மக்கள் குறை தீர்க்கும் மனுநீதி நாள் விழா 23—8—73 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு 5,000 பேர் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வந்திருந்தனர். மாவட்டத்திலுள்ள பல்வேறு துறை அலுவலர்கள், இந் நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

இந்த முகாம், மதுரை மாவட்டத்தில் 9-வது மனுநீதித் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 5,047 மனுக்கள் பொது மக்களிடமிருந்து வந்திருந்தன. இவை நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு வேண்டிய தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் முடிவு காணப்பட்டு வந்துள்ளன. இது வரை பெற்ற 4,224 மனுக்களில் பரிசீலனைக்கு 1,041 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மனுதாரர்களுக்குச் சாதகமான முடிவுகள் கையாளப்பட்டுள்ளன. மீதி 1,185 மனுக்கள் நடவடிக்கையில் உள்ளன. இம் மனுக்கள் பெரும்பாலும் பட்டா கேட்டும், முதியோர் தொகை வேண்டியும், கடன் தொகை வேண்டியும் வந்துள்ளன.

வந்த மனுக்களில் புதிய முறையான மனு ஒன்றும் வந்திருந்தது. மணம் செய்து கொள்ள விரும்பிய மணமக்களான ஆண், பெண் இருவரும் தங்கள் திருமணத்திற்குப் போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தினால், இம்மேடையிலே தங்கள் திருமண நிகழ்ச்சியை நடத்திட வேண்டினர்கள். (திரு தங்கராசு என்ற மணமகனுக்கும், ஜானகி என்ற மணமகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் திருமணம் மனுநீதி நாள் விழா மேடையில் சிறப்புற நடந்தேறியது!)

● ● ●

மதுரை மாவட்டத்தில் இது வரை 47,807பேர்களுக்கு நிலப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட நிலம் 1,10,676 ஏக்கர் நிலமாகும். 35 ஆயிரம் பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் கிராம இணைப்புச் சாலைத் திட்டத்திற்கு 50 இலட்ச ரூபாயும், இவ்வாண்டு 40 இலட்ச ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு அரசு 1 கோடியே 75 ஆயிரத்து 638 ரூபாய் செலவிட்டுள்ளது. 11 கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு 55,000 கண் பார்வையற்ற ஏழை மக்களுக்குக் கண் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத் திட்டம் சிறந்த முறையில் நிறைவேற 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சுமார் 12 இலட்சம் பேருக்கு நிலஉரிமை குறிப்பேடு வழங்கப்படவுள்ளது. இது வரை உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர் ஆகிய பகுதிகளில் இந்த குறிப்பேடு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் 44 ஆயிரம் பேருக்கு இந்த நில உரிமை குறிப்பேடு வழங்கப்படும்.

**செங்கற்பட்டு மாவட்டம்.**

தமிழக அரசின் திட்டத்தின் படி செங்கைக் கோட்டத்தில் உள்ள சுமார் 600 'காங்மஸ் தூர்'களுக்கு 23—7—73 அன்று செங்கை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை கோட்டப் பொறியாளர், திரு ஏ. வெங்கட்டரங்கராசு அவர்களால் காலணிகள் வழங்கப்பட்டன. தமிழ் நாட்டிலேயே செங்கையில் தான் முதன் முதலாக இந்த ஊழியர்களுக்குக் காலணி வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

● ● ●

செங்கற்பட்டு மாவட்டம் மாதவரத்தில் விவசாயம் மற்றும் கால்நடை பற்றிய கருத்தரங்கு ஒன்று சிறப்பாக நடந்தது. கருத்தரங்கின் முடிவு விழா மாதவரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்தது. விழாவில் கலந்து கொண்ட சிறந்த கால்நடைகளுக்கும், நெல் விளைச்சலில் அதிக மகசூல் செய்த விவசாயிகளுக்கும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஆதித்தனர் பரிசுகள் வழங்கினர்.

கொடுங்கையூரைச் சேர்ந்த ஆறுமுக கிராமணி, ஒரு ஏக்கர் நிலத்தில் 52 மூட்டை 'ஐ.ஆர். 8' நெல் சாகுபடி செய்து முதல் பரிசு பெற்றர். கதிர் அடிக்கப் பயன்படும் 'டிராம்ப்ளர்' இயந்திரம், அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

விளவங்காடுபாக்கம் ஊராட்சித் தலைவர் துரைபாபு, ஒரு ஏக்கர் நிலத்தில் 45 மூட்டை நெல் பயிர் செய்தார். அவருக்கு இரண்டாவது பரிசாக 2 கலப்பைகள் பரிசாக வழங்கப்பட்டன.

மூன்றாவது பரிசு வடபெரும்பாக்கத்தைச் சேர்ந்த சீனுவாசனுக்குக் கிடைத்தது. அவர் ஒரு ஏக்கர் நிலத்தில் 37 மூட்டை 'ஐ.ஆர். 20' நெல் விளைவித்து இருந்தார். அவருக்குக் கலப்பை ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இவை தவிர, கலப்பினப் பசுக்கள், நாட்டினப் பசுக்கள், எருமைகள், பசுக்கிடேறிகள், எருமைக் கிடேறிகள், கலப்பினக் கிடேறிகள், கலப்பினக் காளைக் கன்றுகள், பசுவின இளங்காளைகள், எருமையின இளங்காளைகள், எருமைக் கிடேறி கன்றுகள் மற்றும் கோழி இனங்கள் ஆகியவற்றில் சிறந்தவைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.



# காக்கும் புருவம்

கவிஞர் கருணானந்தம்

நன்முத்துச் சிப்பியினை நாடித் தேர்ந்து
நல்லொளியைக் காண்கையிலே நழுவி வீழ்ந்த
தன்மைத்தாய்—நல்லாட்சி நிறுவி யோரைத்
தாங்கவொணா தோளித்தனையோ, இயற்கை அன்னாய்?
உன்மத்தம் பிடித்தவராய்த் தமிழ மக்கள்
உலவிடில்இந் நிலவுலகம் நினைப்ப ழிக்கும்
பின்மற்ற செயலனைத்தும் நிற்கும் ; என்று
பிழையற்ற வழித்தோன்றல் கண்டு வைத்தாய் ?

அண்ணலுக்குப் பின்வந்து தென்னாட் டாரின்
அண்ணலென எம்அண்ணன் பெயரைப் பெற்றார் !
கண்ணனைய தம்பியர்க்குப் பாவை போன்றும்,
காக்கின்ற புருவங்கள் போன்றும் நின்றார் !
அண்ணனுடன் அருகிருந்தோர் ஆள்வ தால்தான்
அவர்வழியில் தவறாமல் நடக்கின் றார்கள் !
மண்ணகத்தில் நன்றியுள்ள மாந்தர் யாரும்
மறக்கவொண்ணா அறச்செயல்கள் நிறைக்கின் றாரே !

அவர்பெயரில் மன்றங்கள் அமைக்கின் றார்கள் ;
அருளுருவச் சிலைகளெலாம் நிறுவு கின்றார் ;
எவரெவரோ தழைப்பதற்கும் வாழ்வ தற்கும்
இடமளிக்கும் கடமைநிறை ஏந்தல் : அன்னார்
சுவரனையார் ! ஓவியர்கள் விருப்பம் போலே
சுவைக்கேற்பத் தீட்டிடலாம் ! ஆனால், என்றும்
இவர்வாழ்வார், தமிழ்நாடு வாழு மட்டும் ;
இவர்சமைத்த நன்னெறியே நிலைத்து நிற்கும் !

# கலை மலர்கள் பல பூக்கும்



















தம்பியர்தம் இதயமெனும் இதழ டுக்கித்,
தனியன்பாம் மகரந்தப் பொடிநி றைத்து,
வெம்பகைக்கும் இனியசெயும் கருணை என்னும்
விள்ளரிய மணங்கொடுத்துக், கல்வி தன்னைத்
தெம்புடைய தண்டாக்கி, அறிவாம் செந்தேன்
தேக்கிவைத்துக், காஞ்சிஎனும் பொய்கை தன்னில்
அம்புவியை வாழ்விக்க இயற்கை யன்னை
அழகியநல் மலரொன்றைப் படைத்துத் தந்தாள்.

அம்மலரில் தேன்பருகி நாளும் நாளும்
ஆயிரம்பல் லாயிரமாய்ப் பாடிப் பாடித்
தும்பிபல பறந்திங்கு வளர்ந்த துண்டு;
தும்பிகளால் மகரந்தப் பொடிப ரந்தே
அம்புவியில் பலமலர்கள் பூக்கக் கண்டோம் ;
அவற்றிலுறு நறுமணங்கள் பரவிச் சென்று
மொய்ம்புடைய கோட்டையெலாம் மணக்கக் கண்டோம்
மொய்த்திருந்து நுகர்வோரின் கூட்டங் கண்டோம்.

நெஞ்சமெலாங் குடிபுகுந்து மெச்ச நின்றான்,
நெடும்புகழின் படியேறி உச்சி சென்றான்,
செஞ்சுடர்போல் ஒப்பரிய தலைவன் என்றே
சேராரும் உணர்ந்துதலை வணங்கி நின்றார்,
வஞ்சமிலான் 'நானேநும் தலைவன்' என்று
மதங்கொண்டு வெறிகொண்டு சொன்ன தில்லை ;
நெஞ்சுருகச் 'சாமான்யன்' என்றே சொன்னான் ;
நெல்முதிர—விளைந்தபயிர் வளைந்தே தோன்றும்.

திருவெண்காட் டின்னிசையும் சொக்க வைக்கும்
சீர்த்திருவா வடுதுறையின் மிடுக்கும், சேர்ந்தே
உருவங்காட் டுங்காரு குறிச்சி மன்னன்
ஊதிவந்த நாதசுரம் ; மதங்கொண் டோடும்
பொருவெண்கோட் டானைதனை அடக்கி வந்த
புலியனையான் உதயணன்பால் இருந்த நல்யாழ் ;
மருவுங்காட் டானிரைகள் மயங்கி நிற்க
வாயூது மாயன்கைக் குழலும் ஆவான்.

குற்றால மலைமுகடும் நாணும் வண்ணம்
கொட்டுகிற சொல்லருவி, எங்கள் அண்ணா
வற்றாத கலையூற்று, கோலார் போல
வளமான சிந்தனைகள் நிறைசு ரங்கம்,
கற்றோரின் நூல்களெலாம் தேக்கி வைத்துக்
காக்கின்ற அணைக்கட்டு, மேகம் வந்து
பற்றாத முழுமதிசேர் நீல வானம்
பண்பாறு பாய்கின்ற கடலும் ஆவான்.

அடிமையெனும் இருளகற்ற வந்த காஞ்சி
அறிஞனெரு செம்பரிதி, உரிமைபூத்துப்
படிவளரத் தமிழ்மாரி பொழியும் மேகம்,
பரவிவரும் தம்பியராம் உடுக்க ணங்கள்,
தொடருமொரு முழுத்திங்கள், முடச் செய்கை
தூரோடு சாய்ந்துவிழக் கடிது வீசிப்
படருமொரு புயற்காற்று, வறிய மாந்தர்
படரெல்லாம் துடைக்கின்ற தென்றற் காற்று.

கலைமலர்கள் பலபூத்துக் கொத்துக் கொத்தாய்க்
கண்குளிர மனங்குளிரக் காட்சி நல்கும்,
பலவகைய புகழ்மணமெந் நாளும் வீசும்,
பாடிவருந் தம்பியராம் தும்பி கட்கு
நலமருவும் அறிவுத்தேன் சொரிந்து நிற்கும்,
நாவசைய மொழித்தென்றல் உலவி நிற்கும்,
உலகிலுளார் இன்பமுற வளர்ந்து தோன்றும்
உயர்சோலை போலஅவன் வளர்ந்து நின்றான்.

பொறுமை எனும் உயர்பண்பு கொண்ட உள்ளம்
பொறாமைதனை எள்ளளவுங் காணா உள்ளம்
வறுமையினைக் காணுங்கால் இரங்கும் உள்ளம்
வளர்தமிழின் வாழ்வுக்கே வாழ்ந்த உள்ளம்
சிறுமையினைக் காணுங்கால் சீறும் உள்ளம்
சினமென்னும் சுடுநெருப்பைச் சேரா உள்ளம்
வருபவரைக் கைகொடுத்து வளர்க்கும் உள்ளம்
வாய்த்திருந்த ஏந்தலினை நினைப்போம் நாளும்!

சாமி...

**கவியரசு முடியரசன்**

# மானிடத்தின் தலைமகனை வணங்குகின்றோம்!

விண்பாடும் பறவையெனத் தமிழினத்தின்
விடுதலையைப் பாடியவன் ; பகைத்தார் மாட்டும்
நண்பாடும் குணமுடையான் ; மாந்த ரெல்லாம்
நலம்பாடித் துதிக்கின்ற பேறு பெற்றான் ;
பண்பாட்டிற் கொடுமுடியன் ; காஞ்சி தந்த
பகுத்தறிவு ஞாயிற்றை நினைத்து விட்டால்
என்பாடும் நமக்கெல்லாம் விழியி ரண்டும்
எழிலருவி நீராடும் ; 'எதையும் தாங்கும்

நெஞ்சத்தைப் பெற்றிடுவாய் தம்பி' என்று
நெடுநாளாய் வற்புறுத்திக் கூறி வந்த
வஞ்சத்தை உணராமற் போனோம் : அந்த
வார்த்தையினைத் தம்பியர்கள் பொன்னே போல
நெஞ்சத்திற் கொண்டாரா என்று பார்க்க
நினைத்தாற்போல் சென்றுவிட்டார் ; இதய மென்னும்
மஞ்சத்தில் இருக்கின்றார் ! அவர்கொ டுத்த
மதிநலத்தால் மனிதரென வாழு கின்றோம் !

" தாக்குபவன் என்தம்பி யல்லன் ; தீமை
தாங்குபவன் என்தம்பி : பகைக்கண் ணாலே
நோக்குபவன் என்தம்பி யல்லன் ; அன்பில்
நுடங்குபவன் என்தம்பி ; இனந லத்தைப்
போக்குபவன் என்தம்பி யாகான் ; மாற்றார்ப்
போற்றுபவன் என்தம்பி ; உலகம் வாழ
ஆக்குபவன் எவன்அவனே எனக்குத் தம்பி
ஆகின்றான் " எனச்சொன்ன சால்புக் கோமான்!




தொண்டிருக்கும் அவரிடத்தில் ; இருக்கும் வாய்மை ;
துணிவிருக்கும் மலைபோல ; சங்க மென்னும்
பண்டிருக்கும் இலக்கியத்தின் நெறியோ நெஞ்சில்
பதிந்திருக்கும் ; பைந்தமிழில் எழுது வாரேல்
கண்டிருக்கும் அவர்எழுத்தில் ; வி ழியி ரண்டில்
கனிவிருக்கும் ; எப்பொழுதும் எளிமைக் கோலம்
கொண்டிருக்கும் அண்ணாபோல் நமக்கு வாய்த்த
குலமிருக்கும் நற்றெய்வம் பிறந்த தில்லை !

புகைபடிந்த கண்ணாடி காண்பார் தம்மைப்
புலப்படுத்த முடிவதில்லை : மதிகெ டுக்கும்
புகைபடிந்த நெஞ்சங்கள் உறவு சேர்க்கும்
பண்பாட்டை அறிவதில்லை ; உதடும் உள்ளும்
நகைபடிந்த பொழுதன்றோ புகழ்த்தேன் சொட்டும்
நற்பண்புப் பூமலரும் ; பலகு ணத்துத்
தகைபடிந்த நெஞ்சுடையார் ஆத லாலே
தமிழனத்தின் தலைமகனாய் விளங்கு கின்றார்!

சீறுவதும் சினங்கொண்டு, சிறியார்க் காணின்
செற்றத்தால் மோதுவதும், நாவ ரம்பை
மீறுவதும் ; மிகையாக்கிப் பழியாம் சேற்றை
மேலெறிந்து தாக்குவதும், அடுத் தடுத்து
நூறுவது போற்செயல்கள் செய்வா ரேனும்
நோக்கிலாய் அவையெல்லாம் மறந்து, கோபம்
ஆறுவதும், அணைப்பதுமே பண்பா மென்ற
அரிச்சுவடி கற்பித்த ஆசா னானார் !

கண்களிலே நிற்கின்றார் : உளமு ருக்கும்
கலைகளிலே ஒளிர்கின்றார் ; இசைவ ளர்ப்பார்
பண்களிலே தவழ்கின்றார் ; கவிக்கு லத்தின்
பாடல்களில் சிரிக்கின்றார் ; வானம் வந்த
தண் துளியின் ஓசையிலே பேசு கின்றார்
தமிழகத்தார் நெஞ்சமெல்லாம் ஆளு கின்றார்
மண்புகழும் சிறப்பெல்லாம் ஒருங்கே பெற்ற
மானிடத்தின் தலைமகனை வணங்கு வோமே!

புலவர் ஆ. பழநி

# கதரைப் பற்றிச் சில புதிய உண்மைகள்!

டி. கங்கப்பா ஐ.ஏ.எஸ்

கதர்த் துணி என்றாலே, அது விலை, அதிகமானது அது மோட்டாவாக இருக்கும், நீடித்து உழைக்காது அதில் ரகங்கள் குறைவு என்ற தவறான எண்ணம் பலருக்கு இருந்து வருகிறது. மிகச்சிறந்த மில் துணிகளைக் காட்டிலும் மென்மையான துணிகள் கதரில் இருக்கின்றன என்று சொன்னால் நம்புவதற்குக் கஷ்டமாகக் கூட இருக்கும். ஆனால் அது உண்மை. பண்டை நாளில் இந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய மஸ்லின் துணி இப்போது கதரில் உற்பத்தி செய்யப்படுகின்றது. கையால் நூற்பதில் திறன் வாய்ந்தவர்கள் 250-ஆம் நெம்பர் நூல் கூட நூற்கிறார்கள். ஆனால் மிக நவீனமான மில்களில் கூட 150-ஆம் நெம்பர் நூல்தான் உற்பத்தி செய்ய முடிகின்றது. புதிய உத்திகளையும், முறைகளையும் உருவாக்குவதில் இடைவிடாத, விடாப்பிடியான முயற்சிகளின் காரணமாக அண்மைக் காலத்தில் கதர்த் துணி உற்பத்தியில் அற்புதமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கதர், பலர் எண்ணுவது போல மோட்டாத்துணி அல்ல. அதில் மென்மை வகைகள் உள்ளன. கதரில் எண்ணற்ற ரகங்களும் இருக்கின்றன.

காஞ்சீபுரம், ஆரணி, சேலம், ராசிபுரம், கும்பகோணம், தர்மாவரம், காசி முதலிய இடங்களில் நெய்யப்படும் பட்டுப் புடவைகள், தரத்தில் மிக உயர்ந்தவையாகவும், மற்ற பட்டுத் துணிகளைக் காட்டிலும் நீடித்து உழைப்பானவாகவும் இருப்பது யாவரும் அறிந்த உண்மை. கதர்த் துணித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்கால வர்த்தக முறையில் விளம்பரம் என்பது மிகப் பயனுள்ள சாதனம் என்றாலும், கதருக்காக மிகுதியான விளம்பரம் செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அதிக விளம்பரம் செய்தால், அதற்கான கூடுதல் செலவும், துணி வாங்குவோரைத்தான் சாரும்.

## விற்பனை பத்துக்கோடி

தமிழ் நாட்டில் 1960 வாக்கில் ஆண்டு ஒன்றுக்குக் கதர் விற்பனை சில லட்சம் ரூபாய் என்ற அளவிலேயே இருந்தது. 1972–73-ல் இது ரூ. 1,009·81 லட்சம் என்ற அளவினை அடைந்தது. பட்டுப் புடவைகள் வகையில் மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ. 8·9 லட்சம் மதிப்புள்ள பட்டுக்கள் உற்பத்தியாகின்றன. சென்னை மயிலாப்பூரில் குளிர்ச்சிச் சாதன வசதி உள்ள பட்டுப் புடவைக் கடை அமைக்கப்பட்டிருக்கிறது.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநிலம் முழுவதிலுமாக 178 கடைகள் இருக்கின்றன. குறளகக் கட்டடத்தில் அமைந்துள்ள விற்பனைப் பிரிவு இவ்வகைக் கடைகளில் இந்தியாவிலேயே மிகப் பெரியது என்று சொல்லலாம். குறளகம், கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனைக் கடையில் நாளொன்றுக்கு சுமார் ரூ. 13,000-க்கு விற்பனை ஆகின்றன.

## அரசு தரும் உதவி

ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் முக்கியமான செலவினங்கள் என்ன என்பதும் இங்கு ஆராயத் தக்கது. மனித உழைப்பு எங்கு மிக மிகுதியாகக் கிடைக்கின்றதோ அப்பகுதிகளில் இத்துணி தயாரிக்கப்படுகின்றது. துணி நெய்யும் தொழிலுக்குரிய மூலப் பொருட்கள் என்ற வகையில்—கதர்த் துணிக்குப் பஞ்சு, பட்டுப்புடவைக்குப் பட்டு நூல், கதர்க் கம்பளத்துக்கு கம்பளி நூல் ஆகியவற்றில் கதர்த் துறைக்கும், மில் துறைக்கும் வேறுபாடு கிடையாது. இவ்விரு துறைகளும் ஒரே இடத்தில்தான் மூலப் பொருட்களை வாங்குகின்றன. கதர், ஏழை, எளிய மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு உரிய திட்டம் என்பதால் மூலப் பொருட்கள் வாங்கவும் நூற்போர்—நெசவாளர் ஆகியோருக்கு ஊதியம் கொடுக்கவும் விற்பனைவசதி ஏற்பாடுகளுக்கும் வட்டியில்லாக் கடன் உதவி கிடைக்கின்றது. தவிரவும் கதர் கிராமத் தொழில் கமிஷனில் மத்திய சான்றுக் குழு, "விலை அட்டவணை" (cost chart) ஒன்றை உருவாக்கியுள்ளது.

மூலப் பொருட்களின் விலை, இடத்தின் நிலவரத்தைப் பொறுத்துக் கூலியாகத் தரும் தொகை அளவு, நிருவாகச் செலவுகளைச் சரிகட்ட சிறு அளவில் இலாபம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்படுகிறது. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லா மாநில வாரியங்களுக்கும் சான்று பெற்ற நிறுவனங்களுக்கும் இந்த அட்டவணை பொருந்தும். இந்த ஒரு அம்சத்தில் மில் துறையிலிருந்து கதர்துறை அடிப்படையிலேயே மாறுபடுகின்றது. அதிகப்பட்ச இலாபம் காண்பதுதான் மில் துறையின் குறிக்கோள், ஏனெனில் அதற்கு வட்டி இல்லாமல் பணம் கிடைப்பதில்லை. அத்துறையில் நிருவாகச் செலவுகளும் அதிகம். விளம்பரத்திற்கோ கணக்கில்லாமல் செலவிடப்படுகிறது.

## அதிக விலை அல்ல

கதர்த் துணித் தயாரிப்பில் இயந்திர ஈடுபாடு இல்லை. அதற்குப் பதிலாகக் கை உழைப்பு மிகுதி. அரசினரிடமிருந்து இந்தக் கதர்த் துறைக்குக் கிடைக்கும் வட்டியில்லாக் கடன் உதவி அந்த மிகு உழைப்புக்கு ஈடு செய்து விடுகின்றது. மற்றபடி, கதர்த் துணிக்கு அதிக விலை என்று சொல்லுவதற்குக் காரணமே இல்லை. குறிப்பாக இந்த ஆண்டில் மின்சார வெட்டு, கதர்த் துறையைப் பொறுத்த வரை மறைமுகமாக ஒரு நன்மையைச் செய்தது. மில் நூல் விலை உயர்ந்ததினால் மில் துணிகள் விலை மிக ஏறியது. ஆனால் கதர்த் துணிக்கு அப்படிப்பட்ட பிரச்சினை கிடையாது. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும் மின்சாரம் தேவையே இல்லை.

**விளம்பரம் இல்லை**

தூய, எளிய பருத்தி நூல் ஆடைகள், எளிய, கவர்ச்சிகரமான ரேடிமேடு ஆடைகள், மனங்கவரும் தூய பட்டுப் புடவைகள் இவை எல்லாம் ஏழை, எளிய மக்களுக்கு—சாமானிய மக்களுக்கு எட்டாப் பொருட்கள் என்ற எண்ணம் எப்படி வந்தது என்பது புதிராக இருக்கின்றது. விளம்பரம் இல்லாதது இதற்குரிய காரணமாக இருக்கலாம். இக்கால வர்த்தக முறையில் விளம்பரம், அவசியமானதுதான் என்பதில் ஐயமில்லை. ஆனால் கதர் விஷயத்தில் கண்கூடான உண்மையை மறந்து விடலாகாது. கதருக்காக அதிக விளம்பரம் செய்வோமானால், அத்துணியை வாங்குவோருக்குத்தான் அந்தக் கூடுதல் செலவும் வந்துசேரும். துணி விற்பனைக்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லாமலேயே இருந்து விடுகிறோம் என்பது இதற்குப் பொருள் அல்ல. ஆனால் அதே நேரத்தில் வாங்குவோரைக் கவர வேண்டும் என்பதற்காக மிகுந்த பொருட்செலவில் விளம்பரம் செய்வது கதர்த்துறைக்கு இயலாது.

**சலவைச் செலவு**

கதருக்கு அதிகச் செலவாகிறது என்று கூறி, அதற்கு மற்றொரு காரணமும் சொல்லுவோர் உண்டு. கதர்த் துணிக்கு விலை அதிகம் இல்லை. ஆனால் சலவைச் செலவுகள் முதலியனதான் அதிகமாகிறது என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் சலவைச் செலவு என்பதெல்லாம் அவரவர் காத்துக் கொள்ள விரும்பும் தூய்மையின் தரத்தைப் பொறுத்தது. உடல் ஆரோக்கியத்துக்காகத் தினசரி குளிப்பதும் தூய ஆடைகளை அணிவதும் அவசியமாகின்றது. கதர், அணிவதற்கு மிக நல்ல துணி என்பதை மறுப்பவர் யாரும் இல்லை. பட்டுப் புடவைகளும், தூய பட்டுகளைக் கொண்டு செய்யப்பட்ட மற்ற ஆடைகளும், நரம்புகளுக்கும் இதய ஓட்டத்துக்கும் மிக நன்மை செய்ய வல்லவை என்றும் நம்பப்படுகின்றது. அப்படி இருக்கும்போது கதருக்கு அதிகச் செலவாகிறது என்பது தப்பான எண்ணமே அல்லவா?

கதர்த் துணிக்கு அதிகம் செலவாவதில்லை. அது எளிய, சிறந்த ஆடையே என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்தும்.

**கதர் ரெடிமேடு ஆடைகள்.**

| | | விலை ரூ. பை. |
|---|---|---|
| வெள்ளை ஸ்லாக்குகள் | 32″ | 8·40 |
| | 36″ | 9·20 |
| கலர் ஸ்லாக்குகள் | 32″ | 9·05 |
| | 36″ | 9·90 |

**குழந்தைகளுக்கான ஆடைகள்**

| | ரூ. பை |
|---|---|
| பாபா சூட் | 6·50 |
| பெல்பாட்டம் | 12·75 |
| படுக்கை விரிப்புகள் 6′×3′ | 11·25 |
| டீ . ட்டி வகைகள் 7′×4′ | 19·80 |
| உறை போடுவதற்கான துணிகள், அலங்காரத் துணிகள் மீட்டர் விலை | 7·30 |

| பருத்தி துணிகள். | நூல் நெம்பர். | அகலம். செ.மீ. | விலை. ரூ.பை. |
|---|---|---|---|
| வெள்ளை சட்டைத் துணி | 32 | 127 | 3·60 |
| | 44 | 127 | 4·25 |
| | 75 | 127 | 5·70 |

முகில் (லோக் வஸ்திரா)—டொசுட்டி

| | | செ.மீ. | ரூ.பை. |
|---|---|---|---|
| | 2/32 | 71 | 3·00 |
| டிரில் | 2/33 | 76 | 3·71 |




சோப்பு, தேன், எண்ணெய் போன்ற கிராமத் தொழில் பொருட்களின் விலை, இவ்வகை மற்றப் பொருட்களுடன் ஒப்பிடும்போது மலிவாகவே இருக்கிறது. சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு வேலையும், வாழ்க்கை வசதியும் அளிக்க வேண்டும் என்பதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் குறிக்கோளும், திட்டமும் ஆகும். அரசு நிறுவனமான இந்த வாரியம் அரசினரின் விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பணியாற்றுகின்றது. இலாப நோக்கம் என்பதற்கு இதில் இடமே இல்லை.


# லண்டன் முரசு
## சிறு கதைப் போட்டி

லண்டனிலிருந்து வெளிவரும் 'லண்டன் முரசு' தமிழ் இதழின் மூன்றும் ஆண்டை முன்னிட்டு சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. எழுத்தாளர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

சிறுகதை முழுத்தாளில் சாதாரண எழுத்தளவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். சிறுகதைகள் அனுப்ப வேண்டிய கடைசிநாள் 30—9—73.

அனுப்ப வேண்டிய முகவரி :

"Editor, London Murasu,
8, Ashen Grove,
London, S.W. 19".

# கேளுங்கள்? கொடுக்கப்படும்



1730-ஆம் ஆண்டில் மனிதர்கள் இழுத்துச் செல்லும் தீயணைப்பு வண்டிகள் உபயோகத்திற்கு வந்தன. பின்னர் 1829-ஆம் ஆண்டில் நீராவியால் இயங்கும் தீயணைப்பு வண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. 1908-ஆம் ஆண்டில்தான் பெட்ரோலில் ஓடும் தீயணைப்பு வண்டிகள் இந்தியாவுக்கு வந்தன. கல்கத்தா தீயணைப்புப் படை 1922-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. கல்கத்தா போலீஸ் படையின் ஒரு பகுதியாக இருந்து அது இந்தியாவில் துவக்கப்பட்ட முதலாவது தீயணைப்புப் படையாகும்.

* * *

1865-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து 5 தீயணைப்பு வண்டிகள் இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றுள் மூன்று வண்டிகள் குதிரைகள் பூட்டியவை. இரண்டு வண்டிகளை மனிதர்கள்தான் இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது. 1907-ஆம் ஆண்டில் முதலாவது மோட்டார் தீயணைப்பு வண்டி பம்பாய்க்கு வந்தது. 1912-ஆம் ஆண்டில் கல்கத்தா தீயணைப்புப் படை, தன்னிடமிருந்த குதிரைப் பூட்டிய தீயணைப்பு வண்டிகளையும், ஆட்களால் இழுத்துச் செல்லப்படும் வண்டிகளையும் நீக்கிவிட்டு, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் தீயணைப்பு வண்டிகளைப் பயன்படுத்தத் துவங்கியது.

* * *

சாதாரணமாக மோட்டார் தீயணைப்பு எஞ்சினிலுள்ள தீயணைப்பு சாதனம் நிமிடத்துக்கு 1,800 லிட்டர் தண்ணீரைப் பீச்சியடிக்கும் திறன் பெற்றது.

வினா :—அரசினர் தோட்டக் கலைப் பயிற்சி நிலையம் எங்கு உள்ளது? அதில் பயிற்சி பெற என்னென்ன தகுதிகள் தேவை என்பதைத் தெரிவிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—கோ. முத்துக்குமாரசாமி,
ஓலையாம்புத்தூர்,
பட்டவிளாகம் அஞ்சல்,
சீர்காழி வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை :—தற்பொழுது தோட்டக் கலைப் பயிற்சிக்கெனத் தனி நிலையம் இல்லை. ஆனால் வேளாண்மைப் பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறும் இளம் உழவர்களுக்குத் தோட்டக் கலை பற்றிய பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இது பற்றிய முழு விவரமும் ஜூலை 1, 1973 'தமிழரசு' இதழில் பக்கம் 57-ல் கொடுக்கப் பட்டுள்ளது. சென்னையில் உள்ள வேளாண்மைத் துறையின் தோட்டக் கலைஞர் அவர்களால் தோட்டக் கலை பற்றிய குறுகிய காலப் பயிற்சியும் தேவைக்கேற்ப அவ்வப் பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபற்றிய அறிவிப்புகள் நாளேடுகளில் வெளியிடப்படுவதால், அதைத் தெரிந்து, மனுச் செய்து கொள்ளலாம்.

தோட்டக் கலை பற்றி நன்கு பயிற்சி பெற வேண்டுமானல், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பி. எஸ். சி. (தோட்டக்கலை) [B. Sc. (Horticulture)] பட்டப் படிப்பில் சேருவதே சிறந்தது. இதில் சேருவதற்குக் கல்லூரிப் புகுமுக வகுப்பில் தாவரப் பாடம் படித்து வெற்றி பெற்றிருக்க வேண்டும்.



## சுற்றுலாப் பயணிகள்



ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 1973 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அதற்கு முந்தைய ஆண்டில் இதே காலத்தோடு ஒப்பிடுகையில் 54·5 விழுக்காடு அதிகரித்துள்ளது.

## கலப்படமும் முடக்கு நோயும்

டில்லியில் விற்பனையாகும் கடலை மாவில், 80 சதவிகிதத்திற்குக் கேசரிப் பருப்புக் கலப்படம் செய்யப்படுகிறது. இந்தக் கடலை மாவைத் தொடர்ந்து உபயோகித்தால், கால்கள் முடங்கிக் கொண்டு முடக்கு நோய் வந்துவிடும்.

டில்லியிலுள்ள, விற்பனையாளர்கள், மாவு அரைக்கும் மில்கள் ஆகியவற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட 43 மாதிரிகளில், 34 மாதிரிகள் கலப்படக் கடலை மாவாக உள்ளன.



**வினா:**—நான் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் பாதிநாள் படித்து நின்று விட்டேன். இதுவரை யாதொரு வேலையும் கிடைக்கவில்லை. வேலை இல்லாமல் இருக்கும் நான் ஒரு சிறு தொழில் நடத்தலாம் என்று இருக்கின்றேன். நான் அருந்ததியார் இனத்தைச் சேர்ந்தவன். அத் தொழில் நடத்த அரசாங்கம் கடனுதவி அளிக்குமா?

—த. தங்கவேலு,
வை. மேட்டுக்காடு,
வைகுந்தம் அஞ்சல்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.



**விடை:**—தாங்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர் என்று கூறுவதால், தாங்கள் தொழில் நடத்துவதற்கு அரசாங்கக் கடன் பெற முடியும். தங்களுக்குத் தொழில் அனுபவம் இருப்பின் அதை விவரித்து உங்கள் மாவட்ட நல அலுவலர் (District Welfare Officer) அவர்களுக்கு மனு அனுப்பவும். நிதி ஒதுக்கீடு இருப்பின் அவர் உங்களுக்குக் கடன் கிடைக்க ஆவன செய்வார்.

உங்கள் பகுதியில் உள்ள பரோடா வங்கியில் (Bank of Baroda) அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவில் தாங்கள் தொழில் தொடங்குவதற்குக் கடன் பெற முடியும். நேரில் சென்று விசாரித்து அவர்கள் கூறும் முறைப்படி மனுச் செய்யவும்.




**வினா:**—'பவர் ஸ்ப்ரேயர்' பழுது பார்க்கத் தமிழில் ஏதேனும் புத்தகம் உண்டா? விலை எவ்வளவு? விலாசம் என்ன? 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' ஏட்டின் தமிழ்ப் பதிப்பு விலாசம் என்ன? ஆண்டுச் சந்தா எவ்வளவு?

—கே. கரியப்பன்,
கரியப்பன்பட்டி,
இராசிங்கபுரம்.

**விடை:**—'விசைத் தெளிப்பான்' (பவர் ஸ்ப்ரேயர்) பழுது பார்க்கும் முறை பற்றிய புத்தகம் தமிழில் இல்லை. ஆனால் விசைத் தெளிப்பானை இயக்குவது, மருந்துக் கலவையை நிரப்புவது, தெளிப்பது ஆகியவை பற்றிய விவரங்கள் அடங்கிய 'விசைத் தெளிப்பான்' என்ற பெயருடைய சிறு புத்தகத்தைத் தஞ்சாவூரில் உள்ள தீவிர சாகுபடித் திட்ட அலுவலகம் வெளியிட்டுள்ளது. இப் புத்தகத்தைத் தாங்கள் இலவசமாகவே பெற்றுக் கொள்ளலாம். பின்கண்ட முகவரிக்கு எழுதி இப்புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

"இணை வேளாண்மை இயக்குநர்,
தீவிர சாகுபடித் திட்ட அலுவலகம், தஞ்சாவூர்."

'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' ஏட்டின் தமிழ்ப் பதிப்பு ஆகஸ்ட் மாதத்துடன் நிறுத்தப்படவிருக்கிறது என்பதாக அந்த ஏடு தெரிவித்திருக்கிறது

**வினா:**—கிணறு வெட்டினால் தாராளமான ஊற்றுக்கிடைக்குமா என்பதை எப்படித் தெரிந்து கொள்ளலாம்? நீண்ட சதுரக் கிணறு, சதுரக் கிணறு, வட்டக் கிணறு இவைகளில் சுமார் 2 ஏக்கர் பாசனத்திற்கு இலாயக்கானது எது? அளவு விவரங்கள் தேவை.

—எஸ். ராமசாமி ஐயங்கார்,
ஆராசூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:**—குறிப்பிட்ட இடத்தில் கிணறு வெட்டினால் ஊற்றுக் கிடைக்குமா என்பதை நிர்ணயிக்கக் கருவிகள் உள்ளன. ஆனால் அத்தகைய கருவிகள், தற்பொழுது தனிப்பட்ட உழவர்களின் வயலில் பயன்படுத்திப் பார்ப்பதற்கு கிடைக்காது. உங்கள் வயலுக்கு அருகில் ஏதேனும் கிணறு இருப்பின், அதைப் பார்வையிடுங்கள். அந்தக் கிணறு தண்ணீர் கொடுக்கும் நிலையிலேயே, ஏறத்தாழத் தாங்கள் வெட்டவிருக்கும் கிணறும் அமையும். இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு தாங்கள் கிணறுதோண்டலாம். தனிப்பட்ட சிலர் நீர் ஊற்றுக் கண்டுபிடித்துத் தருவதாக விளம்பரங்கள் வருகின்றன. ஆனால் அவர்கள் காட்டும் இடம் வெற்றி தரும் என்று அறிவியல் அடிப்படையில் முடிவு கூற முடியாததாக இருப்பதால், அத்தகையவர்களை நாடுமாறு நாங்கள் பரிந்துரைப்பதில்லை. தாங்கள் விரும்பினால் அவர்களின் உதவியையும் நாடலாம்.

நீண்ட சதுரக் கிணறு, சதுரக் கிணறு, வட்டக் கிணறு ஆகியவை, நிலத்தின் அடியில் உள்ள தன்மையைப் பொருத்தே அமைகின்றன. நிலத்தின் கீழே மணல் இருக்குமானால் வட்டக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. நிலத்தின் கீழே பாறை அல்லது கல்லாக இருக்குமானால் சதுரக் கிணறு அல்லது நீண்ட சதுரக் கிணறு அமைக்கப்படுகின்றன. அதிகப் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டியிருந்தால் மட்டுமே பொதுவாக நீண்ட சதுரக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. மற்றபடி சாதாரணமாக, சதுரக் கிணறுகளே பெரும்பாலும் பாறை அல்லது கல் அடியில் உள்ள இடங்களில் வெட்டப்படுகின்றன. தங்கள் நிலத்தின் கீழே எப்படிப்பட்ட அமைப்பு இருக்கும் என்பதை அருகில் உள்ள கிணறுகளைப் பார்த்துத் தெரிவித்தால்தான், தாங்கள் 2 ஏக்கர் நீர்ப்பாசனம் செய்ய எந்த அளவு கிணறு வெட்டலாம் என்பதைத் தெரிவிக்க முடியும்.



வினா :—சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு எப்போது அமலுக்கு வரும் என்னும் விவரத்தைத் தெரிவிக்கவும்.

—பி. என். கஜபதி,
சிங்கப்பெருமாள்
கோவில் சன்னதித்
தெரு, காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

விடை :—'சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம்' தற்பொழுது தென்னார்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மைய அரசு நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விரிவு படுத்தும் எண்ணம் தற்போதைக்கு இல்லை. மேற்கூறிய 3 மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு—மைய அரசு நிதி உதவி செய்யுமானல்—மற்ற மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படலாம். ஆனல் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இத்திட்டம் எப்பொழுது விரிவு படுத்தப்படும் என்பதை இப்பொழுது தெரிவிக்க இயலாது.





## தீயணைக்க...

எல்லாச் சமயத்திலும் தண்ணீரை மட்டுமே பயன்படுத்தித் தீயை அணைத்து விட முடியாது. தீப்பற்றிய பொருட்களின் தன்மைக்கு ஏற்ப தீயணைப்பு முறைகளும் மாறுபடவேண்டும். மரம், துணி, காகிதம், ரெக்ஸின், ரப்பர், பிளாஸ்டிக், தோல், லினோலியம் போன்ற பொருட்கள் தீப்பற்றும்போது தண்ணீரை உபயோகிப்பது பயன் தரும். எண்ணெய், கொழுப்புப் பொருட்கள் வர்ணம், ஸ்பிரிட், கரைப்பான்கள், பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் போன்றவை சம்பந்தப்பட்ட தீ விபத்துக்களின் போது மணல் அல்லது உலர்ந்த ரசாயனத் தூளை தீயணைப்புக்குப் பயன்படுத்த வேண்டும். இத்தகைய தீ விபத்துக்களின் போது தண்ணீரைப் பயன்படுத்தினல் தீ மேலும் தீவிரமாகப் பரவும். சமையல் எரிவாயு போன்றவை தீப்பற்றிக் கொண்டால் மேற்கொண்டு எரிவாயு வெளிவராதபடி சிலிண்டரை மூட வேண்டும். தண்ணீரைப் பயன்படுத்தி குளிர்விக்க வேண்டும். தீப்பற்றிய பகுதியில் வெளிக்காற்று புகுமாறு ஏற்பாடு செய்யவேண்டும். தீயணைப்புப் படையினரையும் சிலிண்டர் விநியோகஸ்தர்களையும் உடனடியாக அழைக்கவேண்டும். எரிவாயு சம்பந்தப்பட்ட தீ விபத்துக்களின்போது தண்ணீரைப் பயன்படுத்தக்கூடாது.

வினா:—எச். பி. 3 கம்பு ரகத்தை நாற்றுவிட்டு நடலாமா? நாற்றை எத்தனை நாட்களில் பறித்து நட வேண்டும்? உர விவரமும் வயதும் கூறவும். தஞ்சை மாவட்டத்தில் கோதுமை பயிரிடலாமா? அதன் விதை எங்குக்கிடைக்கும்? நாற்றின் வயது, பிற விவரங்கள் கூறவும்.

—கே. வெங்கட்ராமன்,
11, கீழச்சன்னதித்
தெரு, திருவாரூர்,
தஞ்சை மாவட்டம்.

விடை :—எச். பி. 3 கம்பு ரகத்தை மார்ச்சு-ஏப்ரல் பருவத்தில் நாற்றுவிட்டு நடலாம். மானாவாரிக்கு நாற்றுவிட்டு நடுவது சிறந்ததல்ல. ஒரு ஏக்கர் நடுவதற்கு 1 கிலோ விதையை 4 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். நாற்று விட்ட 18 முதல் 20 நாட்களில் நாற்றைப் பறித்து நட வேண்டும். எச். பி. 3 கம்பு ரகத்தின் வயது 85 நாட்கள். எச். பி. 3 கம்பு பயிரிட ஒரு ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக கடைசி உழவில் இடவும். இந்த அளவு சத்துக் கொடுக்க ஏக்கருக்கு 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். நாற்று நட்ட ஒரு மாதத்தில் 10 கிலோ தழைச் சத்தளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

கோதுமை பயிரிடக் கூடிய காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பெருமழை இருக்குமாதலின், தஞ்சைமாவட்டத்திற்குக் கோதுமை ஏற்றதல்ல!




வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு,
தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்)
வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5
ரூ. 355
ரூ. 10
ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5
ரூ. 337.50
ரூ. 10
ரூ. 675.00
தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு




# நம்பிக்கை ஒளி தரும் வங்கியின் திட்டம்

முன்னேறும் நாட்டுக்கு இரு விழிகள் போன்றன அரசியல் விடுதலையும், பொருளாதார விடுதலையும். இரண்டில் எது இல்லையானாலும் அந்த நாடு முன்னேற முடியாது. அது மட்டுமல்ல—அந்த நாடு முடமான நாடுதான். இதனை நன்கு உணர்ந்திருந்த காரணத்தாலேயே காந்தியடிகள் இந்த நாட்டுக்கு 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் அரசியல் விடுதலை கிடைத்ததும், தொடர்ந்து இந்த நாடு பொருளாதார விடுதலை பெற்றாக வேண்டும் என்பதை வலியுறுத்திப் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களையும் — கருத்துரைகளையும் வழங்கினார். இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆகஸ்ட் 15-ம், ஜூலை 19-ம் மிக மிக முக்கியமான—குறிப்பிடத்தக்க நாட்கள். ஆகஸ்ட் 15 இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்ற நாள். ஜூலை 19 இந்தியா பொருளாதார சுதந்திரம் பெற்ற நாள். ஆம். இந்த நாட்டினுடைய 14 பெரிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் ஜூலை 19. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட 1969 ஜூலை 19-ஆம் நாள் இந்திய மக்களுக்கு—சமுதாயத்தின் சாதாரண, நடுத்தர மக்களுக்கு நம்பிக்கை ஒளியூட்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட பின்பு வங்கிகள், சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு உதவும் வகையில் துணிகரமான சில புதிய திட்டங்களை வகுத்தன. சமூக ரீதியிலும், பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் வாய்ப்பும், வசதியும் உள்ளவர்களுக்கே வங்கிகள் ஏகபோகம் என்றிருந்த நிலை மாறியது. ஈடு, பொறுப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் நியதிகள் மறைந்து, அவசியத்துக்கும் தேவைக்கும் ஏற்பக் கடன் தருவது என்ற நியதிகள் உருவாயின. நாட்டுடைமை ஆக்கப்பட்டது—என்ற ஒரே செய்கையினால் மட்டும் அனைத்தும் நிறைவு பெற்று விடுவதில்லை. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கவும் மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் வளமான வாழ்வுக்கு வகை செய்யவும் அது ஒரு வழி, வலிமையான, ஆரோக்கியமான பொருளாதாரத்துக்கும் அது துணை செய்யும்.

எந்தெந்த வகையினருக்குத் தனி நிதி உதவி வசதிகள் அளிக்கலாம்? அப்படிக் கடன் கொடுப்பதில் கையாளத்தக்க வழிமுறைகள் என்ன என்பதில் வங்கிகள் வகுத்துக் கொண்ட திட்டங்களை ஆராய, இந்திய ரிசர்வ் வங்கி 1970 அக்டோபரில் ஒரு குழு அமைத்தது. இக்குழுவின் தலைவராகச் செயல்பட்டவர், அப்போது பரோடா வங்கியின் கூட்டுப் பொது மேலாளராக இருந்த திரு வி. டி. தக்கர் ஆவார். எனவே இக்குழுவின் அறிக்கை 'தக்கர் குழு அறிக்கை' என்று சொல்லப்படுகின்றது. வேலை

வசதிகளைப் பெருக்கும் முறையில், சிறு அளவில் கடன் வசதிக்கும், தேவைக்கு ஏற்ற கடன் வசதிக்கும் வழிமுறையை வகுத்தது இந்த அறிக்கையின் சிறப்புக்கள்.

சொந்தமாகத் தொழில் செய்வோர், மற்றும் இதர தொழில் பிரிவினருக்கு உதவுவதில் வங்கிகளுக்கு ஆலோசனை கூற ஓர் அமைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று தக்கர் குழு கூறியிருக்கிறது, நாளாவட்டத்தில் இந்த அமைப்பு, கச்சாப் பொருட்கள் கிடைக்கும் நிலை, விற்பனை வசதிகள், நிருவாகம் தொழிற் சட்டங்கள், வரிகள், கணக்குப் பிரச்சினைகள் முதலியன குறித்து வழி துறைகளைக் கூறும்.

பல்பணி நிறுவனங்களை அமைப்பதில் பாங்க் ஆஃப் பரோடா முக்கிய பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் சார்பில், முதல் பல்பணி நிறுவனம் பம்பாயில் 1972 ஏப்ரல் 26-ஆம் நாள் திரு வி. டி. தக்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் வெற்றியையும் பம்பாய்ப் பகுதியில் பல்பணி நிறுவன நடவடிக்கைகளின் வளர்ச்சியையும் கண்ட பாங்க் ஆஃப் பரோடா நிருவாகிகள், நாடு முழுவதிலும், கான்பூர், அலகாபாத், சாண்டிகார், சென்னை போன்ற நகரங்களில் கிளைகளும், குழுமங்களும் அமைத்து இந்த நிறுவனப் பணியைப் பரப்பவும், விரிவாக்கவும் முடிவு செய்தனர். இதுவரை கவனிக்கப்படாமல் இருந்த தனிப்பட்டவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முக்கியமான நகரங்களில் குழுமங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் 73 பல்பணி நிறுவனக் குழுமங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் 47 குழுமங்கள் 'லெட் பாங்க் திட்டத்தின்' கீழ், பாங்க் ஆப் பரோடா பொறுப்பில் விடப்பட்ட 6 மாவட்டங்களில் அமைக்கப்படும். நான்கு தென் மாநிலங்களில் 6 குழுமங்கள் ஏற்படுத்தப்படும்.

பம்பாயிலும் மற்றும் இதர நகரங்களிலும் பல்பணி நிறுவனக் கிளைகள் அற்புதமான வளர்ச்சியையும், சாதனைகளையும் காட்டியுள்ளன.

உருவான ஈடு, பொறுப்பு வசதி கேட்காமல் சாமானிய மக்களுக்கு உதவும் முறையினால் கடன் தரும் லேவா தேவி முறையில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. கடன் பத்திரங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன. கடன் வாங்குவோர், ஈடு பொறுப்புத் தந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. பம்பாய்ப் பகுதியில் எலக்ட்ரானிக், பிளாஸ்டிக் தொழில்களுக்கு உதவுவது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தகுதி வாய்ந்த பொறியாளர்கள் சொந்தமாகத் தொழில் துவக்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான செயல் முறைப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில், சென்னை அசோகா ஹோட்டலில் பாங்க் ஆப் பரோடாவின் பல்பணி நிறுவனத் திட்டத்தைச் சிறு தொழில்கள் சங்க சம்மேளனத் தலைவர் திரு எம். எஸ். பார்த்தசாரதி துவக்கி வைத்தார். அவர் தம் துவக்க உரையில், இத்திட்டத்தின் கீழ், இயந்திரங்கள் இதர வசதிகளுக்காகக் கடன் பெறுவோர்களில் நேர்மையானவர்கள் மிகுதியும் உள்ளனர் என்றும் அத்தகையவர்களுக்குத் தேவையில்லாத தொல்லைகள் ஏற்படாமலிருக்க வங்கிகள் இன்னும் சாதகமான நேரடியான போக்குகளைக் கையாள வேண்டும் என்றும், குறிப்பிட்ட காலத்துக்குள் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் புதிய தொழில் முயற்சிகளும் இணைந்து முயற்சித்தால், 2,500 கோடி ரூபாய்க்கான திட்டங்களை வகுக்க முடியும் என்றும், 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

வங்கியின் பிராந்திய நிருவாகி திரு கே.பி. தாக்கூர் பல மாநிலங்களிலும் பல்பணி நிறுவனத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதை விவரித்தார்.

பின்னர், சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், செருப்புத் தைப்போர் முதலிய பல தொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் துவக்கக் கோரியிருந்த தொகைக்கான காசோலைகளை திரு எம். எஸ். பார்த்தசாரதி வழங்கினார்.

இந்தக் கடனுதவித் திட்டத்தின்கீழ், வக்கீல்கள் சட்டப் புத்தகங்கள் வாங்கவும், அலுவலகம் அமைக்கவும், மருத்துவர்கள் தொழில் கருவிகள் வாங்கவும், பரிசோதனைக் கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்கவும் கூடக் கடன் வழங்கப்படுகிறது.

சென்னை ஈரபாலு செட்டித் தெரு, 3-ஆம் எண்ணிலுள்ள பாங்க் ஆப் பரோடா என்னும் தனியமைப்பு எம் எஸ் ஏ. செல் இந்தப்பணியை ஏற்றுச் செய்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ்க் கடன் பெற்றவர்கள் வங்கிக்குப் போய்த் தான் தங்கள் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டுமென்பதில்லை. கடன் பெற்றுத் தொழில் புரிவோர் இருக்கும் இடங்களுக்கே சென்று தவணைகளை வசூலித்துக் கொள்வது என்பது இதுவரை இல்லாமல் இப்போது புதிதாகத் துவக்கப் பெற்றுள்ள ஏற்பாடாகும்.

இப்போது இந்தத் தவணை வசூலிப்பிற்காக 100 பேருக்கு மேல் வசூலிப்பாளர்களாக வேலையமர்த்தப் பட்டுள்ளனர். வேறெந்த வங்கியிலும் இல்லாத ஒரு முறை இது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"இதுகாறும் நடைமுறையில் இல்லாத இந்தப் புதிய ஏற்பாட்டினால் பல்பணி நிறுவனமும் பயனடைகிறது—கடன் பெற்றோரும் பயனடைகின்றனர்'' என்கின்றார்கள் நிறுவனத்தினர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின்கீழ் 2,000 பேருக்கு 20 லட்சம் ரூபாய் வரை கடன் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பெரும்பாலானவர்கள் கடன் தவணைகளைத் திருப்பிக் கட்டுவதில் மிகவும் ஒழுங்காக நடந்து கொள்கின்றனர் என்றும் நிறுவனத்தினர் பெரிதும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

கடன் வசதி உதவி பெறத் தக்கவர்கள் என்று 86 பிரிவினரைப் பல்பணி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மேலும் பல பிரிவினரை இப்பட்டியலில் சேர்க்கவும் முயன்று வருகின்றது.

நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துச் சாமான்யர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண உதவும் 'நம்பிக்கை ஒளி' யாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# உலகம் இரண்டு கிளைகள்

டி.என். சுகி சுப்பிரமணியன்

## 9 சட்டப் பிரச்னை

சிறு உதவி செய்வதை விட பெரிய உபாதை செய்வது எளிது. அன்பே, அபாயமாகப் போவதும், அபாயமே அன்பாகப் போவதும் உலகத்தில் இயற்கை.

டாக்டர் நர்மதா பிரசவ காலத்திற்குரிய விடுப்பைப் பயன் செய்யாமல், தனக்கு டாக்டர் பதவியிலிருந்து விடுதலை கேட்டு எழுதியிருந்தாள். மலையில் விளைந்த பொருளானாலும் உரலுக்குள் வந்து இடிபடவேண்டும் என்பது இயற்கையின் நியதி.

டாக்டரின், மன உளைச்சல் வக்கீல் கையில் வந்து மாட்டிக் கொள்ளும் என்று அவளுடைய மதியும் விதியும் யூகிக்கவில்லை !

செண்பகா மில்லின் அதிபர் முத்தையா தில்லிக்கு 'பெர்மிட்' விஷயமாகப் பறந்து போயிருந்தார். பணம் பண்ண வேண்டுமானால் இந்நாளில் பறக்கத் தெரிந்திருக்க வேண்டும் ; காசு குவிக்க வேண்டுமானால் சொந்தக் காரில் செல்லத் தெரிந்திருக்க வேண்டும்.

பணம் பண்ணுவதில் மட்டுமன்று. பாவம் பண்ணுவதற்கும் ஒரிஜினலிட்டி இருக்க வேண்டும்; புண்ணியம் பண்ணுவதிலும் ஒரிஜினலிட்டி இருக்க வேண்டும் ; பணம் பண்ணுவதில் முத்தையா ஒரிஜினலிட்டி உள்ளம் படைத்தவர்.

தமது நிறுவனத்தில் ஏற்றுமதி இறக்குமதி காரியமாக அவர் தில்லியை வட்டமடித்து வெற்றிவாகை சூடிக் கொண்டு அடையாற்று பங்களாவிற்குத் திரும்பியிருந்தார்.

டாக்டர் நர்மதா எழுதிய ராஜிநாமாக் கடிதம் அவர் கைக்குக் கிடைத்தது. அவர் அந்தக் கடிதத்தை 'சட்ட ஆலோசனைக்கும் தக்க நடவடிக்கையும்' என்னும் குறிப்பையெழுதி தமது வக்கீலுக்கு அனுப்பி வைத்தார்.

மலையிலே பிறந்த பொருள் —இன்று உரலுக்குள் வந்து மாட்டிக் கொண்டது.

மனைவி எழுதிய கடிதத்தைப் பார்த்த மணிவாசகன் சிரித்தான்: சிந்தித்தான்: சினங் கொண்டான்.

குழந்தையோடு புத்தம் புதிய பூவோடு கொஞ்சிக் குலவி மகிழ்ந்து கொண்டிருந்த ராதையை ஒருகணம் 'ருதய்' என்று கத்தினான். ராதை, குழந்தையுடன் அங்கு வந்தாள்.

''குழந்தையை அதன் தாயிடம் விட்டுவிட்டுவா ! நாம் சட்ட ஆலோசனை செய்ய வேண்டிய அவசியம் வந்திருக்கிறது ''

'அதன் தாயிடம்' என்ற சொல் கூரிய முள்ளாக ராதைக்குத் தைத்தது. தன் மனைவி என்று கூறாமல் அந்நியமாக்கிப் பேசிய மணிவாசகன் சுடுசொல், நெருப்புக் குழம்பாய் அவள் நெஞ்சுக்குள் ஓடிற்று. குழந்தையைக் கொண்டுபோய் 'அக்கா நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்' அத்தான் கோபமாக இருக்கிறார்!' என்றாள்.

'' இதுநாள் வரை வாடகை வீட்டில் இருந்தோம். இதனைச் சொந்த வீடாக மாற்றிவிட்ட பெருமையில் அவருக்குக் கோபம் வருவது இயல்பு ! நியாயங்களைக் , கண்டால் கண்ணை மூடிக் கொள்வது அவருக்குப் பழக்கம். அவர் வக்கீல் ! ''

'' ஊமையாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஒற்றுமை உண்டாகும் ! ''

'' கல்லிலே சிலையைக் காணலாம். இவர் தம் சொல்லிலே கொலையைக் காணலாம் ! ''

'' உங்கள் கடிதம் ஒன்று அவர் மேஜையில் இருக்கிறது அக்கா ! ''

'' என் கடிதமா ?'' நெஞ்சம் பதறினாள் நர்மதை.

மீண்டும் ஒரு கர்ஜனை 'ராதை'! மானாகத் துள்ளி, மயிலாக ஓடி மணிவாசகன் அருகாக வந்து நிற்கிறாள்.

'' ராதை ! உனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தருவதே என் பிறவிப் பயனாகப் போய்விட்டது. இந்தப் பங்களாவை நான் சொந்தமாக வாங்கியது உன் அக்காள் —டாக்டர் நர்மதை அவர்களுக்குப் பிடிக்கவில்லை! ''

'' அவள் வாயே திறக்கவில்லையே அத்தான் ! ''

'' புலி புன் முறுவல் செய்தாலும் புள்ளி மானுக்கு அபாயம் உண்டு. புலியின் புன்முறுவலுக்குப் புள்ளிமான் சிரிக்கவும் கூடாது. சீறவும் கூடாது. நீ ஒரு மக்கு. வக்கீலுக்குப் படிக்கவில்லை. உனக்கு நான் வக்கீல் வகுப்புக்கு உரிய பாடங்களைச் சொல்லி வைக்கவில்லை. இப்படி டாக்டரம்மாவான அந்தத் தியாகி நினைக்கிறாள் ! நம்மிடம் இருக்கும் பொருளின் அருமை அதனை இழந்த பிறகுதான் தெரியும் ? உன்னை படிக்க வைப்பேன் என்னும் தைரியத்தில் ஆலையின்

டாக்டர் பதவியை ஆசைப் பட்டு அவசரப்பட்டு அவள் தானாக வலிந்து ஒப்புக் கொண்டாள்! முதலாளி முத்தையாவும் கொடுத்து உதவினார். எனக்குச் சட்ட ஆலோசகன் வேலை கிடைக் காதபோது வலிந்து போய் டாக்டர் பதவியை ஒப்புக் கொண்டார்கள்''

''நீங்கள் என்ன கதா காலட்சேபம் செய்கிறீர் களா? பூர்வத்தைச் சொல்ல! பூப்போல ஒரு ராஜகுமாரன் வீட்டிற்குள் வந்திருக்கிறான். வீடெங்கும் **ஒலி, ஒளி** அமைக் கிறான். நம்மை யெல்லாம் நாடகப் பாத்திரமாக ஆட்டு விக்கிறான். அதன் பிஞ்சு விரல் களைத் தொட்டுக் கொண்டிருக்க லாம். ஆசைதீர அதன் குறுகுறு விழிகளைப் பார்த்துக் கொண் டிருக்கலாம். இதை விட்டு விட்டு அக்காவின் தொழி லைப்பற்றிய சர்ச்சையில் இறங்கி எவர் மனசையும் புண்படுத்தாதீர்கள்!''

''ராதை, நீ இந்த வீட் டின் ராஜதந்திரி. உன்னு டைய அன்புக்கயிற்றால் எங்களை யெல்லாம் கட்டிப்போட்டு நீ நினைக்கிறபடி ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாயே! கொம்பு கேட்கப் போன குதிரை குளம்பையும் இழந்ததாம் என்னும் கதை உனக்குத் தெரியுமா?''

''நீங்கள் வக்கீல். புதிர் போடுவீர்கள்!

''நீயும் வக்கீலுக்குப் படிக்க ஆரம்பித்திருக்கிறாய்! இன்னும் பத்தாண்டில் நீ வக்கீலாகப் பரீட்சை எழுதி வெற்றி பெறுவாய்!''

''இந்த மக்கு வக்கிலாக வந்து என்ன பயன்? நீங்கள் கைநிறைய சம்பாதித்தால் போதும். அக்காள் கை நிறைய சம்பாதித்தால் போதும்.... புதிதாக என்ன தகராறு உங்களுக்குள் முளைத் தது?''

வக்கீல் மணிவாசகன் மனம் சொல்ல நினைத்தது. மீண்டும் விழுங்கிக் கொண்டது. மனி தர்கள் வளர வளர வல்லவர் கள் ஆகிறார்கள்; நல்லவர் கள் ஆவதில்லை. பிறரைக் கூண்டில் ஏற்றும் வக்கீல்க ளுக்கு மனசாட்சி கிடை யாதோ அல்லது கிள்ளி எறிந்து விடுவார்களோ! தனக்கு, முத்தையா தந்த ஐம்பதினாயிரம் ரூபாயை அவன் சொல்ல விரும்ப வில்லை.

''உன் அக்கா உன்னிடம் உயிரையும் உணர்வையும் அள்ளி அள்ளிக் கொட்டி வைக்கிறாளே!''

''அது உண்மைதான். என் வாழ்க்கையில் கவனம் கண் காணிப்பு உள்ளவள் எனது அக்காள்.''

அது உண்மையாக இருந் தால், தான் ராஜினாமாக் கடிதம் எழுதியதை உன் னிடம் ஒளிக்காமல் சொன் னாளா?''

எரியீட்டி ஒன்று அவள் நெற்றிப் பொட்டில் வந்து செங்குத்தாக இறங்கியது போலிருந்தது. மின்னல் ஒன்று அவள் அறிவுக் கண் ணைப் பறித்து எடுத்துப் போவது போலத் தவித் தாள்.

''ராஜினாமா செய்துவிட் டாளா? ஏன்?''

''அதைத்தான் ஆலைமுத லாளி முத்தையா சட்ட ஆலோசகனை என்னிடம் கேட்டு அனுப்பியிருந்தார். விடுதலை கொடுக்கலாமா? இல்லை. சட்டப்படி உன் அக்காள் மீது வழக்குத் தொடுக்கலாமா என்று என் யோசனையைக் கேட்டிருக்கி றார்! எவ்வளவு பெரிய தர்ம சங்கடம். மனைவியின் ராஜி நாமா சட்டப்படி செல்லாது என்று நான் எழுதினால் டாக் டர் நர்மதா தாங்கிக் கொள் வாள். நீ ஆமாம் நீ பனி மலரைப் போல கன்னைக் கசக்குவாய். உருகி நைந்து போவாய். என்னை ராட்சசன் என்று எண்ணுவாய். எரி தழலை என் தலையில் கொட்டு வாய். உன் அன்பின் முன்னால் நான் கண்கலங்க வேண்டும். எனக்கு முதலாளியிடம் விசு வாசியாக இருப்பதா? இல்லை மனைவியிடம் சுகவாசியாகப் பெயர் பெறுவதா? நீயே தீர்ப்பைச் சொல்!''

ஆறறிவும் ஒருசேர இழந்து விட்ட சிலையாக நிற்கிறாள்.

மேசை மீது இருந்த கடி தத்தைப் படித்துப் பார்த் தாள். முத்து முத்தான எழுத் தில் 'எனக்குரிய பிரசவ விடுப்பு முடிந்ததும் தங்கள் மருந்தக வேலையிலிருந்து விடு தலை கேட்கிறேன்''.

''ஆமாம்! அக்காள் எழுதி யிருக்கிறாள்''.

''இன்றைக்குத் தான் பார்க் கும் ஆலையின் டாக்டர் வேலை யிலிருந்து விடுதலை கேட்கி றாள்! நாளைக்கு இக் குடும்பத் திலிருந்து விடுதலை கேட்பாள்! அன்புள்ள மனைவி அகத்தில் இருப்பாள்; அறிவுடைய மனைவி அலுவலகத்தில் இருப் பாள்''.

ராதை, எரித்துவிடுபவள் போன்று கண்ணை வெறிக்கப் பார்க்கிறாள். ''விவாகரத்து'' என்ற மறைமுகமான சொல் விஷத்துளிகளாக அவள் நெஞ்சுக்குள் ஈரம் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

''ராதை! பொருள்தனைத் தேடிவிட்டால் தன்னைப் புத்தி சாலி என்று இந்நாளில் எல்லா ரும் எண்ணுகிறார்கள். நானும் அப்படித்தான் எண் ணுகிறேன், உன் அக்காளும் அப்படியே எண்ணுகிறாள். இவள் கேட்டுவிட்ட ராஜி நாமா சரி என்று எழுது வதா? இல்லை, இவள் செய்தது தவறு என்று எழுதுவதா? உன் னிடம் ஒருமுறை சொல்லி விட்டு என் அபிப்பிரா யத்தை எழுதி, முதலாளிக்கு அனுப்பப் போகிறேன். நீ சிந்தனை செய்வாயோ! இல்லை நிந்தனை செய்வாயோ! முடிவு என் கையில். ஆனாலும் உனக்கும் தெரிந்திருக்கட்டும். நீ போகலாம். ராஜகுமார னின் ஒளி ஒலி அமைப்பைப் போய் ரசிக்கும்போது ராஜி நாமா நாடகத்தின் கதைக் கருவை சற்றே சிந்தனை செய். போ.''

''நான் எங்கே போவது?''

''சட்டம் படிக்கப் போவது அல்லது உன் அக்காளின் உடம்பு தேறுவதற்கான

முட்டாள்களைப் பார்த்து நமக்குத் திட்டுவதற்குத் தோன்றலாம்; ஆனால் பொறுமைப்படத் தோன் றாது; ஏனெனில் 'பொறு மைப்படுதல்' என்பதுகூட எதிரிக்கு நீ தரும் ஒரு வகைப் புகழ்ச்சியே.

— ஜான் கே.




டானிக்கைக் கொடுப்பது. உன் அக்காவின் பிஞ்சு மதலையைக் குளிப்பாட்டுவது. பவுடர் போடுவது, சொக்காய் மாற்றுவது! இத்தனையும் நீ செய்தாக வேண்டும். இதற்கிடையில் ராஜிநாமாக் கடிதத்திற்கு என் பதிலை நான் எழுதுவேன் என்பதனையும் கற்பனை செய்து பார்க்கவேண்டும்.''

''அத்தான் எனக்கு உங்கள் அன்பு, அக்காளது அன்பு இரண்டும் புரிகிறது. எனக்குக் குடும்பம் என்னவென்றும் புரிகிறது. ஆனால் இந்தக் குடும்பத்திற்கும் இதற்குள் குமிழிவிடும் சட்ட ஞானத்திற்கும் போதிய அறிவுத் திறன் இல்லை. குடும்பத்தைப் பொறுத்தவரை அறிவே சூன்யமாகப் போனவர்களால் தான் அன்பு மயமாக வாழ முடியும் என்று நினைக்கிறேன்''.

ராதையின் சொற்களில் இருந்த தத்துவம் சட்ட மூளைக்குள் சலனத்தைத் தந்தது. குடும்பம் என்பது சட்டப் புத்தகப் படிப்பு அல்ல. அதுபடிப்புக்கூட அல்ல. பண்புள்ள மனப் பயிற்சி. சிறந்த

'காஸ்பியன்' கடலுக்கு 150-க்கு மேற்பட்ட பெயர்கள் உண்டாம். உலகிலே வேறு எந்தக் கடலுக்கும் இவ்வளவு அதிகமான பெயர்கள் கிடையாது.

நாளுக்கொரு பயத்தை வெல்லாதவன்
வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன்.

—எமர்சன்.

பாரம்பரியத்திற்கான துறையை அமைக்கும் ஒரு பாதைதான் குடும்ப வாழ்க்கை. குடும்பம் நடத்தப் பொருள் கூடத் தேவையில்லை. பொறுமை மிகமிகத் தேவையென்பதை, ராதை உணர்த்தியதை ரசித்தான் மணிவாசகன். யோசனையில் ஆழ்ந்தான்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'

''எங்கள் வாழ்க்கையில் எப்போதும் புதிர் புதராக வளர்கிறது. பிரச்சினை மண்டுகிறது!''

''இருவரும் அறிவைப் பரிபூர்ணமாக நம்புகிறீர்கள். கொஞ்சம் அன்பைக் கலந்து கொள்ளுங்கள். தங்கத்தில் செம்பு கலந்த ஆபரணம் பளிச்சென்று இருக்கும். அறிவுக் கூர்மையை மட்டுப்படுத்தி, அன்புக் கூர்மையை அதிகப்படுத்துங்கள்! அதுவும் என்னைக் கோபிக்காமல் இருந்தால் என்னிடம் யோசனை கேட்டால் நன்மை விளையும் என்று எண்ணினீர்களா? தீமை விளையும் என்று எண்ணினீர்களா?'

''வெற்றியாளர்கள் பிறரிடம் யோசனை கேட்பது இல்லை. சும்மா விவரம் சொல்லி வைத்தேன். அவ்வளவே''.

எவ்வளவு தீர்க்க தரிசனமான எச்சரிக்கை! ராதை தொடர்ந்தாள்.

''அத்தான் நாம் காயமடைகிறோமா? இல்லை காயப்படுத்துகிறோமா என்று எண்ணிப் பாருங்கள். இது டாக்டர் நர்மதா வக்கீல் மணிவாசகன் இருவரைப் பொறுத்த பிரச்சினை மட்டும் இல்லை.''

''ராதை அவர்களைப் பொறுத்த பிரச்சினையா?''

''உங்கள் மகன் பாபுவைப் பொறுத்த பிரச்சினை! தந்தை மகனுக்கு ஆற்றும் உதவியை, நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. உங்கள் பாபுவுக்கு எது நன்மை தருமோ அதைச் செய்யுங்கள். உங்கள் பாபுவுக்கு எது தீமை தருமோ அதைத் தடை செய்யுங்கள்!''

வக்கீல் மணிவாசகன் எரிமலை உள்ளத்துக்குள் குடங்குடமாகத் தேனை யாரோ கொட்டுவது போல உணர்ந்தான். தன் ஆணவம், தன் அகங்காரம் இரண்டையும் அடக்கும் ஒரே மாமருந்து பாபு! குழந்தையின் குரல்! குழந்தையின் குமிண் சிரிப்பு. அவனது மாமனத்தின் பலவீனத்தை அவள் தொட்டுக் காட்டிவிட்டாள். கணவனுக்கும் மனைவிக்கும் பாலமாய்-பாசமாய் - பந்தமாய் இருக்கும் ரத்த ஓட்டத்தை அவள் துடிக்கத் துடிக்கச் சொன்னாள்.

அந்தத் துடி துடிப்பின் பெயர் பாபு!

''நான் நர்மதைக்கு நன்மை செய்வேன் என்று நினைக்கிறாயா? இல்லை தீமை செய்வேன் என்று நினைக்கிறாயா?''

இது விஷமத்தனமா? விளையாட்டுப் பேச்சா?

ராதையின் அன்பு உள்ளத்திலும் அடக்கம் நிரம்பி இருந்ததால் மந்திரச் சொல் ஒன்று துள்ளித் தெறித்தது.

''நீங்கள் எப்போதும் நன்மையைச் செய்வீர்கள். சில சந்தர்ப்பங்களில் நன்மையைச் செய்யாமல் இருந்து விடுவீர்கள்''.

அவள் தன் காது குளிரக் கேட்பது என்ன மொழி? தெய்வத் திருவாக்கா? இல்லை தங்கத்தால் கூர்மைப்படுத்திய ஊசி முனையா?

டாக்டர் நர்மதாவின் ராஜிநாமாக் கடிதத்தின் மறுபுறம் மளமளவென்று சட்ட ஆலோசகன் என்னும் முறையில் எழுத ஆரம்பித்தான் மணிவாசகன்.

## 10 பணம் தரும் பழப்பினை

**வா**ழ்க்கையை விரும்புகிறவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். வாய்மையை விரும்புகிறவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். இந்த இரண்டும் கிடைக்க வேண்டுமென்று எண்ணாத மனித இதயங்கள் இரா. நாளாக ஆக வாய்மை வேண்டாம் வாழ்க்கை போதும் என்பாரும் பலர்; வாழ்க்கையே வேண்டாம் வாய்மை போதும் என்பாரும் சிலர்—

இந்த உபதேசத்தை யார் யாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் என்பதை வாசகர்களுக்குச் சொல்லவேண்டும்.

செண்பகாமில் முதலாளி முத்தையா தமது மருமகன் ரோமியோவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்! சொல்வதற்குக் காரணம் இருந்தது.

''மாப்பிள்ளை! நீங்கள் என் மகளை மணந்தவர்கள். எனவே, என் மகனைப்போல உரிமையுடன் பேசலாம். பணத்தால் நான் பல சாதனைகளைச் செய்துவிட்டேன்; அதே சமயம் பல தவறுகளை மறைத்துவிட்டேன் என்று மணிவாசகனிடம் போய் ஒரு நாள் நீங்கள் சீறினீர்களாம். இளமையில் உங்களைப் போல எனக்கும் குறிக்கோள்கள் இருந்தன! நிரம்ப இருந்தன''.

''காலத்தால் மனிதனின் மதிப்பீடுகள் மனத்தின் மாண்புகள் மாறுகின்றன. எனவே, நீங்கள் செய்வது நியாயம் என்று வாதாடுகிறீர்கள்! அப்படித்தானே மாமா!''

''நான் வாதாடவும் இல்லை. வழக்காடவும் இல்லை. ஒன்று தெரிந்து கொண்டவன் நான்''

''பணத்தால் எதையும் சாதிக்கலாம். தீமைக்குத் திரையிடலாம்.... என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்!''

ஆர்வமும் உள்ளத்து எழுச்சியும் இல்லாமல் உயர்ந்த சாதனைகளை ஒரு போதும் அடைய முடிந்ததில்லை.

— ரால்ஃப் வால்டோ எமர்சன்

''மாப்பிள்ளை! நான் பட்டம் பெருதவன். சட்டம் படிக்காதவன். நான் அறிந்த அனுபவ உண்மையை நீங்கள் அறிய வேண்டும். பணத்தை விட, மிக முக்கியமான பண்டங்கள் எத்தனை எத்தனையோ இவ்வுலகில் இருக்கின்றன. அவ்வரிய பெரிய பண்டங்களை விலைக்கு வாங்கத்தான் பணம் சேர்க்க வேண்டியிருக்கிறது. பணக்காரனைக் குற்றவாளியாகப் பார்ப்பதும், பணம் சேர்ப்பவனை முட்டாளாக எண்ணி ஒதுக்குவதும் இன்றையச் சமுதாய அமைப்பின் மதியீனம். இச்சமயம் நீங்களும் செண்பகமும் வக்கீல் மணிவாசகன் வீட்டு விழாவுக்குத் தானே போகிறீர்கள்?''

''ஆமாம் மாமா!''

''அந்தக் குழந்தையின் பெயர் சூட்டு விழாவிற்குப் பரிசுப் பொருள் வாங்கி விட்டீர்களா?''

''வாங்கி விட்டோம்.''

''உலகத்தில் யாரை மகிழ்விக்க வேண்டுமானுலும், யாருக்கு நன்மை செய்ய வேண்டுமானுலும் வெறும் சொற்கள் என்ன பயனுமில்லை. பை நிறையப் பணம் இருப்பின் எல்லாப் பயனும் அதன் பாலுள! நான் இதனைச் சொல்வதற்கும் காரணம் இருக்கிறது.'

''என்ன காரணம்?''

''உங்களை என் ஆலையின் சட்ட ஆலோசகனுக ஆக்காமல் உங்கள் நண்பரை, பாண்டித்துரையின் மருமகனை நான் சட்ட ஆலோசகனுக ஆக்கினேன். ஏன் தெரியுமா?''

'' உங்கள் மகளுடைய மனம் கோணக்கூடாது. உங்கள் மகள் திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காக! ''

''தம் மக்களுக்காக ஒவ்வொரு தந்தையும் தன் ரத்தத் துளிகளை உழைப்புச் செல்வமாக்குகிறுன். நேற்றுப் பிறந்த குழந்தை பாபுவுக்காக மணிவாசகன் மிக அக்கறையுடன் தன்னுடைய பொறுப்பைச் செய்கிறுன். அதுபோல உங்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும். அதனை நினைவு படுத்தினேன்''

செண்பகம், பவுடர் இலங்கும் முகத்துடன் பளபளத்த உடையுடன் நறுமணம் கமழும் பூவும், ஜொலிக்கும் பொட்டுமாக வாசனைக் குன்டமாக அங்கு வந்து நின்றுள்.

''என்ன படிப்பினை நடத்துகிறீர்கள் அப்பா?''

''உன் கணவரிடம் நான் பாடம் கற்றுக் கொள்கிறேனம்மா. பள்ளிப் படிப்புக்குப் பட்டம் கொடுக்கிருர்கள். வாழ்க்கை அனுபவத்துக்குப் பட்டம் தர வேண்டாம். பாராட்டுக்கள் தந்தால் போதும். பணம் சேர்ப்பவனை முட்டாள்—கொலைகாரன் ஈவு இரக்கமில்லாத அரக்கன் என்றெல்லாம் எண்ணவேண்டாம். உன் கணவன் என்னருமை மாப்பிள்ளை, மணிவாசகனுக்குத் திருமணப் பரிசாக ஒன்று கொடுத்தார். நினைவு வருகிறதா உனக்கு?''

செண்பகம் ஒரு குழந்தை போல தந்தைக்கும் கணவனுக்கும் நடுவே அமர்ந்தாள்.

''என்ன பரிசு?''

''நான் சொல்லுகிறேன் சட்ட ஆலோசகன் பதவி நியமனத்தை அவனது திருமணப் பரிசாக நான் கொடுத்தேன்'' என்றுன் ரோமியோ.

''எவ்வாறு கொடுக்க முடிந்தது ? தியாக உள்ளம் முதற் காரணம். அதன் அடித்தளம் இடையருது உழைக்கும் என் போக்கு அடுத்த காரணம். நான் வேராகவும் நீங்கள் மலராகவும் இருப்பதற்குப் பணம் தேவை. குழந்தை 'பாபு'வை ஏற்கனவே நான் பார்த்து விட்டேன். எனக்கு இன்று வேலை இருக்கிறது. என் ஆசியைக் குழந்தைக்குச் சொல்லுங்கள். நான் பங்களூர் செல்ல வேண்டியதிருக்கிறது''

''கோவை வடிவேலு மாமா, இந்த விசேடத்திற்காக வந்திருக்கிருர். ஓட்டலில் தங்கியுள்ளார்''

''அவருக்கு இன்னும் அந்த எண்ணம் இருக்கிறது. தன் வீட்டு மருமகளாக ராதையைக் கொண்டு போகலாம் என்னும் எண்ணம்! அதனுல் அவர் வருவது நியாயம். உன் கணவர் அவரது தோழர் வீட்டுக்குப் போகிருர். நீ உன் தோழி வீட்டுக்குப் போகிருய்..........நான் அங்கு வர இயலவில்லை என்பதைத் தெரிவியுங்கள்''

> ✱
>
> முழுமையாயிராத காரணங்களைக் கொண்டு முழுமையான முடிவுகளை வகுக்கும் கலையே வாழ்க்கையாகும்.
>
> — சாமுவேல் பட்லர்

ரோமியோவிற்குத் தன் மாமன் பேசியதன் போக்கு புதுமையாக இருந்தது. புதிய சூட்டுக் கோலை முதுகில் போட்டது போலவும் இருந்தது. மாமனுரின் பணத்தை நம்பி வாழும் தன்னிடம் வெறும் குறிக்கோள் இருந்து பயனில்லை. தியாக உள்ளம் இருந்து பயனில்லை. பணம் இல்லாமல் குறிக்கோள்கள் வைத்திருப்பவன் தூசுக்குச் சமம். பணத்தோடு குறிக்கோள் வைத்திருப்பவன் இரும்புத் தூணுக்குச் சமம். இதனைப் புரிய வைத்தார் முத்தையா.

—கடைப்பிடிக்கக் கூடிய குறிக்கோள்களை மனசில் சுமந்து செல் ; நினைவில் வைத்திருக்கும் தியாகங்கள் நிழலுக்குச் சமம்! எதைக் கடைப்பிடிக்க முடியாதோ அதனை நினைவில் வைப்பது பயனற்ற காரியம்— இதனையும் சொல்லாமல் சொன்னுர் முத்தையா.

''மாப்பிள்ளை ! மணிவாசகன் குணத்தைக் கொள்ளும் படியாக உங்களுக்குச் சொல்லவில்லை. குறிக்கோள்களைக் கடைப் பிடியுங்கள். அதே சமயம் எந்தக் குறிக்கோள்களையும் நிறைவேற்றப் பணம் தேடுங்கள். பணம் தேடுபவர்களைக் கயவர்களாக எண்ண வேண்டாம். காலிகளாகத் தூற்ற வேண்டாம்''

செண்பகம் ''போதுமப்பா, உங்கள் உபதேசம்! நாங்கள் இருவரும் குழந்தை 'பாபு'வின் நாமகரணத்துக்குப் போகிறேம்'' என்றுள்.

''போகும்போது கடிதம் ஒன்று தருகிறேன்.''

''யாருக்கு?'' என்றுள் மகள்.

''டாக்டர் நர்மதா அவர்களுக்கு.''

''என்ன கடிதம்?''

''அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு என் மாப்பிள்ளை ஒரு நற்செய்தியைப் பரிசளித்தார். அவர்கள் குழந்தை பெயர் சூட்டு விழாவிற்கு நீ ஒரு பரிசைக் கொடு.''

''எத்தனை ஆயிரத்துக்குச் செக்?''

''டாக்டரம்மா பார்த்துக் கொள்ளட்டும்''

முதலாளி முத்தையா மீனம்பாக்கம் விமான நிலயத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார். செண்பகமும் ரோமியோவும், ராஜா அண்ணாமலைபுரம் நோக்கித் தங்கள் காரில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

''என்ன யோசனை செய்கிறீர்கள்? அப்பா சொன்ன சொற்களை நினைக்கிறீர்களா? அசைபோடுகிறீர்களா?''

''உன் அப்பாவின் பேச்சிலே நான் ஞானம் இருக்காது என்று நினைத்தேன். அவர் பேச்சில் ஞானம் இருக்கிறது. பணம் சம்பாதிப்பதன் நோக்கம் பணத்தைவிட உயர்ந்த பொருள்கள் உலகத்தில் இருக்கின்றன. அதனை வாங்கப் பணம் தேவை. இது எவ்வளவு பெரிய உண்மை. எவ்வளவு பெரிய ஞானம்''

''இந்தக் கடிதத்தில் என்ன இருக்கும்?'' என்று திசை திருப்புகிறாள் செண்பகம்.

''காசோலை இருக்கலாம் அல்லது வாழ்த்துச் சேதி இருக்கலாம்''

ராமகிருஷ்ணபுரம் தாண்டி வரும் வழியிலே குப்பை மேட்டிலே பன்றி ஒன்று படுத்திருந்தது. பன்றியின் குட்டிகள் பால் பருகிக் கொண்டிருந்தன. ரோமியோவின் சிந்தனைக்குள் இக்காட்சி புதிய உண்மையை ஒளிபாய்ச்சியது. பசு, எருமை, ஒட்டகம், இவற்றின் பால் மக்களுக்கும் பயன்படுகிறது. அதனதன் கன்றுகளுக்கும் பயன்படுகிறது. பன்றி, புலி, சிங்கம், யானை போன்றவற்றின் பாலோ அவற்றின் குட்டிகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. எனவேதான் மக்களுக்குப் பயன்படும் பால் சிறந்தது. மக்களுக்குப் பயன் படும் பாலைத் தரும் பசுவும் எருமையும் சிறப்புடைய பிறவி. மக்களுக்குப் பயன்படும் பணம் சிறந்தது. பன்றியின் பாலைப் போல பன்றிக் குட்டி போன்ற மக்களுக்கே பயன்படும் பணம் இழிவுடையது !

இந்த எண்ணத்தோடு, வக்கீல் மணிவாசகன் பங்களாவின் பக்கம் வந்து இறங்கினார்கள். மேளம் முழங்கியது. நாதம் பரவியது. சந்தனம் மணத்தது. எங்கும் பூக்களின் நறுமணம். இனிமை, குதூகலம் துள்ளி விளையாடின.

அதிக உறவினர்கள் இல்லாது போனாலும் நண்பர்கள் நிறைய வந்து கொண்டிருந்தார்கள்.

ராதை பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள். பன்னை எங்கும் தெளித்துக் கொண்டிருந்தாள்.

டாக்டர் நர்மதாவின் கையிலே குழந்தைக்கு வாங்கி வந்த பரிசுகளை, பட்டுச் சட்டைகளை, விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்தான் ரோமியோ.

செண்பகம் கடிதம் ஒன்றைக் கொடுத்தாள்.

''இது என்ன?''

''என் அப்பா கொடுக்கச் சொன்னார்கள்.''

''என்ன கடிதம்.''

''உங்கள் திருமணத்திற்கு என் கணவர் மிஸ்டர் ரோமியோ ஒரு பரிசு கொடுத்தார். பாபுவின் பெயர் சூட்டு விழாவிற்கு என் பரிசாக இருக்குமென்று எண்ணுகிறேன்.''

அறைக்குள் போய்ப் பரபரப்பாகக் கடிதத்தைப் பிரித்தாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் படித்தாள். குழந்தைத் தனமான பரிசு.

''டாக்டர் நர்மதை,

எங்கள் ஆலையின் டாக்டர் பதவியை வகிக்கும் தாங்கள், ஓய்வு இருக்கும் காலத்தில் தனிப்பட நர்சிங் ஹோம் நடத்த அனுமதி தருகிறேன். இதற்காக எந்த விதமான சம்பளப் பிடித்தமும் இருக்காது. உங்கள் உதவிக்கு மற்றொரு டாக்டரையும் எங்கள் மருந்தகத்திற்கு நியமனம் செய்துகொள்ளலாம். நன்றி.

எம். முத்தையா,
செண்பகா மில் உரிமையாளர்.

டாக்டர் நர்மதாவுக்குத் தன் கண்ணை நம்ப முடியவில்லை.

கண்ணெதிரே நிற்கும் கணவன் அப்படி ஒரு யோசனையை எழுதி முதலாளிக்கு அனுப்பியிருக்க முடியுமா ?

குழந்தை 'பாபு' வுக்கு எத்தனையோ பரிசுகள் வந்திருந்தன. வாழ்த்துக்கள் வந்திருந்தன. 'பாபு' வைப் பெற்ற தாய்க்கு வந்த இக்கடிதம் எல்லாவற்றுக்கும் சிகரமாக இருந்தது.

இந்தக் கடிதம் முதலாளியின் பெருந்தன்மைச் சிப்பியில் விளைந்த முத்தா ?

இந்தக் கடிதம் கணவன் கருணையில் பிறந்த அன்பு வெள்ளமா ?

ராதையின் முயற்சியால் ஏற்பட்ட முதலீட்டு இலாபமா?

திகைத்தபடி நின்றபோது 'பாபு' வின் அழுகுரல் கேட்டது. கன்றின் குரல் கேட்ட பசுவாக ஓடினாள் நர்மதா.

(வளரும்)

உடலைத் துறந்தபின் உலகோர் உள்ளங்களில் வாழும் நிலை எய்தினால் அது மரணம் அன்று.

— தாமஸ் காம்பெல்

வதந்திகள், கதைகளை வடித்துப் பகுத்ததே வரலாறு என்பதாகும்.

— தாமஸ் கார்லைல்

# இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின்

# பணிகளும் சாதனைகளும்

விவசாய உற்பத்திக் கடன் வழங்குதல், கைத்தறித் துணி உற்பத்திக் கடன் வழங்குதல் ஆகியவைகளைச் செய்துவரும் இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு மத்திய வங்கியின் உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்பினை அளித்தல், விலை யேற்றத்தைச் சமநிலைப்படுத்து தல், சீரான வினியோகம் முதலியவற்றில் பெருஞ்சாதனை யைச் செய்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள் கடன் வழங்கி லேவாதேவி செய்து வருகிறது என்ற அளவில் தோற்றம் அளித்தாலும் அந்த லேவாதேவி மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்திக்கும் கைத்தறித் துணி உற்பத்திக்கும் பெருமளவு உதவி செய்து அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெரிய அளவில் வேலை வாய்ப்பினை அளிக்கும் பணியில் மத்திய வங்கி பெரும் பங்கு வகிக்கிறது என்பதற்குக் கீழ்க் கண்ட விளக்கம் சான்றாக அமைகிறது.

1920-ஆம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் வங்கி யூனியன் என்ற பெயரில் ஆரம்பித்த நிறுவனம் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுகாக்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் சேவை செய்து பின் மதுரை, இராமநாதபுரம் கூட்டுறவு வங்கியில் லேவாதேவி பெற்று வந்த -இராமநாதபுரத்தில் இதர தாலுகாக்களையும் தனது விவகார எல்லையில் சேர்த்துக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கென்று ஒரு தனி மாவட்ட மத்திய வங்கி 28-11-1945 முதல் செயல்படத் துவங்கி 50 ஆண்டு சேவையைப்பூர்த்தி செய்து 29—10—1971-ஆம் நாள் வங்கியின் பொன் விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவில்மாண்புமிகு டாக்டர், கலைஞர், முதல்வர் மு. கருணாநிதி, மாண்புமிகு சி. பா. ஆதித்தனார், எம். ஏ., பார்-அட்-லா, (கூட்டுறவுத் துறை அமைச்சர்), மாண்புமிகு செ. மாதவன், பி. காம். பி. எல்., (தொழில் துறை அமைச்சர்) ஆகியோர் பங்கு பெற்றது மாவட்டத்திற்குத் தனிச் சிறப்பாகும்.

வங்கியின் மொத்த உறுப்பினர்கள் ஆரம்பத்தில் இருந்ததை விடப் பல மடங்கு அதிகரித்து தற்போது 1284 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழக அரசும் வங்கியில் அங்கம் பெற்று ரூ. 12·70 இலட்சம் பங்கு செலுத்தியுள்ளது. வங்கியின் செலுத்தப் பட்ட மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 94·52 இலட்சமாக உயர்ந்துள்ளது.

29 நிருவாகக் குழு உறுப்பினர்களைக்கொண்ட வங்கியின் நிருவாகம் அன்றாட அலுவலர்களைக் கவனிக்க ஏழு பேர் கொண்ட செயற்குழு ஒன்று நிறுவி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுக்குட்பட்டு நிருவகித்து வருகிறது.

போதிய நிதிகளை டிபாசிட்டுகள் மூலம் பிற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிடமிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் சேகரித்து இணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதி அளித்தலும் கிராம நாணயச் சங்கங்களின் பணிகளை மேற்பார்வை செய்யும் மேற்பார்வைக் கழகங்களுக்கு அபிவிருத்தி சம்பந்தமாக உதவுதலும், இணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் மேற்பார்வை செய்தலும் இதன் முக்கிய நோக்கமாகும்.

மத்திய வங்கியின் நிதி நிலைமை —

கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் நிதி நிலைமையை விளக்குகின்றன.

| | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 1. சொந்த நிதி— | |
| (1) பங்கு மூலதனம் | 94·52 |
| (2) காப்பு நிதி, இதர ரிசர்வு நிதிகள். | 62·31 |
| | 156·83 |
| (3) நடைமுறை மூலதனம். | 769·67 |
| (4) விவசாயக் கடன் காப்பு நிதி. | 9·91 |

மத்திய வங்கியின் முக்கியப் பணி கிராமப்புற சேமிப்புகளைத் திரட்டுவது. தலைமை அலுவலகத்தின் மூலமும் மாவட்டத்திலுள்ள வங்கியின் 28 கிளைகளின் மூலமும் சேமிப்புகளைத் திரட்டி அந்த நிதிகளைச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு துறையிலுள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கடன் வழங்கி உதவி செய்கிறது. உபரி நிதி வைத்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அறநிலைய பொது ஸ்தாபனங்கள், கோயில்கள், ஸ்தலஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகம் இன்னும் பல்வேறு பொது நிறுவனங்கள், தனி நபர்கள் தங்களுடைய உபரி நிதியை வேறு பொது வங்கியில் இட்டு வைக்கிறார்கள்.

ஏனைய வணிக வங்கிகளைப் போல் நிரந்தர இட்டு வைப்பு, ரெக்கரிங், கரண்ட், சேவிங்ஸ் முதலிய வகை இட்டு வைப்புகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கவர்ச்சிகரமாக வட்டி விகிதங்கள் அளிக்கப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் டிபாசிட் நிலை 3 மடங்காக அதிகரித்துள்ளது மட்டுமல்லாமல் தற்போது ரூ. 315·12 லட்சமாக உயர்ந்து காணப்படுகிற நிலை வங்கியின் மேல் மக்களின் வளர்ந்து

வரும் நம்பிக்கைக்கும் சான்றாகும்.

கிராம சங்கங்களின் அங்கத்தினர்கள் சங்கங்கள் மூலம் தங்களுடைய விவசாயத்திற்குத் தேவையான பயிர்க் கடன்களைக் குறுகிய காலக் கடன்களாகவும் குறிப்பிட்ட நீர்ப்பாசன வசதிக்குத்தேவையான கடன்களை மத்திய காலக் கடன்களாகவும் தங்கள் பயிர்க் கடன் தேவைக்குத் தகுந்தவாறு மத்திய வங்கியிலிருந்து பெற்றுக் கொள்கின்றனர். விவசாயிகள் பயிர்க்கடன் தேவைகள் தாங்கள்வைத்திருக்கும் நிலப் பரப்பையும் பயிர் செய்யும் வகையையும் அனுசரித்து ஆண்டுதோறும் நிர்ணயம் செய்யபடுகிறது. ஒவ்வொரு வகைப் பயிருக்கும் ஒரு ஏக்கருக்கு ஏற்படும் உத்தேசச் செலவு விவசாயக் கூலி உள்பட கணிக்கப்பட்டு அந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக ஒரு விவசாயி 4 ஏக்கர் நெல் பயிர் செய்பவராக இருந்தால் நெல் பயிருக்கு நிர்ணயிக்கப்பட்ட உத்தேச செலவு ஒரு ஏக்கருக்கு ரூ. 300 என்ற அடிப்படையில் ரூ. 1,200 அவருடைய தேவை என்று கணக்கிடப்பட்டு கடன் வழங்கப்படுகிறது. கடன் வழங்கவும், திரும்பவும் வசூலிக்கவும் பருவகாலம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் விவசாயக் கடன்கள் வழங்க குறியீடு நிர்ணயம் செய்து பல்வேறு தாலுகாக்களுக்கும் அந்த குறியீட்டைப் பகிர்ந்து குறியீட்டை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நடப்பாண்டில் (1973—74-ஆம் நிதி ஆண்டிற்கு) குறுகிய காலப் பயிர்க் கடன் ரூ. 380 இலட்சமும் மத்திய காலக் கடன்கள் ரூ.5·00 இலட்சமும் வழங்கத் திட்டமிட்டதில் ரூ. 33·93 இலட்சம் வரை குறியீடு அடைந்து எஞ்சிய அளவை நிறைவேற்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவ்வகைக் கடன்கள் வழங்குவதன் மூலம் மாவட்டத்திலுள்ள பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள், நலிவுற்ற விவசாயிகள் அனைவரும் குறைந்த வட்டியில் கடன் பெற்று தங்கள் விவசாயத் தொழிலை நடத்த வங்கி உதவி செய்வது மாவட்டத்தில் விவசாய உற்பத்தித் துறைக்கு செய்யும் சிறந்த பணியாகும்.

விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் மத்திய வங்கி பெரும் பங்கு வகித்தாலும் இணைக்கப்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு பணி மூலதனக்கடன் வழங்குவதின் மூலம் கைத்தறித் துணி உற்பத்தியைப்பெருக்குவதிலும் அதன் மூலம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் பணியிலும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு நெசவாளர் சங்கங்கள் திறம்பட அலுவலாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய வங்கி ஆண்டுதோறும் இத்துறைக்கு அதிகக் கடன்கள் வழ்ங்குவதின்மூலம் சங்கங்கள் தங்களது கைத்தறித் துணி உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளவும், அதன் மூலம் அதில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு நிரந்தரமாக கூலி பெறவும் உதவி செய்வது வங்கி மேற்கொள்ளும் சமுதாயப்பணிகளாகும். இத்துறைக்கு வங்கி செய்து வரும் பணியைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்குவதாயிருக்கின்றன.


தந்தி : ''கோடிஸ்ட்பேங்க்''

தொலைபேசி எண் வங்கி : 33447
(மூன்று லைன்)
பெருந்தலைவர் : 31304

# கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம்.எல்.ஏ., பெருந்தலைவர்.

அஞ்சல் பெட்டி எண் : 1398 — கோயமுத்தூர்-18 — பின் கோட். 641018

எங்களது வங்கியில் பிக்சட் டிபாசிட்களுக்கு கீழ்க்கண்ட விகிதப்படி வட்டி அளிக்கப்படும்.

ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் :—

15 நாட்களுக்கும் அதற்குமேல் 45 நாட்கள் முடிய 3% வருடத்திற்கு
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்கள் முடிய 3·50% வருடத்திற்கு

ரூபாய் 100-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் :—

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்களுக்கும் | 6 மாதங்களுக்குள்ளும் | 5·25% | வருடத்திற்கு |
| 6 மாதங்களுக்கும் | 12 மாதங்களுக்குள்ளும் | 5·75% | ,, |
| 12 மாதங்களுக்கும் | 24 மாதங்களுக்குள்ளும் | 6·50% | ,, |
| 24 மாதங்களுக்கும் | 60 மாதங்களுக்குள்ளும் | 7·50% | ,, |
| 60 மாதங்களுக்கும் | 72 மாதங்களுக்குள்ளும் | 7·75% | ,, |
| 72 மாதங்களுக்கு மேல் | | 8·00% | ,, |

குறிப்பு :—தர்ம ஸ்தாபனங்கள், மத ஸ்தாபனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பிக்சட் டிபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதத்திற்குமேல் ½% வட்டி சேர்த்து கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

36 மாதங்களும், அதற்கு மேலும் உள்ள பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் (கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தவிர) அரசாங்க உத்திரவாதம் உண்டு.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள் :—1—4—1972 முதல் 4½% வட்டி வழங்கப்படுகிறது.

எம. பழனிசாமி, பி.காம். எச்.டி.சி.,
செயலாளர்.

| வருடம் | வழங்கிய கடன் உதவி | துணி உற்பத்தி மதிப்பு | நெசவாளர்கள் பெற்ற ஆண்டுக் கூலி |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1968 | 110·00 | 146·00 | 44·00 |
| 1969 | 195·00 | 159·00 | 48·00 |
| 1970 | 194·00 | 183·00 | 50·00 |
| 1971 | 264·00 | 225·00 | 62·00 |
| 1972 | | 274·00 | 70·00 |

1972-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராக உள்ள நெசவாளர்கள் தறிக் கூலியாக ரூ. 70·00 இலட்சம் கூலி பெற்றிருக்கிறார்கள் என்றால், அந்த அளவுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க மத்திய வங்கி நிதி உதவி செய்துள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அது மட்டுமல்லாது மாவட்டத்தில் 68 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருவதால் மாஸ்டர் வீவர்களும் தங்களிடம் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு நியாயமான கூலி கொடுக்க வேண்டும் என்ற உணர்வை வற்புறுத்துவதுடன் ஒரு சில வட்டாரங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்கள், மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யும் அங்கத்தினர்களைக்காட்டிலும் அதிகக் கூலி பெறும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

ஆக இந்தத் துறைக்கு மத்திய வங்கி செய்யும் உதவி சமுதாயப்பணி என்று சொன்னால் அது மிகையாகாது. இம்மாதிரியான வங்கியின் சேவையைப் பணக்கணக்கில் கணித்து கொடுக்க இயலாது.

வங்கி மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குப் பணி மூலதனக் கடன் வழங்குவதின் மூலம் பண்டகசாலைகள் தங்களுடைய வியாபாரத்தை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் பண்டங்களின் விலையேற்றத்தைச் சமநிலைப் படுத்த மிகுந்த உதவியாக இருக்கிறது. தனியார் துறையினர் தாங்கள் பண்டங்களுக்கு உசிதம்போல் விலை நிர்ணயம் செய்வதை இப்பண்டகசாலைகள் தடை செய்ய உதவுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்லாது மாவட்ட அளவில் இயங்கி அவரும் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனை சங்கம் நியாயமான விலையில் பண்டங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து நியாயமான விலையில் இணைக்கப்பட்ட பண்டகசாலைகளுக்கு வினியோகம் செய்து வருகிறது. மேலும் மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம் மாவட்டத்திலுள்ள பல்வேறு வகைப் பயிர்கள் விவசாயத்திற்குத் தேவையான உரங்களை உற்பத்தி செய்து தாலுகாக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு வினியோகம் செய்வது மட்டுமல்லாமல் மாவட்டத்தில் அரசினர் உரங்களை வினியோகம் செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் அபிவிருத்தி, கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்பை அளிக்க மிகுந்த உதவி செய்கிறது.

மத்திய வங்கி, மாவட்டத்திலுள்ள பால் வழங்கும் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதின் மூலம் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் பால் மாடு வாங்க உதவி செய்து அதன் பயனாக உற்பத்தி செய்யும் பாலை, சங்கங்கள் மூலமாக விற்பனை செய்து பயன் பெறுகின்றனர். ஒரு கிராமத்தில் ஒரு பால் சங்கம் ஏறத்தாழ குறைந்தது 100 அங்கத்தினர்களுக்காவது கடன் வழங்கி ஒவ்வொரு அங்கத்தினரும் பால் விற்பதின் மூலம் மாதம் ரூ. 50 பெற உதவி செய்கிறது. பால் விற்பனை மூலம் கிராமப்புற மக்களுக்கு உப தொழில் கிடைக்கும் வாய்ப்பை அதிகரிக்க மத்திய வங்கி நிதி உதவி செய்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில் தான் மத்திய வங்கி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்கிறது.

விருதுநகர் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் பால் உற்பத்தியில் சிறந்த முன்னேற்றம் கண்டு வளர்ச்சி பெற்று ஒரு சிற்றுண்டிச் சாலையைச் சிறப்பாக நடத்தி வருகிறது. வசதி மிக்க சொந்தக் கட்டடத்தில் சிற்றுண்டிச்சாலை அமைத்து சுத்தமான சுவையான சிற்றுண்டி வழங்குவதின் பொது மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.

எங்கள் வங்கியானது ஏனைய வங்கிகளைப் போல் வாடிக்கைக்காரர்களுக்குப் பில்கள் மாற்றுதல், உண்டியல் மாற்றுதல், டிராப்டுகள் வழங்குதல் முதலி சேவைகளையும் குறைந்த கமிஷன் பெற்று வழங்கி வருகிறது.

தமிழக அரசின் புதிய திட்டப்படி வட்டாரத்திற்கொரு கிளை திறக்க வேண்டுமென்ற திட்டத்தில் தற்சமயம் மாவட்டத்தில் 28 கிளைகள் அலுவலாற்றி வருகின்றன.

> உழைப்பும் பயிற்சியும் இன்றி எழுதி வைத்தது படிப்பவர்களுக்கு உவகையளிப்பதில்லை.
>
> — டாக்டர் சாமுவேல் ஜான்சன்

கிளைகள் மூலம் அருகாமையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயக் கடன் பட்டுவாடா செய்யும் பணியையும் மேற்கொண்டு வருவதுடன் பிற வங்கிகள் அளித்துவரும் பாங்கிங் சேவைகளையும் வழங்கி வருகிறது.

வங்கியின் 20 கிளைகள் பொது மக்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் நகைக் கடன்கள் வழங்கி வருகிறது. பிற கிளைகளிலும் நகைக் கடன்கள் வழங்க ஏற்பாடு நடந்து வருகிறது.

வங்கியானது பங்கு மூலதனம், இட்டு வைப்பு, கடன் வழங்குதல் போன்ற இனங்களில் நல்ல அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாகக் கீழ்க்கண்டபுள்ளி விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

| வருடம் | பங்குத் தொகை | இட்டுவைப்புகள் | காப்பு நிதி | லாபம் | வரவேண்டிய கடன்கள் |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1966–67 | 55·61 | 145·72 | 15·25 | 5·95 | 301·59 |
| 1968–69 | 61·23 | 149·42 | 16·52 | 5·07 | 36·420 |
| 1970–71 | 73·79 | 221·93 | 21·38 | 7·11 | 482·56 |
| 1971–72 | 75·58 | 230·85 | 21·38 | 7·40 | 653·53 |
| 1972–73 | 94·52 | 315·12 | 22·87 | .. | 704·14 |

மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு விவசாய உற்பத்திப் பெருக்கம் இன்றியமையாத அடிப்படையாகும். அதைத்தொடர்ந்து விவசாயத் தொழிலுக்கு அடுத்து முக்கியத்துவம் பெறும் நெசவுத் தொழில் வளர்ச்சியும் மிக மிக முக்கியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த இருபெரும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தங்களுடைய தொழிலை திறம்பட மேற்கொள்ள நிதி வசதி தேவை என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை. ஆகவேதான் இந்த இருபெரும் தொழில்களை வளர்ச்சியடையச் செய்யும் கட்டத்தில் மத்திய வங்கியின் நிதி வசதி முக்கியத்துவம் வகிக்கிறது.

> திறமையற்றவர்கள் வாழ்வில் பொருள் வளம் என்பது இல்லை.
>
> — பெஞ்சமின் டிஸ்ரேலி

மேலும் மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு மத்திய வங்கி ஒரு மிகப்பெரிய இன்றியமையாத கருவி என்பதை அனைவரும் தங்கள் கடமையெனக் கருதி செயல்பட வேண்டுமென்பதையும் உணர்த்துவதாயிருக்கிறது.

இவ்வங்கியின் தலைவராக திரு. சுப. தங்கவேலன் அவர்களும், செயலாளராக திரு. சோ. சிவராசன்அவர்களும் சிறப்புற பணியாற்றி வருகின்றனர்.

சட்டம்– ஒழுங்கு, அமைதிக்கு உட்பட்ட சுதந்திரத்தையே நான் சுதந்திரம் எனக் கூறுவேன். கட்டுப்பாடு, உயர் பண்புகள் இவற்றுடன்தான் சுதந்திரம் இருக்க முடியும் என்பதுடன், இவையன்றிச் சுதந்திரம் இல்லை என்பதும் உறுதி.

* * * * * *

சுதந்திர நாடு ஒன்றில் அரசியல் கட்சிகள் எப்போதும் இருக்க வேண்டியது அவசியம்.

* * * * * *

அரசியலில் பெருந்தன்மை காட்டுதல் உயர்ந்த உண்மையான அறிவுப்பாடு ஆகும்; பரந்த பேரரசைக் குறுகிய உள்ளங்கள் ஆளுதல் இயலாது.

* * * * * *

ஏதோ ஒரு மாயையால் கவரப்பட்ட நிலையிலன்றி, மக்கள் தங்களது சுதந்திரத்தையும் உரிமைகளையும் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை.

* * * * * *

மக்கட் சமுதாயத்தில் இக்கணந்தோன்றி மறுகணம் மறையும் தனிப்பட்டவர்கள் வெறும் நிழல்களே; மக்கட் சமுதாயத்தின் பொதுநலனே உண்மையானதும் நிலையானதும் ஆகும்.

* * * * * *

கடந்த காலத்தில், முன்னோர்களது வாழ்க்கையில் படிப்பினைக் கற்க விரும்பாத மக்கள் வருங்கால வழித்தோன்றல்களின் நன்மையைக் கருதிப் பார்க்க மாட்டார்கள் எனலாம்.

— எட்மண்ட் பர்க்.


## * அதிசய நீர் ஊற்று நிபுணர் *

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங்கு இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கு திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிந்து கிழக்கு நோக்கியும் சென்றுகொண்டு இருக்கும் நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்து குறிக்கப்படும். நீர் ஊற்றுக்கள் உள்ள ஆழமும், அவைகளில் உள்ள தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதப்படி ரூ. 6 ஆயிரம் வரை நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—20 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K.கந்தசாமி.**

(Member of the British Society of Dowers, London).

நீர் ஊற்று நிபுணர்,

கணபதி அஞ்சல் : : கோயமுத்தூர்-6.

தொலைபேசி எண் 31912.

Advt.




# வெண்பாப் போட்டி

62

ஈற்றடி : நெஞ்சமே அஞ்சாதே நீ!

நீதிக்குப் போரிடவும் நேர்வரவும் அஞ்சும்கீழ்ச்
சாதியிலே பெண்பெறவும் தாய்மொழிக்குச் சேதமென்ருல்
துஞ்சாது மெய்க்குருதி சொட்டிடவும் என்றென்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

உள்ளத்தே தூய்மை யொருசிறிது மில்லாமல்
வெள்ளை யுளத்தர்போல் வேடமிடும்—பொல்லாத
வஞ்ச மனத்தர்களின் வாய்மிரட்டுக் கென்றென்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—நாகு, ஆறுமுகர், அரிக்காரன்வலசு.

''இந்திய நாட்டில் இருக்கின்ற மாநிலத்தில்
'செந்தமிழ் நாடு' சிறப்புடைத்தாம்,—எந்நாளும்
பஞ்சம் பசியின்றிப் பாங்குடனே வாழ்ந்திடலாம்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—ப. குப்புசாமி, திருச்சி-4.

செந்தமிழ்ச் சொல்லெடுத்துத் தேன்கவிதை பாடிடுவாய்
ஈந்தமிழர் வாழ்வுயர நாடோறும்—உந்தியெழும்
பிஞ்சுளங்கள் மேன்மைபெறப் பேசிடுவாய் வையகத்தில்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—புலவர் ப. சம்பந்தன், திருக்கோவலூர்.

சந்தக் கவியழகும், சந்தனச் சொல்லழகும்,
நந்தம் மொழியில் நனியுண்டு !—எந்தமிழை
பஞ்சமொழி தாக்கத்தான் பாயுமோ? கொஞ்சமும்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

-- ஐ. திருவருட்பாவை, பழையகிருஷ்ணபுரம்.

ஏர்த்தொழிலில் மேம்படுவோம் எந்தம் தமிழரசின்
சீர்த்த வழியே செயல்படுவோம்—ஆர்த்துவரும்
பஞ்சம் அகற்றப் பசுமைப்புரட்சி செய்வோம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ச. சுந்தரராசன், கும்பகோணம்.

இஞ்சி எலுமிச்சை ஈயும்நற் சாற்றினெடு
கொஞ்சம் நறுந்தேன் கலந்துண்டால்—எஞ்ஞான்றும்
தஞ்சம் எனப்பித்தம் தாள்பணியும் நல்மருந்தாம் !
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—மு. வரதராசன், பி.ஏ., புதுக்கோட்டை.

புன்னை மரத்தடியில் போயிருங்கள் என்றவள்ஏன்
இன்னும் வரக்காணேம்? ஏய்த்தாளோ!—கன்னியவள்
வஞ்சிக்க மாட்டாள் வருவாள் தனைத்தருவாள்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வினேதலீலன், இரா. வெள்ளோடு.

வென்ற தமிழ்முன்னே வீழ்ந்த பகையாவும்
குன்ருய் எழுந்து குவிந்தாலும்—மன்றினிலே
அஞ்சா அரிமாப்போல் ஆட்சி நிலையாக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

கத்திகொண்டு உன்றன் கழுத்தறுக்க வந்தாலும்
கத்துங் கடலில் கரைகாண—வைத்தாலும்
வஞ்சகரை எஞ்ஞான்றும் வையத் தெதிர்ப்பதற்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—இனியன், அரக்கோணம்.

நித்தம் நினைவிழந்து நிம்மதியாம் நித்திரையில்
சித்தம் தடுமாறிச் சிற்றிடையைச்—சத்தமின்றி
வஞ்சித் தணைக்க வருவார் கொடிறுடைக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—அ. இராமச்சந்திரன் அம்மனூர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :— புலவர் மா. புகழேந்தி,
ஓலைப்பாடி அஞ்சல்,
வேப்பூர் வழி,
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

''நல்லறிவுப் பெட்டகத்தின் நாயகர்கள் நம்மவர்க்குச்
சொல்லிவைத்த நற்கருத்தை மேற்கொண்டால்—தொல்லைபோம்!
வஞ்சக(ம்) மேவினும் வானமே வீழ்ந்திடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—சா. துரைராஜ், பெரியதச்சூர்.

நம்மரசின் முற்போக்குத் திட்டத்தால் நாட்டினிலே
எம்மருங்கும் பூத்துவரும் ஏற்றங்காண்,—நம்மிடையே
நஞ்சான பேதங்கள் நீக்கி நலங்குவிப்பார்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

நாட்டில் வளங்குவிக்கும் நல்லபல திட்டங்கள்
ஏட்டில் எழுதாத காவியங்கள்!—ஓட்டிடுமே
எஞ்சியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் என்பதனுல்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

துஞ்சும் புலியிடறித் துன்பம் பெறநினைக்கும்
வஞ்சகரின் வாய்ப்பேச்சு வாழ்ந்திடுமோ—மிஞ்சுகிருர்
தஞ்சமென வந்தவரும் தாக்குகிருர் என்றெண்ணி
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் சேறைநேசன், சோலூர்.

எடுத்த செயல்கள் இனிதுநிறை வெய்த
அடுத்தடுத்துத் துன்பங்கள் அண்டிக்—கெடுத்தாலும்
கொஞ்சமும் மாருது கொள்கையில் நின்றுவிட்ட
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் வி. இளங்கோவன், நாகமங்கலம்.

வெற்றி உனதே! வினையும் நலம்யாவும்!
புற்றீசல் போல்பெருகும் புல்லரிங்கேன்?—சற்றுமே
துஞ்சாமல் அன்னோரைத் தூளாக்க, என்றுமே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இராமலிங்கன், சின்னமணல்மேடு.

நல்லவனுய்ப் பேர்பெற்று நானிலத்தி லெந்நாளும்
பொல்லானுய்க் கள்ளப் பணஞ்சேர்க்கும்—சொல்லரிய
நஞ்சனையான் தீச்செயலை நாளுமே காட்டிடவே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வீ. இராமனுதன், மகிபாலன்பட்டி.

ஆழவே உள்ளூடி அன்பாகி நிற்பவரும்
தாழவே மாட்டாமல் தம்பகையை—வாழவிட்டே
வஞ்சம் புரிந்திடுவார்! மாண்பழிக்க முன்னிற்பார்!
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—ப. அ. இசுமாயில், கல்கத்தா-1.

# வெண்பாப் போட்டி

நன்றே கருதிடுக! நற்செயலே ஆற்றிடுக!
வென்ருலும் தோற்ருலும் வெற்பெனவே—நின்றிடுக!
வஞ்சனையால் எந்நாளும் வாழ்க்கை நிறையாது!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ரா. மோகன், உடுமலைப்பேட்டை.

''எதையுமே தாங்கும் இதயங்கொள்'' வாக்கை
விதையாக்கி நின்பால் விளைப்பாய்—சிதைபகைவர்
கொஞ்சமே யல்லாமல் கோடியாய்க் கூடிடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் வள்ளிவேலன், நாய்க்கனூர்.

ஏழையின் வாழ்வினிக்க ஏற்றபல திட்டங்கள்;
தாழைபோல் நாற்றமுள்ள சட்டங்கள்;—வாழைபோல்
பஞ்சமின்றி வாழ்ந்திடவே பட்டாக்கள் இன்னுமுண்டு
நெஞ்சமே யஞ்சாதே நீ!

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்.

காட்டிக் கொடுத்தாலும் கல்லால் எறிந்தாலும்
வாட்டும் கொடுமைகள் வந்தாலும்—கூட்டத்தில்
நஞ்சன்ன சொல்தொடுத்து நாவினுல் வைதாலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

தன்னுடு காக்கத் தலைபோவ தென்ருலும்
பொன்னுனை வாய்ப்பெனப் போய்வருவாய்—பின்னுளில்
எஞ்சி நிலைப்பது ஏற்றமிகு நற்புகழால்
நெஞ்சமே அஞ்சாதே நீ

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

குருத்தீந்து வாழை குற்றுயி ராக
இருள்விரட்டும் தீபம் எரிந்தே—உருகுதல்போல்
தஞ்சமென வந்தோர்க்குத் தன்னையே விற்றுதவ
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இரத்தின. மனோகரன், சென்னை-11.

புழுத்துளைக்கும் புண்ணில் நீரொழுகும் நீங்காத்
தொழுநோயின் துன்பம் துடைத்தே—குளிர்தருபோல்
தஞ்சம் கொடுத்திட்டார் தாயனைய நம்கலைஞர்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—வா. கணபதி, சலங்கம்பாளையம்.

# வெண்பாப் போட்டி

இன்ன லுருங் கெவருமில ரென்கின்ற
நன்மை பயக்குமொழி நானறிந்து—நன்னெறியில்
எஞ்ஞான்றும் நின்றே இணையில் செயல்முடிப்பேன்,
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

அச்சடிப்பு, வீக்கம், அறமல்லாச் செல்வத்தால்
உச்சவிலை ஏற்றம்! உணர், முன்னே!—இச்சமயம்
கொஞ்சுதமிழ் நாட்டரசின் கொள்கை சுயாட்சி, காண்
நெஞ்சமே! அஞ்சாதே நீ.

—மலே. மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பொன்கொழிக்கும் நன்செய்ப் புகழ்ஆரூர்ச் செல்வன் தன்
அன்பான ஆட்சி அரவணைக்கும்—எந்நாளும்
''பஞ்சம் வருமோ, பசிவருமோ?'', என்றெண்ணி
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

நேர்மை உணர்வுகளால் நெஞ்சம் நிறையட்டும்
சீர்மேவி நாடு செழிக்கட்டும்;—பார்கெடுக்கும்
வஞ்ச மனம்தன்னை வேரோடு சாய்ப்பதற்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—ந. செனர்த்தனன், அரக்கோணம்.

நாட்டிற்கு நல்லுடலை நற்போரில் ஈந்தவனின்
வீட்டில் இளமனைவி வெம்புகிறாள்—வாட்டுமவள்
பிஞ்சுள்ளம் நோகாமல், பேதைக்கு வாழ்வளிக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

ஏழை வளம்பெறலோ டேக்கம் பறந்துசெலக்
கோழை தலைநிமிரக் கொஞ்சுதமிழ்—வாழவிங்கே
அஞ்சாத நெஞ்சன் அருந்தமிழ வேளாள்வான்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க. இரத்தினம், ஆயக்காரன்புரம் (2).

''பித்தனென்பார்; பேடியென்பார்; பேராசைக் காரனென்பார்;
எத்தனென்பார்; கள்வனென்பார்; எக்கலையும்—சித்தனென்பார்;
கஞ்சனென்பார்; காய்மரத்தின் கல்லடிபோல் சொல்லடிக்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ.''

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

நஞ்சனையார் என்றும் நயந்திருந்து தான்பிரிந்தால்
வஞ்சனைகள் சூழ்ந்து வசைபொழிவார்—கொஞ்சுமெழில்
அஞ்சுகமே! என்றன் அழகுதமிழ் வாழிடமே!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் எழில்வேலன், கோபி.

''மாநிலத்தில் நம்மாட்சி மையத்தில் கூட்டாட்சி
நானிலத்தில் நன்மைசேர் நாட்டமுடன்—நீணிலத்தில்
விஞ்சுபுகழ் நம்முதல்வர் வீறுகொண்டார் வெற்றிவரும்
நெஞ்சமே அஞ்சாதே நீ''.

—சு. துரைசாமி, கரட்டூர்.

வஞ்சனை யின்றியே வாழ்ந்த நமக்கேதான்
பஞ்சமும் வந்ததென்று பாரினில்—அஞ்சியே
தஞ்சம் அடைந்தாரைத் தாங்கிடும் நம்மரசு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—எஸ். டி. சின்னசாமி, ஆலாம்பாளையம்.

மொழிகாக்கப் போரிடுதல் மாண்பன்றே! மென்மை
மொழிகூட்டி மெய்யால் முயல்க—பழிவரினும்
கஞ்சிக்கும் இன்றிக் கலக்கத்தை யெய்திடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வெ. இரா. இராசகோபாலன், ஆண்டிகுடி.

பஞ்சசீ லம்சொன்னேம், பாகிசுதான் போர்வென்றேம்,
தஞ்சம் அடைந்தவர்க்குத் தாயானேம்—வஞ்சமிலே
துஞ்சும் நிலைநீங்கின் துன்பம் விரைந்தேகும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—தாஜுபால், வல்லம்.

தாய்நாடும் தாய்மொழியும் சால்புறவே நன்றுழைக்கத்
தூய்மைசால் அன்புடனே நீதுணிந்தாய்—தீமையும்
மிஞ்சிடும் எண்ணிலாத் துன்பங்கள் உற்றுலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பன்னை. மதிவாணன், சென்னை-1.

கஞ்சிக்குப் பிள்ளைகள், கைக்குழந்தை பாலுக்கு
வஞ்சியரும் சோற்றுக்கு வாடுவதேன்?—பஞ்சமிலே
அஞ்ஞானம் நீக்கி அளவோடு பெற்றிடுக
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் மு. மணவாளன், மாங்குளூர்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்காமல் ஆள்கின்ருர் நின்றமிழர்!—ஓங்குயரும்!
பஞ்சம் பசியனைத்தும் பாழ்போகும்! வீணாக
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—சி. அரங்கசாமி, இராமேஸ்வரம்.

கஞ்சிக்கும் போக்கின்றிக் காலமெல்லாம் நொந்தகதை
பஞ்சாய்ப் பறந்த பழங்கதையாம்—பஞ்சையர்க்குத்
தஞ்சம் அளிக்கத் தமிழகத்தில் திட்டமுண்டு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க. தங்கப்பன் பி.எஸ்ஸி., பி.டி. சிங்கோறு.

# வெண்பாப் போட்டி

இல்லாமை இந்நாட்டில் இல்லா தொழிந்திடவும்
நில்லாது சாதிமதம் நீங்கிடவும்—பல்வகையில்
துஞ்சாது நம்மரசும் தொண்டிங்கே ஆற்றுவதால்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.**

சொற்றமிழால் பாடென்று சொன்ன இறைமுன்னே
நற்றமிழ் ஓதல் நலமிலவாம்—எற்றைக்கும்
பஞ்சமன் தெய்வம் பராவும் தொழில்தீதாம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—பல்லவன், திருக்கழுக்குன்றம்.**

ஆருத் தொழுநோயால் ஆதரவு யாருமின்றித்
தீராத் துயரில் திளைத்திருந்தாய்—சீரோடு
தஞ்சமென இல்லங்கள் தான்திறந்தார் நம்கலைஞர்.
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—புலவர். வே. நடராசன், ஏரகுடி.**

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேண்டுமிங் கெல்லார்க்கும்—புஞ்செய்யை
நஞ்செய்யாய் மாற்றுதல்போல் நாட்டவரை மாற்றுதற்கு
நெஞ்சமே யஞ்சாதே நீ.

**—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.**

பெற்றதாய் நாட்டுரிமை பேணிடவே வன்சிறைக்கண்
உற்றுலும் வேதனைகள் ஒன்றுகப்—பெற்றுலும்
வெஞ்சமரில் ஆவிபோய் வீழ்ந்தாலும் எற்றுக்கும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—ஜி.வி. அர்த்தநாரி, வேலூர்.**

சாதிபேதம் காட்டிச் சதிராடுஞ் சாத்திரங்கள்
பாதியில் நம்நாட்டைப் பற்றியதால்—வீதியிலும்
அஞ்சிநடப் பாரின் அடிமைத் தளையறுக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—சு.கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.**

உள்ளத் துணர்வுகளை ஊமை நிலையாக்கிப்
பள்ளியின்பம் காணுப் பருவத்—தினிதவை
துஞ்சாது மாயும் துயரைத் துடைத்தழிக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—எஸ். ஆஞ்சலாமேரி, நாச்சியாபுரம்.**

நாதியிலான்; கைக்காசு நாலுமிலான்; உன்அன்பன்
சாதியிலும் கீழ்தான் சரிசொல்ல—ஏதுமுண்டா?
நஞ்செனக்குத் தந்து நடத்துமணம் என்பாள்தாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—பு. புனிதா, ஓலைப்பாடி.**

வஞ்சனை செய்கின்றுர் வாழார்; நெருப்பினில்
பஞ்சினைப் போலவர்தான் பாரீரோ—கொஞ்சுதமிழ்
நெஞ்சுக்கு நீதி தரவல்லா ருண்டிங்கே
நெஞ்சமே அஞ்சாதே நீ!

**—ப. வெங்கடகிருஷ்ணன் எம்.ஏ.,பி.டி., நாமக்கல்.**

அன்னைத் தமிழுக்(கு) அவமானம் என்றக்கால்
உன்னுயிர் தந்தே உயர்வடைவாய்—மன்பகைவர்க் (கு)
அஞ்சியஞ்சி வாழ்வதிலும் அன்றே மடிவதுமேல்
நெஞ்சமே அஞ்சதே நீ.

**—பகவதி அப்பன், பி. எஸ்ஸி., சென்னை-5.**

அஞ்சுகமே அன்பேவென் ஆருயிரே என்றழைத்தார்
மஞ்சம் நுகர்ந்தபின் நஞ்சானேன்—கெஞ்சியும்
வஞ்சித்தார என்பின்னை வஞ்சியான் ஆகலின்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

**—ம. சலீம், காயாமொழி.**

தன்னைப் பழித்தாலும் தாழ்ந்துபோ ; தாரணியில்
உன்னை உயர்த்தும் உறுமொழிக்கோர்—இன்மைவரின்
வஞ்சம் களைந்ததன் வண்ணம் புரப்பதிலே
நெஞ்சமே அஞ்சாதே நீ!

**—வசந்தராசன், வெள்ளக்குட்டை.**

கண்ணைத் தமிழரசைக் காத்தளிக்கும் நற்கலைஞர்
மண்ணுள் திறமொப்ப மாட்டாமல்—புண்ணை
வஞ்சமனத் தீயவரின் மாயை யகன்ருெழியும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

**—தாரைவில்லவன், தாராபுரம்.**

தாய்மொழி மேன்மையுற தன்னுட்சி நாடுபெறத்
தூய்மையுடன் நம்கலைஞர் தொண்டாற்ற—வாய்மையிலார்
கொஞ்சமும் உண்மையின்றிக் கூறும் புகார்களுக்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ!

**— கோ. புகழேந்தி, புதுவை-4.**



# ஒரு நூறு பல நூறு ஆகட்டும்!



## நூறு திரைப்படங்கள்!

தமிழ்நாடு அரசு செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் தமிழ்நாடு அரசுத் திரைப் படப்பிரிவு இதுவரை நூறு செய்திப்படங்களை எடுத்து வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் மத்திய அரசு திரைப்படப் பிரிவுக்கு அடுத்த நிலையில் தமிழ்நாட்டில் தான் மாநில அளவில் சிறப்பான முறையில் திரைப்படப்பிரிவு இயங்கி வருகின்றது. இன்று மராட்டிய மாநிலம், காஷ்மீரம், மைசூர் மாநிலம் முதலிய இடங்களில் திரைப்படப் பிரிவு இருந்தாலும், தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு போன்று தொடர்சியாகச் செய்திப்படங்களை வெளியிட்டு வரவில்லை.

குமரன்.



'கண் கெட்டபிறகு' படத்தில்

தமிழ்நாடு அரசு திரைப படப்பிரிவு தொடங்கப்பட்டு முதன் முதலாக எடுக்கப்பட்ட செய்தித் தொகுப்பின் வெளியீட்டு விழா 4-5-1968 அன்று நடைபெற்றது.

இப்பொழுது கலைவாணர் அரங்கமாக மாறி, புதிய வனப்பும் புதிய உருவமும் பெற்று வரும் அந்தநாள் சிறுவர் அரங்கத்தில் தான் முதல் திரைப்படச் செய்தித் தொகுப்பின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

அப்பொழுது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகவிருந்த திரு. சி. ஏ. இராமகிருட்டிணன் ஐ.சி.எஸ். அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவருடைய வரவேற்புரையே, தமிழ்நாடு அரசின் திரைப்படப் பிரிவு அமைத்ததின் குறிக்கோளைச் சுருக்கமாக வெளியிட்டது. அவர் குறிப்பிட்டார்:—

"இந்திய அரசு செய்திப் படங்களை வெளியிட்டு வருகிறது. ஆனால், இந்திய அரசின் செய்திப்படங்களில் தமிழ் நாட்டில் நடைபெறும் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் காட்ட முடியாத நிலை இருந்தது. அதை மாற்றி மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிட நமது செய்தித் தொகுப்பு வெளியிடப்படுகின்றது."

செய்தித் தொகுப்பு வெளியீட்டு விழாவைத் தொடக்கி வைத்த மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் நமது உரையிலே குறிப்பிட்டதாவது :—

"தமிழக அரசின் செய்தித்துறை தனியான அமைப்பை ஏற்படுத்திச் 'செய்தித் தொகுப்பை' வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. உரிய முறையில் இந்த அமைப்பு செய்யும் காரியங்களால் மக்களுக்கு நன்மை ஏற்படும்.

"மத்திய அரசு செய்திக் கதிரில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள்—செய்திகள்— இரண்டு நிமிடம் கூட இடம் பெறுவதில்லை. பரந்த நிலப் பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் காட்டுவது எளிதல்ல. எனவே தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் நன்மையடையும் விதத்தில் செய்தித் தொகுப்பு அமையும். கருத்தையும் கண்ணையும் ஈர்க்கும் செய்தித் தொகுப்பால் எல்லா வகையிலும் எல்லாத் தரப்பினரும்— நிலையினரும் — காட்சிகளோடு கருத்துக்களைப் பெறும் நிலை ஏற்படும்.

"தமிழக அரசின் சாதனைகளையும் புள்ளி விவரங்களையும் தீட்டியுள்ள திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள பணிகளையும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு அறிவிக்கச் செய்தித் துறையின் இந்தச் செய்தித் தொகுப்பு நன்கு பயன்படும்.

"பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னணியில் நிற்பது போலச் செய்தித் தொகுப்புத்திரைப்படத்திலும் முன்னணியில் நிற்கவேண்டும்".

செய்தித் தொகுப்பு முதலாவது படம் திரையிடுவதைத் தொடங்கி வைத்து அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராகவிருந்த கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது .

"பல்வேறு செய்திகளைத் தொகுத்தளிக்கின்ற காரணத்தால் நாம் பெரிதென்று நினைக்கின்ற நாம் சிறப்பானதென்று கருதுகின்ற நம் மாநிலத்திற்குத்தேவையானது என எண்ணுகின்றவற்றை இந்திய அரசின் செய்திப் படப் பிரிவால் நிறைவேற்ற முடியவில்லை. அப்படிப்பட்ட குறைகளை நீக்கிட நமது செய்திக்துறைச் செய்திக்



சீரணியின் சிறப்பை விளக்கும் 'வீட்டுக்கு ஒருவர்' படத்தில்



தொகுப்புத் திரைப்படத்தை வெளியிட முன்வந்துள்ளது. தொடர்ந்து பல்வேறு படங்களைச் செய்தித் துறை தொகுக்கவிருக்கின்றது. ஒவ்வொரு பட நிலையத்திலும் செய்தித் தொகுப்பைத் தமிழக மக்களுக்குக் காட்டுவதற்கான வகை செய்யப்பட்டுள்ளது.

" செய்யப்படும் நல்ல காரியங்களை விரைவாக மக்கள் அறிந்து கொள்ளவும் அப்படிப்பட்ட நல்ல பணிகளைச் செய்வோருக்கு மக்கள் ஒத்துழைப்புத் தரவும் செய்தித் தொகுப்பு மெத்தவும் பயன்படும் "

இவ்வாறு அன்றைய விழாவில் அமைச்சர் பெருமக்கள் ஆற்றிய உரைகளை நனவாக்கிக் காட்டியுள்ளது நமது செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் திரைப்படப் பிரிவு.

இதுவரை நூறு படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தயாரிக்கப்பட்ட திரைப்படத் தொகுப்பு முதன் முதலாக மே திங்கள் 4-ஆம் நாள் வெளியிடப்பட்டது. அதுமுதல் தொடர்ந்து மாதந்தோறும் இரண்டு படங்களைத் திரைப்படப் பிரிவு வெளியிட்டு வருகிறது.

அண்ணல் காந்தியடிகள் சிலையிலிருந்து துவங்கும முதல் செய்தித் தொகுப்பு முடிவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டுப் பயணத்தின் போது விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்த மக்கள் வெள்ளத்தோடு முடிவடைந்தது. இதில் குடும்பநலத் திட்டம் பற்றிய சிறு துணுக்கும் இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு திரைப் படப்பிரிவு, அடையாற்றிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக்கல்லூரியில் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது. நமது அரசு 1971-ஆம் ஆண்டு மே திங்களில் திரைப்படச் செய்தித்தொகுப்பு மேலும் திறம்பட வெளிவரத் தனியாக இயங்கும் வகையிலே திரைப்படப் பிரிவை அமைத்தது. இப்பிரிவு செய்தித் தொகுப்பு எண் 45 முதல் இப்பொழுது வெளியிட்டுள்ள நூறுவது படம் வரை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு எடுத்துள்ள படங்களில் தமிழக மக்களால் என்றும் மறக்க முடியாத படங்கள்.

'அண்ணாவின் இறுதியாத்திரை' 'அண்ணா இருக்கின்றார்' போன்றவையாகும்.

'Anna and after' என்ற ஆங்கிலப் படத்தை உலகின் பலபாகங்களில் உள்ளவர்களும் பார்த்துப் பாராட்டியுள்ளனர்.

அரசின் சாதனைகளை விளக்கும் சில படங்களும் மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டன.

ஆசியா 72, பூம்புகார்— போன்ற படங்களும் எல்லோரையும் வெகுவாகக்கவர்ந்தன.

செய்தித் தொகுப்புப் படங்கள் தவிரத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு பல பொருள் விளக்கப் படங்களையும் தயாரித்துள்ளது.

சென்னை அரும்பொருட் காட்சியகத்தைப் பற்றி விளக்கும் 'கலலும் சொல்லாதோ கவி' என்ற திரைப் படத்தைப் பார்த்தவர் அனைவரும் பாராட்டினர். ஒளிப் பதிவு முறையிலும் இசையிலும் தேர்ந்து விளங்கிய படம் இது.

'நெடுங்கடல் மேலே' என்ற மீன் துறையைப் பற்றிய படமும், ஊர் நல ஊழியரின் பணிகளை விளக்கும் 'உதவிக்கரம்' என்ற படமும் சிறப்பாக அமைந்திருந்தன.

'தீயைத் தடுப்போம்' என்பது தீவிபத்துக்கான காரணங்களையும் தடுப்பு முறைகளையும் தீவிபத்து ஏற்பட்டால் செய்யவேண்டிய முறைகளையும் விளக்கும் படம்.

அண்ணல் காந்தியடிகள் பற்றிய 103-வது பிறந்தநாள் விழா (வண்ணப்படம்).

'உரமே உணவு' என்ற படம் விவசாயிகளுக்கு உரங்களைப் பற்றிய தெளிவான விவரங்களைத் தரும் படம்.

ஐ. ஆர்.—8, ஐ. ஆர்.—20 போன்ற நெற்பயிர்கள், கம்பு, சோளம், கரும்பு போன்ற விவசாய நுண்முறைகளை விளக்கும் படம் 'உயர் விளைச்சல் தரும் உன்னதப் பயிர்கள்'.

பயிர்ப் பாதுகாப்பு-பயிர்களை அழிக்கும் பூச்சிகளிலிருந்து பயிர்களைக் காக்கும்





வழிகளை விளக்கும் படம்.

சிறுசேமிப்பின் சிறப்புகளை விளக்கும் ' நமது கடமை என்ற படம்.

சீரணியின் தொண்டுகளையும் சாதனைகளையும் விளக்கும் ' வீட்டுக்கு ஒருவர் ' என்ற படம்

குடும்ப நலத் திட்டத்தை விளக்கும் ' வள்ளுவர் வாக்கு'

ஐ. ஆர்.—20 நெற்பயிர் வேளாண்மை பற்றி விஞ்ஞான முறையில் விளக்கும் படம் ' நெல் வேளாண்மைக்கு வழி முறைகள் ' என்ற படம்.

குடும்ப நலத்திட்டம் பற்றிய சிறிய வண்ணப்படங்களாக '' போதும் ஐயா '', ''வெற்றிகள் குவிந்தாலும் '' முதலிய படங்கள் வெளிவந்துள்ளன.

இப்பொழுது தயாரிப்பிலுள்ள பொருள் விளக்கப் படங்கள் (Documentaries) வருமாறு :

கண்கெட்ட பிறகு
வளமான வாழ்வு
வாழ்க்கை வளம் பெற
அன்னையர் இருவர்
மனம் ஒரு குரங்கு
எந்நாளும் காப்போம்
இருண்ட வீடு
பருத்தி விளைச்சல்
தெளிப்பான்களின் பணி
தொழில் வளம்
விவசாயக் கூட்டுறவு அங்காடிகள் (வண்ணப்படம்)
உயர்விளைச்சல் ,,
சிற்பக் கலை ,,
பரிசுச் சீட்டு ,,
சுற்றுலா ,,
ஆசியா 72 ,,
கைத்தறி ,,
பூம்புகார் ,,



கண்சிகிச்சை முகாமகள்- பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள் முதலியன பற்றிய வண்ணப்படம்.

இப்படி நீண்ட பட்டியல் திரைப்படப் பிரிவில் உருவாகும் படங்களை விளக்குகிறது.

நமது திரைப்படப் பிரிவின் பொருள் விளக்கப்படங்களில் திரையுலக நட்சத்திரங்கள் பலரும் பங்கேற்று நடித்து வருவது குறிப்பிடத்தக்கது !

திரைப்படப் பிரிவின் செய்திப்படங்கள் திரையரங்குகளில் திரையிடப்படுவது தவிர, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக (16 எம்.எம். படங்களாக எடுக்கப்பெற்று பட்டி தொட்டி முழுவதும் திரையிடப்படுகின்றன.

குடும்பநலத்துறை அலுவலகங்கள் மூலமாகவும் திரையிடப்பட்டு வருகின்றன.

திங்கள் தோறும் இரண்டு படங்களை வெளியிட்டு வரும் நமது திரைப்படப் பிரிவின் வருவாயும் ஆண்டுதோறும் கூடுதலாகிக் கொண்டு வருகிறது.



இந்தியாவில் உள்ள மாநில திரைப்படப் பிரிவுகளில் முதன்மை வகிக்கும் நமது மாநில திரைப்படப் பிரிவின் படங்களைப் பார்த்துப் பல மாநிலத்தவரும் பாராட்டியுள்ளனர்.

நமது திரைப்படப் பிரிவுக்காக இப்பொழுது தனியான நிருவாக அமைப்புக்கூடங்களும் திரையரங்கும் கட்டப்பட்டுள்ளன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு மேலும் வளரப் பல்வேறு வாய்ப்புகளும் உள்ளன.

எனவே, நமது திரைப்படப் பிரிவின் நூறுவது படம் பல நூறாக வளர வாய்ப்புகளுக்கு குறைவில்லை. ஆகவே நூறு பல நூறாக மலரும் காலமும் தொலைவிலில்லை.

-மாமூலன்.



## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம்-1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

**கால் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) .. .. | $3\frac{1}{4}\%$ |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) .. .. | $3\frac{1}{2}\%$ |

**சீசன் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் .. .. | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் .. .. | $4\frac{1}{2}\%$ |

**பிக்சட் டெபாசிட்டுகள் :**

ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு :

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் .. .. | $5\frac{1}{2}\%$ |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் .. .. | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் .. .. | $6\frac{3}{4}\%$ |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் .. .. | $7\frac{1}{4}\%$ |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் .. .. | $7\frac{1}{2}\%$ |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் .. .. | $7\frac{3}{4}\%$ |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் .. .. | 8 % |

நடப்பு கணக்கு $\frac{1}{2}\%$ — சேமிப்பு கணக்கு $4\frac{1}{2}\%$

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு $\frac{1}{2}\%$ கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

| | | |
|---|---|---|
| எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., | வை. இராமலிங்கம், | தி. இராஜமாணிக்கம், |
| *தலைவர்.* | *செயலாளர்.* | *நிர்வாக அலுவலர்.* |



# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரகலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்



FDSSPB. 772TMA

# மானாவாரி உளுந்து

## மகசூல் பெருகிட....

புலால் மறுத்தோர்க்குப் புரதச் சத்து அளிப்பவை பருப்பு வகைகளே! உடலுக்கு ஊட்டம் அளிக்கும் பருப்பு வகைகளில் மிகவும் முக்கியமானதாக விளங்குவது உளுந்து! தமிழ் நாட்டில் நீண்ட காலமாகவே, சிறப்பு உணவுப் பொருள்கள் பல தயாரிக்க உளுந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் உணவில் முக்கிய அங்கம் வகிக்கும் உளுந்து, ஊட்டச் சத்து மிகுந்தது. நூறு கிராம் உளுத்தம் பருப்பில் கீழ்க்கண்டுள்ளவாறு ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன;

புரதம்—24·0 கிராம்;
கொழுப்பு—1·40 கிராம்
மாவுப் பொருள் —60·30 கிராம்.
சுண்ணம்பு — 0·20 கிராம்.
பாஸ்பரஸ்— 0·37 கிராம்.
இரும்பு — 9·80 மி; கிராம்.
வைட்டமின் ஏ — 64 ஐ. யூ.
வைட்டமின் பி1 — 0·42 மி. கிராம்;
வைட்டமின் பி2 — 0·32 மி. கிராம்;
நிக்கோட்டினிக் அமிலம் — 2·00 மி. கிராம்;
சக்தி — 350 கலோரி;

மேற்கண்டுள்ளவாறு ஊட்டச் சத்துக்கள் மிகுந்துள்ளதின் காரணமாகவே உளுந்திலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் சிறப்பானவைகளாக விளங்குகின்றன.

தமிழ் நாட்டில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 1,09,970 ஏக்கரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு, 14,070 மெட்ரிக் டன் உளுந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இவ்வுற்பத்தி தமிழ் நாட்டின் உளுத்தம் பருப்புத் தேவையை ஈடு செய்யப் போதுமானதாக இல்லை. எனவே தமிழ் நாட்டின் உளுத்தம் பருப்புத் தேவையை ஈடு செய்ய வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. இதன் காரணமாகவே உளுத்தம் பருப்பின் விலை உயர்ந்து காணப்படுகிறது!

ஊட்டச் சத்து மிகுந்த உளுத்தம் பருப்பு ஏழை எளியவர்களுக்கும் குறைந்த விலையில் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமானால், தமிழ் நாட்டின் உளுந்து உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டும். தற்பொழுது பெரும்பாலான உழவர் பெருமக்கள் உளுந்து சாகுபடிக்கு இரசாயன உரம் இடுவதில்லை; பூச்சி மருந்துகள் தெளிப்பதில்லை; உற்பத்தியைப் பெருக்க உதவும் நுண்ணுயிர்களை விதைகளுடன் கலந்து விதைப்பதில்லை; அதிக மகசூல் தரும் புதிய ரகங்களை விதைப்பதில்லை. இத்தகைய நவீன சாகுபடி முறைகளை மேற்கொள்ளாததனாலேயே உளுந்து உற்பத்தி பெருகவில்லை.

தமிழ் நாட்டில் தற்போது சராசரியாக ஏக்கருக்கு 135 கிலோ (எக்டேருக்கு 334 கிலோ) அளவிலேயே உளுந்து உற்பத்தியாகி வருகிறது. ஆனால் 'கோ-1' என்ற உளுந்து ரகத்தை நவீன சாகுபடி முறைகளைப் பயன்படுத்தி மானாவாரியாகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 300 கிலோ வரை உளுந்து மகசூல் பெறமுடியும்! எனவே தமிழ் நாட்டின் தற்போதைய உளுந்து உற்பத்தியை 'கோ 1' ரக உளுந்தின் மூலம் இருமடங்காகப் பெருக்க இயலும்!

தற்பொழுது தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1 இலட்சம் ஏக்கரில் மானாவாரியாக உளுந்து பயிரிடப்பட்டு வருகிறது. இப்பரப்பு முழுவதிலும் செப்டம்பர் — அக்டோபர் மாதங்களில் 'கோ. 1' உளுந்து பயிரிடப் படுமானால் 110 நாட்களில் ஏழத்தாழ 30,000 மெட்ரிக் டன் உளுந்து உற்பத்தியாகிவிடும்! இவ்வாறு உற்பத்திப் பெருகினால் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதுடன், உளுத்தம் பருப்பின் விலையும் கணிசமாகக் குறையும். எனவே கீழே குறிப்பிட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு உளுந்து உற்பத்தியைப் பெருக்கிடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்;

### கோ. 1; உளுந்து சாகுபடி குறிப்புகள்

சிறப்பு :—மானாவாரியாகச் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சிறந்த ரகம் கோ. 1 உளுந்து. இதை எல்லா மாவட்டங்களிலும் பயிரிடலாம்.

பருவம் :—செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் விதைப்பது சிறந்தது;

வயது :—110 நாட்கள்.

விதையளவு :— ஏக்கருக்கு 8 கிலோ.

நிலம் தயாரித்தல் : —நிலத்தை நன்கு உழுது புழுதியாகச் செய்ய வேண்டும்.

அடி உரம் :— கடைசி உழவில் ஏக்கருக்கு 4 வண்டி (2 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்), 4·4 கிலோ தழைச்சத்து (22 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 10 கிலோ யூரியா), 8·8 கிலோ மணிச்சத்து (55 கிலோ சூப்பர் பாஸ்பேட்) ஆகியவைகளை இட வேண்டும்.

விதைத்தல் :— விதைகளை 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்களுடன் கலந்து விதைப்பது சிறந்தது. வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 20 சென்டி மீட்டர் (8

அங்குலம்) இடை வெளியும் இருக்குமாறு விதைகளை விதைக்க வேண்டும்.

பின் செய் நேர்த்தி :—விதைத்த 15-ஆம் நாள்களைக் கொட்டிஞல் கொத்தி விட்டுக் களை எடுக்க வேண்டும். பிறகு ஒரு மாதம் கழித்து இரண்டாம் முறையாகக் களை எடுக்கவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :— உளுந்துச் செடிகளை அசுவணி (Aphid) இலைப் புழுக்கள் (Leaf caterpillars), செடி வண்டு (Plant Bug) ஆகியவை தாக்காமலிருக்க, விதை முளைத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து — அதாவது 1 : 1 என்ற அளவில் கலந்து — ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

காய்ப்புழுக்களின் தாக்குதலைத் தடுக்க உளுந்துச் செடி பூ பூத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 முறை டி.டி.டீ. 5 சதத் தூளையோ அல்லது கார்பரில் 10 சதத் தூளையோ ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

வாடல் நோய், வேர் அழுகல்நோய், தண்டு அழுகல் நோய் ஆகியவை தோன்றிஞல், நீரில் கரையும் செரசான் 0·1 சத கரைசலைத் (1கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும்.

மகசூல்:— மேற்கூறிய முறையில் 'கோ 1', உளுந்து பயிரிட்டால், ஏக்கருக்கு 300 கிலோ உளுந்து மகசூல் பெறலாம். எனவே கோ. 1 உளுந்து பயிரிட்டு அதிக வருவாய் பெறுமாறும், உளுத்தம் பருப்பு விலையைக் குறைக்க உதவுமாறும் உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்ருேம்.

—ஆர். எம்.

## வெண்பாப் போட்டி 64

**ஈற்றடி: தெள்ளிதில் காணலாம் தேர்ந்து**

முடிவு நாள் : 1·10·73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600002.

அடுத்த இதழில்...

★ வாழும் வள்ளுவரும் — இலக்கியக் கட்டுரை
★ அண்ணலின் வாழ்விலே...!
★ புன்னகை (சிறுகதை)
★ விரைந்து முன்னேறும் வெள்ளி விழாச் சீநர்

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 10,542 ஆலயங்கள் உள்ளன. பதினென்கு மாவட்டங்களிலுள்ள இந்த ஆலயங்களில், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை 1,809 ஆகும். இது தவிர ஏராளமான சிறிய ஆலயங்களும் தஞ்சை மாவட்டத்திலுள்ளன.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை—600002.




Criterion CO 2883

பதிவு எண். M. 8676


நாம்
என்பது..
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு